

அங்கயற்கண்ணியின் அற்புதங்கள்



வானதி

வி.என்.சிதம்பரம்



அங்கயற்கண்ணியின் அற்புதங்கள்

கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு
காசிவிஸ்வநாத ஞான தேசிகஸ்வாமிகளு
வணக்கத்துடன்
வி.என்.சிதம்பரம்
25.9.92.

வி. என். சிதம்பரம்
முன்னாள் தக்கார்
அருள்மிகு மீனாட்சி-
சுந்தரேசுவரர் திருக்கோவில்,
மதுரை

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை-17.

முதற்பதிப்பு : செப்டம்பர், 1984
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர், 1985
மூன்றாம் பதிப்பு : செப்டம்பர், 1988

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 12-00

அச்சிட்டோர் :
ஸ்ரீ கோமதி அச்சகம்
41, சூரப்ப முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை—5
போன் : 844554

3-4

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம்

முகாம் : காஞ்சீபுரம் தேதி : 20-7-1984

ஸ்ரீமுகம்

வானதி பதிப்பகம், தெய்வபக்தி, குருபக்தி, தேசபக்தி முதலிய பக்திகளை வளர்க்கக்கூடிய தார்மிக பல நூல்களை வெளியிட்டு மக்களுக்கு பேருபகாரம் செய்து வருவதையும் இப்பொழுது மதுரை மீனாக்ஷி அம்பாள் ஆலய தக்கார் திரு.வி. என். சிதம்பரம் எழுதிய, ''அங்கயற்கண்ணியின் அற்புதங்கள்'' என்னும் நூலை வெளியிட இருப் பதையும் அறிந்து மஹாஸன்னிதானம் ஸந்தோ ஷிக்கிறார்கள்.

அன்னை பராசக்தி வடக்கே காசியில் விசாலாக்ஷியாகவும், தெற்கே மதுரையில் மீனாக்ஷி யாகவும், நடுநாயகமாக காஞ்சியில் காமாக்ஷி யாகவும் காட்சியளித்துக்கொண்டு லோகம் பூராவையும் அருள்பாலித்து அனுக்ரஹித்து வருகிறாள். 63 நாயன்மார்களுக்கு ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்64 திருவிளையாடல்களை நிகழ்த்திக் காட்டிய பெருமைகளை விளக்கிக்கூறும் ஆலாஸ்ய புராணம், ராமாயணம், பாரதம் போல் கொண் டாடத் தகுந்த முறையில் போற்றப்பட்டு விளங்கு

கிறது. அத்தகைய பெருமை வாய்ந்த மதுரை மாநகரில் அமைந்துள்ள ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயங்களின் அரிய பெரிய பெருமைகளையும் ஆயிரம்கால் மண்டபம், கோபுரங்கள், புது மண்டபம், தீர்த்தங்கள், கலைகளின் பெருமைகள் முதலிய பல விஷயங்களை விளக்கமாகக் கூறும் ''அங்கயற்கண்ணியின் அற்புதங்கள்'' என்னும் இந்நூல் மக்களுக்கு தெய்வ பக்தியையும், வரலாற்றுச் சிறப்பையும் கலையின் ஆர்வங்களையும் வளர்க்க நன்கு பயன்படும் வகையில் அமைந்துள்ளது. மேலும் இம் மாதிரியான பல புத்தகங்களை வெளியிட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்துகொண்டு வானதி பதிப்பகம் விளங்கட்டும் என்று மஹா ஸன்னிதானம் ஆசீர்வதித்து அனுக்கிரஹித்த விவரம் தெரிவிக்கலான காரியம்.

நாராயண ஸ்மிருதி

அணிந்துரை

மதுரை துவதசாந்தத் திருத்தலம். இறைவன் வேதங்களும் காணாத பாதங்கள் நிலத்தில் பதிய 64 திருவிளையாடல்கள் புரிந்த அருமை பெருமை நிறைந்த புனிதத் தலம்.

64 சக்தி பீடங்களில் உயர்ந்தது சியாமளா பீடம். அம்மை செங்கோல் தாங்கி அரசு புரிந்த் புண்ணிய பூமி.

இத்தகு வித்தகமுடைய மதுரை மாநகரத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்து

''அங்கயற்கண்ணியின் அற்புதங்கள்''

என்ற ஒருநூலை நமக்குத் தருகின்றார். அவர்யார்? அவர் சிறந்த பண்புடையவர். பக்தமாமணி திரு. வி. என். சிதம்பரம் அவர்கள் மீனாட்சியம்மன் கோயிலின் தக்காராக இருந்து நற்பணி பல புரிகின்றார். இவருடைய திருத்தொண்டு பாராட்டுதற்குரியது. இவருடைய எழுத்தோவியமாக இந்நூல் மலர்கின்றது.

மதுரைபற்றிய பலப்பல குறிப்புகளை ஆராய்ந்து விளக்கமாக எழுதியுள்ளார். படிக்கப் படிக்க இனிக்கின்றது.

பல நுண்ணிய கருத்துக்களை அன்பர் சிதம்பரம் அரிதின் ஆராய்ந்து விளக்கியிருக்கின்றார்.

மதுரை பற்றி அறிய விரும்புகின்றோர்க்கு இந்த நூல் கருத்துச் சுரங்கமாக உதவும்.

நகரத்தார் மரபில் வந்த திரு. நாகப்பையா அவர்கட்கு அன்னை மீனாட்சி நள்ளிரவில் உணவு தந்த பகுதியைப் படிக்கும் போது கண், குளமாகின்றது. உருக்கமாக இருக்கின்றது.

இதனைப் படிப்போர்க்குப் பரவசம் ஏற்படுகின்றது. அன்பு ஊற்றெடுக்கின்றது.

மதுரை மாநகரின் சிறப்புகள் அடங்கிய இந்த நூலை ஏனோரும் படித்து இன்புறுவார்கள்.

வானதி பதிப்பகம் அன்பர் திருநாவுக்கரசு அவர்கள் அழகாக அச்சிட்டு உதவியுள்ளார்.

நேரிசை வெண்பா

அங்கயற் கண்ணியின் அற்புதங்கள் என்னும் நூல்
மங்களமாய்ச் செய்து மகிழ்ந்தளித்தான்—துங்கமிகும்
ஈயென் றுரையாமல் ஈந்துவக்கும் ஏந்தலாக
வி. என். சிதம்பர வேள்.

அன்பன்

கிருபானந்தவாரி

திரு.கு. ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப.,
ஆணையாளர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600 034.
28-7-1984

முன்னுரை

மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலின் 'தக்கார்' திரு. வி என். சிதம்பரம் அவர்கள்எழுதிய ''அங்கயற்கண்ணியின் அற்புதங்கள்'' என்னும் பயன்மிக்க சிறந்த இனிய நல்ல நூலைப் படித்துப் பெரிதும் மகிழ்ந்தேன்.

இந்நூலின்கண், மதுரைத் திருக்கோயிலின் தனிச் சிறப்புகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின்கண் உள்ள அஷ்டசக்தி மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்டபம், முதலி மண்டபம், கிளிக்கட்டு மண்டபம், ஊஞ்சல் மண்டபம், சங்கிலி மண்டம், பலிபீடம், ஆறுகால் பீடம், கம்பத்தடி மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், பொற்றாமரைக்குளம் பற்றிய செய்திகள் தொகுத்துத் தரப்பெற்றிருப்பது, நூலுக்குச் சுவை ஊட்டுகின்றது.

கோயிலின் பல்வேறு திருச்சுற்றுகள், அங்குள்ள சந்நிதிகள், தளவாய் அரியநாத முதலியார் அமைத்த ஆயிரக்கால் மண்டபத்தின் சிறப்புக்கள், மாலிக்காபூர் படையெடுப்பு, குமாரகம்பண்ணன் மதுரையை மீட்டல், திருமலை நாயக்கரின் உடற்பிணி அகன்றமை, குருஞான சம்பந்தருக்குப்

பொற்றாமரைக் குளத்தில் சிவலிங்கம் கிடைத்தமை, குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் முதலிய நூல்கள் இயற்றியமை, ரூஸ்பீட்டர் துரையின் அன்பின் திறம், வயிநாகரம் குடும்பத்தினரின் திருப்பணித்திறம், மதுரைக் கோயிலின் பன்னிரண்டு கோபுரங்களைப்பற்றிய விரிவான தகவல்கள் படிப்பவர்களுக்குப் பெரிதும் சுவை பயக்கும்.

பாண்டிய வேந்தர்—வாணாதி ராயர்—நாயக்க மன்னர்கள்—மற்றும் பல்வேறு சைவ வள்ளல்கள் ஆகியோர் செய்த திருப்பணி விவரங்களும், அவர்கள் வாழ்ந்த காலங்களும், வரலாற்று முறையில் தந்திருப்பது, இந்நூலின் சிறப்பினை மிகுதிப்படுத்துகின்றது. மேலும், இக்கோயிலில் நிகழும் பல்வேறு பூசைகள், விழாக்கள் முதலியன பற்றிய விரிவான தகவல்களைத் தந்திருப்பது, பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

அங்கயற்கண்ணி (மதுரை மீனாட்சியம்மை) யின் அருள் அற்புதங்களை விளக்கும் இந்நூல், எளிய இனிய தெளிவான நல்ல செந்தமிழ்நடையில் அழகுற இயற்றப்பட்டுள்ளது. பயன்மிக்க செய்திக் களஞ்சியமாக அமைந்துள்ள இந்த நல்ல நூலை எழுதி உதவிய திரு. வி. என். சிதம்பரம் அவர்களுக்கும், இதனை வெளியிடுகின்ற வானதி பதிப்பகத்தினருக்கும், என்னுடைய மனம் நிறைந்த அன்புமிக்க பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன். இந்நூலை வாங்கிப் படித்து, அன்பர்கள் அனைவரும் பயன்கொள்வார்கள் ஆக!

கு. ஆளுடையபிள்ளை
ஆணையாளர்

28-7-84

ஆசிரியர் முன்னுரை

எனது பாட்டனார் வள்ளியப்ப செட்டியாரவர்கள் 50 ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் பிறந்த மண்ணான புதுக்கோட்டை மாவட்டம் ராங்கியம் என்ற சிற்றூரில் ராஜகோபுரம் அமைத்து ஒரு பிள்ளையார் கோவிலைக் கட்டி சிதம்பர விநாயகர் என்று பெயரிட்டதோடு கோவிலைச் சுற்றி எங்கள் இல்லங்களை அமைத்தார்கள். எங்கள் குடும்பத்தில் எல்லோர் வீட்டிலும் சிதம்பரம் என்று பெயரும் வைத்தார்கள். சிறுவயதிலேயே காலையில் குளித்து பிள்ளையாரை வணங்கி வரும் பழக்கத்தை, இறை வழிபாட்டை எங்கள் ரத்தத்தில் ஊட்டினார்கள். 19 வயதில் நான் மலேசியாவிலிருந்தபோது நண்பர்களோடு நீச்சல் குளத்திற்குக் குளிக்கச் சென்றேன். எனக்கு நீச்சல் தெரியாது. விளையாட்டாக ஆழமான இடத்தில் குதித்துவிட்டேன். இன்று இறப்பது உறுதி என்ற நிலையில் எங்கள் இஷ்ட தெய்வமான சிதம்பர விநாயகரை மனத்தில்

நினைக்கத் தொடங்கினேன். அப்பொழுது ஒரு சீனர், கார் டியூபை வைத்துக்கொண்டு நீச்சல்பழகியவர், என் அருகே வர, எனது கைகள் அந்த ரப்பர் டியூபிற்குள் மாட்டிக்கொள்ள, விநாயகர் அருளால் கரை சேர்க்கப் பெற்றேன். இறை நம்பிக்கை அதிகமாயிற்று. 21 வயதில் மலேசியாவில் காய்ச்சல், வயிற்றுப் போக்கினால், அவதிப்பட்ட என்னை மருத்துவர்கள் பரிசோதித்து காலரா என்று தீர்மானித்து தனி வார்டுக்குக் கொண்டுபோய் யாரும் என் அருகில் வரக்கூடாது என்று தடை விதித்துவிட்டு, ஊரைக் காப்பாற்ற ஊரெங்கும் காலரா தடுப்பு ஊசி போட ஆரம்பித்து விட்டார்கள். காலரா என்றால் அந்த நாட்டில் அவ்வளவு பயம். நினைவு வந்தபோதெல்லாம் கணேசரை நினைத்தேன். இறையருளால் ஒரு ஆங்கிலேய டாக்டர் என்னைப் பரிசோதித்து டைபாய்டு என்று கண்டுபிடித்து உயிர் பிழைத்து வந்தேன். 28 வயதில் மலேசியாவிலிருந்து இந்தியாவிற்கு விமானத்தில் வந்து கொண்டிருந்தபோது ஒரு இன்ஜின் பழுதாகி மீண்டும் மலேசியாவிற்குத் திரும்பினோம், பிளேன் தரையில் இறங்கும்வரை அவரவர் இஷ்டதெய்வங்களை நினைத்து பிரார்த்தனை செய்தோம். பலன், மீண்டும் உயிர் பிழைத்தேன். 33 வயதில் மதுரையில் மீண்டும் வயிற்றுப் போக்கு, காய்ச்சல். மருத்துவர்கள் கான்சர் என்று முடிவு செய்து ஆபரேசனை ஆரம்பித்தார்கள். வேண்டாத தெய்வம் இல்லை. வயிற்றைக் கீறிக் குடலை எடுத்து ஒவ்வொன்றாக பரிசோதித்து கான்சர் இல்லை என்று தைத்து விட்டார்கள். இந்த முறையும் தெய்வம் என்னைக் கைவிடவில்லை அமெரிக்காவில் வாஷிங்டனில் சாலையைக் கடக்கும்போது ஏற்படவிருந்த விபத்தில் நூலிழையில் இறையருளால் காப்பாற்றப்பட்டேன்.

சபரி மலைக்குச் செல்வதுண்டு. அப்போது ஏற்பட்ட அனுபவங்களை எல்லாம் ஒரு நூலாக எழுதி அண்ணன் வானதி திருநாவுக்கரசு அவர்களிடம் எடுத்துச் சென்றேன்.

படித்துவிட்டு வானதி வெளியீடாக ஸ்ரீஐயப்பன் தத்துவங்களை வெளியிட்டு என்னையும் ஒரு நூலாசிரியனாகத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்தினார்கள். இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து ஆலய தரிசனம் செய்து ஒரு நூல் எழுதிக் கொண்டு அண்ணன் திருநாவுக்கரசு அவர்களிடம் சென்றேன். ''புண்ணிய பூமியில் புனித யாத்திரை'' என்ற பெயரில் வானதி வெளியீடாக மாண்புமிகு அமைச்சர் இராம. வீரப்பனவர்களின் திருக்கரங்களால் வெளியிடச் செய்து மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொள்ள கவியரசர் கண்ணதாசன் வாழ்த்துக் கூற எனக்கு மேலும் பெருமை சேர்த்தார்கள்.

20 வயது முதல் வணக்கத்துக்குரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார், வாரியார் சுவாமிகள், கவியரசர் கண்ணதாசன் முதலியவர்களோடு நெருக்கமான பிணைப்பும் தொடர்பும் இருந்ததோடு, தவறாது அவர்கள் சொற்பொழிவுகளைக் கேட்பதுமுண்டு. இந்த நிலையில் 1972-ல் திரைப் படத்தொழிலில் நான் நுழைந்தபோது, திரைப் படத்தொழிலில் மிகவும் ஒழுக்க சீலங்களிலும் உழைப்பிலும் உயர்ந்தவர்களில் ஒருவரான மதிப்பிற்குரிய இராம.வீரப்பன் அவர்களின் நட்புக் கிடைத்தது. பிறகு அன்னார் அறநிலையத்துறை அமைச்சரான பிறகு இறை நம்பிக்கை உள்ள

என்னை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலுக்கு அறங்காவலர் குழுத்தலைவராக அனுப்பி வைத்தார்கள். குழுத்தலைவராகிய பிறகு தக்கார் ஆக்கப்பட்டேன். மீனாட்சி அம்மையின் செங்கோல் வாங்குவது முன்னோர் செய்த புண்ணியம் என்று சொல்வார்கள். அந்தப் பாக்கியத்தைத் தந்து, சாதாரண சிதம்பரத்தை ஆலயப் பணியோடு இணைத்து எனக்கு மட்டும் அல்ல, எனது பரம்பரைக்கே சிறப்புச் செய்த அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களை என் நெஞ்சிருக்கும்வரை நினைத்திருப்பேன். வணங்குகிறேன் ஆலயத்திற்கு வந்தது முதல் மீனாட்சி அம்மையின் அருள், கோயில் வரலாறு முதலியவைகளை எழுத வேண்டும் என்ற ஆவலின் காரணமாகப் பல நூல்களைப் படித்தேன். பல பெரியவர்களின் செவிவழிச் செய்திகளைக் கேட்டேன். நாலு ஆண்டுகளாக எழுத ஆரம்பித்தேன். இந்த நூல் எழுதி முழுமை பெற எனக்கு உறுதுணையாக இருந்த பேராசிரியர் திரு. சோம. லெ., திரு. கௌசிகன் திரு. அரங்கசாமி, திரு. கனகய்யா, திரு. குருசாமி ஓதுவார், திரு. தங்கபட்டர் முதலியவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் அண்ணன் வானதி அவர்களைச் சந்தித்தேன். அவர்களுக்கே உரித்தான பலத்த சிரிப்போடு மகிழ்ச்சியுடன் வெளியிடச் சம்மதித்தார்கள். திருநாவுக்கரசு அண்ணன் அவர்கள் உழைப்பால் உயர்ந்தவர்கள். நிறைந்த தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள். அவர்கள் அணிந்திருக்கும் சட்டையின் வெண்மை போல் உள்ளமும் வெள்ளையாக இருக்கும். ரயிலில் சென்றபோது யாரோ விட்டுச் சென்ற மீனாட்சி அம்மையின் திருவுருவப் படத்தை அவர்கள் காரியாலயத்தில்

வைத்து தினமும் வணங்கி வருகிறார்கள். ஆகவே "அங்கயற்கண்ணியின் அற்புதங்கள்" என்ற பெயரோடு நூலை வெளியிடச் சம்மதித்தார்கள். அங்கயற்கண்ணியின் அருளினால் நூல் மிக அழகாக வெளிவந்துள்ளது.

நடமாடும் தெய்வம் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் ஸ்ரீ முகம், வணக்கத்திற்குரிய வாரியார் சுவாமிகளின் அணிந்துரை, போற்றுதலுக்குரிய ஆணையர் ஆளுடைய பிள்ளையவர்களின் அணிந்துரை இந்நூலுக்குக் கிடைத்துள்ளன. இதைப் பெரும் பாக்கியமாகக் கருதி எனது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நூலினை அங்கயற்கண்ணி அம்மைதன்னோடு அமர்ந்திருக்கின்ற ஆலவாய் அண்ணலின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

—வி. என். சிதம்பரம்

பதிப்புரை

மதுரை மாநகரிலே சொக்கநாதரைக் கவர்ந்து கோயில் கொண்டமர்ந்துள்ள அங்கயற்கண்ணி மீனாட்சியம்மையின் அற்புதங்களை விளக்கும் நூலை மதுரைக் கோயிலின் தக்கார் உயர்திரு வி. என். சிதம்பரம் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

தமிழ்நாட்டின் உயிரோட்டமான மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் வரலாற்றையும், கோயில் வழிபாட்டு முறைகளையும், கோயிலுள் உறைந்திருக்கும் தெய்வங்கள் பற்றியும் அங்கு நடைபெற்ற அம்பிகையின் அருட்செயல்கள் பற்றியும் இன்ன பிற செய்திகளையும் இந்நூலில் காணலாம். மதுரை மீனாட்சியம்மை பக்தர்கள் வாழ்வில் எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்திக் காட்டியுள்ளதைப் படிக்கப் படிக்க மெய்சிலிர்ப்பதாக இருக்கிறது.

ஒரு சமயம் மதுரை சென்று சென்னை வரும்பொழுது ரயிலில் என்னுடைய கம்பார்ட்மெண்டில் படச் சுருள் ஒன்று பழக் கூடை மேல் இருந்தது. என் பக்கத்திலிருந்தவரின் உடைமை எனக் கருதி இருந்தேன். எக்மோர் ஸ்டேஷன் வந்தது படச் சுருளை மட்டும் விட்டு விட்டு அவர் பழக்கூடையை மட்டும் எடுத்துக்கொண்டு இறங்கினார். அவருடன் எல்லோரும் இறங்கி விட்டார்கள். படச்சுருள் மட்டும் அங்கேயே இருந்தது. உடனே நான் என் பக்கத்திலிருந்த பயணியைக் கூப்பிட்டு "சார், படச்

சுருளை விட்டு விட்டுப் போகிறீர்களே; இந்தாருங்கள்'' என்றேன். அவர் அது எங்களுடையது இல்லை என்று சொல்லிக் கொண்டே படச் சுருளை விரித்தார். என்ன ஆச்சரியம்! அது மீனாட்சியம்மன் திருவுருவப் படம். ''திருச்சி ஜங்ஷனிலிருந்து இந்தப் படம் எங்கள் பழக் கூடையின் மேல் இருந்துவருகிறது. யார் வைத்தது, இது எப்படி வந்தது என்று தெரியவில்லை. இதே மாதிரிப் படம் எங்கள் வீட்டிலிருக்கிறது. இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்'' என்று படத்தை என்னிடம் தந்தார். எனக்கு மெய்சிலிர்த்து விட்டது; ஆனந்தம் பொங்கியது.

அங்கயற்கண்ணியம்மை நம்மை அன்போடு தேடி வருகிறாள் என்று அந்தப் படத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு வாங்கி வந்து, அதை அழகிய பிரேம் போட்டு வானதி பதிப்பக அலுவலகத்தில் என் மேசையின் மேல் வைத்துள்ளேன்.


அங்கயற்கண்ணியம்மையின் திருவுருவப் படம் எதிர் பாராது கிடைத்தது. அது பூர்வ புண்ணியபலன் எனக் கருதுகிறேன். அதைப் போலவே அங்கயற்கண்ணியின் அற்புதங்களை வானதி பதிப்பகத்தில் வெளியிடுவதைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

அருள் நிறைந்த அங்கயற்கண்ணியின் அற்புத நூலை வெளியிட வாய்ப்பளித்த மதுரை மீனாட்சியம்மன் கோயில் தக்கார் உயர்திரு. வி. என். சிதம்பரம் அவர்களுக்கு மிக்க நன்றி.

இந்நூலை அனைவரும் படித்துப் பயன் பல பெறவும், அங்கயற்கண்ணியம்மையின் அருள்பெறவும் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

பொருளடக்கம்



மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கிழக்கு கோபுரம்



உ

சித்தி விநாயகர் துணை
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே''

1. மதுரைத் திருக்கோயிலின் தனிச் சிறப்புக்கள்

முன்னுரை

தமிழ்நாடு தொன்மையானது. எளிய வாழ்வும் உயர்ந்த சிந்தனைகளும் கொண்ட மக்களை உடையது.

இந்த மனப்பண்பின் சிகரமே தமிழ்நாடு முழுவதும் வானளாவிய கோபுரங்களுடன் கூடிய கோயில்களாக ஓங்கி உலகறிய விளங்குகின்றது.

இக் காரணத்தாலேயே, மாணிக்கவாசகர், ''தென்னாடு உடைய சிவன்'' என்று, எந்நாட்டார்க்கும் இறைவனாக இருப்பவனைக் குறிப்பிடுகிறார்.

எல்லையில்லாப் பரம்பொருள், ஏன் தமிழ் நாட்டைத் தன்னாடாக ஆக்கிக்கொண்டான்?

தமிழ்நாட்டுக் கோயில்களில் எல்லாக் கலைகளும் தழைக்கின்றன. பாடலோடு ஆடலும் பயிற்றுவிக்கப் படுகின்றன. வேதமொடு ஆகம விழுநூலும் கற்பிக்கப்படுகின்றன.

கல்வியால் அறிவும், அறிவால் ஒழுக்கமும் வளர்ந்துள்ளன. அவை கலையாக மலர்ந்து இனிய மணம் பரப்புகின்றது. மக்களை நல்வழிப்படுத்தும் கருவியாகக் கோயில்கள் திகழ்கின்றன. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற நீதி தமிழ் நாட்டில் மட்டுமே நிலவுகிறது.

கோயில் மிகுதியால் மக்களுடைய சீலமும் பண்பும் சிறந்து, வாழ்வும் மேம்பட்டதாக உள்ளது.

உயிரோட்டமான கோயில்

உள்ளம் விம்மிப் பெருமிதம் அடையும் கோயில்கள், புகழ்பெற்ற கோயில்கள், பாடல்பெற்ற கோயில்கள், வரலாற்றுப் பெருமையுடைய கோயில்கள், சிற்பச் சிறப்பு நிறைந்த கோயில்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. இவற்றுள் திருவிழா நாட்களில் கூட மக்கள் கூட்டம் போதிய அளவு இல்லாத புண்ணியத் தலங்களும் உண்டு.

இந்த அவல நிலைக்கு முற்றிலும் மாறுபட்டது, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில். உயிரோட்டம் உள்ள கோயிலாக எந்த நேரமும் மக்கள் கூட்டம் மிகுதியாக இக்கோயில் திகழ்கிறது.

காலை 4 மணிக்குச் சித்திரை வீதியிலுள்ள கோபுர வாயில்களும் 4—30 மணிக்கு உட்கதவுகளும் திறப்பதற்கு முன்னரே சாரை சாரையாக அன்பர்கள் காத்திருப்பது ஏன்?

பகலிலும் இரவிலும் காத்திருக்கும் பக்தர்களை அன்புடன் வேண்டிக் கொண்டுதானே கோயில் நடை சார்த்த நேருகிறது.

மதுரை நகர் தோன்றிய காலம் முதல், இக்கோயில் சைவ சமயத்தின் ஊற்றாய் இருந்துவந்திருக்கிறது. சித்தர் தொடர்பும் இக்கோயிலுக்கு உண்டு. இத்தகைய அரிய செய்திகளை அறிந்துகொண்டால், அல்லும் பகலும் மக்கள் இங்கு அலைமோதுவதன் உட்பொருள் தெள்ளத்தெளியத் தெரியவரும்.

நகரின் அமைப்பு

மதிற்சுவர்களை அடுத்துத் தேரோடும் திருவீதி ஒன்று மட்டுமே காஞ்சிபுரம், திருவாரூர், இராமேசுவரம், திருநெல்வேலி போன்ற பெரும் தலங்களில் இருக்கிறது.

மதுரையில் கோயிலுக்கு உள்ளேயே ஒரு பெரிய வீதி, ஆடி வீதி என்னும் பெயரில் இருக்கிறது. 100 ஆண்டுகளுக்கு முன்னர்தான் இதில் கல் பாவி தளம் போடப்பட்டது. கோயிலுக்கு வெளியே சித்திரை வீதி, ஆவணி மூல வீதி, மாசி வீதி என்ற வீதிகள் நான்கு திக்குகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீதியும் அந்தந்த மாதத்தில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நடைபெறும் திருவிழாவில் இறைவனும் இறைவியும் உலா வர உண்டாக்கப்பட்டவை. பிற்காலத்து அரசர்கள் இதில் சில மாற்றங்களைச் செய்திருப்பதை வேறு ஓரிடத்தில் கூறியிருக்கிறோம்.

தமிழ்த் திங்கள்களின் பெயர்கள் தமிழ்நாட்டில் வேறெந்த நகரத்திலும் இல்லை என்பதும் நம் சிந்தனைக்கு உரியது. வளைந்தும் நெளிந்தும் வீதிகள் அமையாமல், எல்லா வீதிகளும் நேராக, சீராக நூல் பிடித்துக் கட்டப்பட்ட கட்டிடங்கள் போல் உள்ளன.

நான்கு சித்திரை வீதிகள், நான்கு ஆவணி மூல வீதிகள், நான்கு மாசி வீதிகள் நான்கு வெளி வீதிகள், ஆக 16 வீதிகளிலும் உள்ளவர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறையேனும் அங்கயற்கண்ணியுடன் கூடிய ஆலவாய் அண்ணல் காட்சி கொடுக்கும் வகையில், இத்திருக்கோயில் விழாக்கள் அமைந்துள்ளன.

கோயிலுக்காக நகரம் முழுவதும் சிறிய பெரிய சதுரங்களாக நிர்மாணிக்கப்பட்டிருப்பது மதுரைக்கு மட்டுமே உரிய தனித்தன்மை ஆகும். இதனால், மதுரை 'கோயில் மாநகர்' என்னும் பெருமை உடையது. கோயிலை நடுநாயகமாக வைத்து அமைக்கப்பெற்ற நகரம் வேறு ஒன்றுமேயில்லை.

தமிழ்ப் பண்பாடு

பாண்டியர் வளர்த்த தமிழ்ப் பண்பாட்டை இந்தக் கோயில் இன்றும் போற்றி வருகிறது. தமிழோடு தொடர்புடைய கோயிலாகவும் இசை வளர்க்கும் நிலையமாகவும் என்றும் திகழ்ந்து வருகிறது இவ்வாலயம்.இச்சிறப்பை இந்த நூல்விரிவாகக் கூறும்.

கலைச் செல்வம்

படிமக்கலை, கட்டிடக்கலை முதலிய ஆய கலைகள் 64ஐயும் இக்கோயில் வளர்த்து வந்திருக்கிறது. சமுதாய நல மையமாய், ஓவியக் கருவூலமாய், சிற்பக் கூடமாய், இசைக்கலையின் இருப்பிடமாய், புலவர் கூடும் மேடையாய், வண்ணக் களஞ்சியமாய், அமுது படைக்கும் அறச்சாலையாய் இக்கோயில் விளங்கி வந்திருக்கிறது.

33,000 சிற்பங்களை ஒரு தொகுதியாகப் பார்க்கக் கூடிய இடம் உலகில் வேறு எங்கும் கிடையாது. சிற்பக் கலை பயிலுவோர்க்குச் சிறந்ததோர் ஆராய்ச்சிக் கூடம் மதுரைக் கோயிலே எனலாம்.

திருக்கல்யாண மண்டபத்தின் மேற்குச் சுவரில் வரையப்பட்டிருக்கும் ககோளம், பூகோளம் என்ற சித்திர வடிவங்களில் எவ்வளவு பொருள் பொதிந்திருக்கிறது! பக்தியோடு பாடநூல் அறிவையும் பரப்பக் கோயிலைப் பயன்படுத்திய நம் முன்னோரை எவ்வளவு பாராட்டினும் தகும்.

கடவுளின் பெருமையையும் மனிதனின் சிறுமையையும் உணர்த்தும் மாபெரும் கோபுரங்களுக்கும் இந்தக் கோயிலில் குறைவு இல்லை. அவற்றில் காணப்படும் சுதை வேலைகள், புராணங்கள் குறிப்பிடும் வரலாறுகளுக்கு விளக்கமாயும் கோயிற் கட்டிடக் கலைஞர்களின் கைவன்மைக்கு எடுத்துக்காட்டாகவும் உள்ளன.

திரும்பிய இடமெல்லாம் திசை தொறும் உள்ள மண்டபங்கள் திராவிடக் கட்டிடக்கலைத் திறனை இயம்பும். கல்லெல்லாம் கவிதை பாடும், கதை சொல்லும்.

யாளியும், திருக்கல்யாண மண்டபத்தின் உச்சிப் பகுதியும், அம்மன் சந்நிதி, கிழக்குக் கோபுரம், நடுக் கட்டுக் கோபுரம், கடக கோபுரம் ஆகியவற்றில் பொருத்தப்பட்டுள்ள கதவுகளும் மரச் சிற்பவேலைப் பாட்டின் நயத்தை நானிலத்துக்கும் நவிலுகின்றன.

சிவ தத்துவப்படி 16 கால் மண்டபமும், வைணவ தத்துவப்படி 100 கால் மண்டபமும், ஆகம தத்துவப் படி 1,000 கால் மண்டபமும் உள்ள கோயில் இது. திருச்சுற்றுகள் பரவலாக அமைந்து அவற்றின் தூண் களில் அழகொழுகும் பெரிய சிலைகள் வடிக்கப் பெற்றுள்ளன.

ஒவ்வொரு தூணும், ஆற அமர நின்று அமைதி யாகப் பார்த்து மகிழத்தக்க சிற்பத்திறன் உடையது. காணும் மண்டபங்கள் எல்லாவற்றிலும் நிமிர்ந்து நோக்கி நெடுநேரம் நுணுகி ஆராய்ந்து சுவைப்பதற்கு ஏற்ற சுதை வேலைகள் சுவர்களில் செய்யப்பட்டிருக் கின்றன. மேல் தளங்களில், நாம் அண்ணாந்துபார்த்து மூக்கின் மேல் விரல் வைத்து வியக்கத்தக்க வண்ண ஓவியங்களாகப் பல கடவுளரின் மூர்த்தங்கள் வகைப் படுத்தியும் தொகைப்படுத்தியும்வரையப்பட்டுள்ளன. கலை வல்லாரின் கைத்திறனாக உள்ள வண்ணக் கமலங்களும் கண்ணைக் கவர்வன. கோயிலின் பல இடங்களிலும் சலவைக் கற்களில் பொறிக்கப் பெற் றுள்ள பக்திப் பாடல்கள் மனப்பாடம் செய்யத் தக்கன.

அடியார் தொடர்பு

அடியார்கள் தொடர்பாலும் எல்லையற்ற பெருமை பெற்ற பதி இது. நாளும் தமிழிசை பாடி நற்றமிழ் வளர்த்த ஞானசம்பந்தர் வாழ்க்கையில் சிறப்பிடம் கொண்டது இத்தலம். மாணிக்கவாசகர் அமைச்சராக இருந்த நகர் இதுவே.

63 சைவ நாயன்மாருள், ஏனையோர் அனைவரும் நின்ற நிலையில் இருக்க, அமர்ந்த கோலத்தில் எல்லாக் கோயில்களிலும் வடிக்கப்பெற்றிருப்பவர் காரைக்கால் அம்மையார் ஆவர். இவருடைய வாழ்க்கையிலும் மதுரைக்குப் பெரும் பங்கு உண்டு. இவருடைய கணவன் மதுரையில் குடியேறியதால், நாயகன் ஊருக்கு நாயகியும் வந்தார். நாயகனே தம்மை ஞானி என்று போற்றும் நிலை எய்தினார். இறைவனாலேயே அம்மையே என்று அழைக்கப் பெற்றார். இவருடைய முதிர்ந்த பருவத் திருவுருவம் சுவாமி சந்நிதி இரண்டாம் சுற்றில் ஊர்த்துவத் தாண்டவத் தூணில் உள்ளது.

மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம், தருமபுர ஆதீனம், காசி மடம் (திருப்பனந்தாள்) ஆகிய சைவ சமய நிறுவனங்களைத் தோற்றுவித்த திருஞான சம்பந்தர், குருஞானசம்பந்தர், குமரகுருபரர் ஆகியோர் வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் இத்திருக்கோயிலுடன் பின்னிப் பிணைந்தவை.

48,000 சிவனடியார்கள் மதுரையில் வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

திருவிளையாடல்கள்

அடியார்களுக்குச் சோமசுந்தரக் கடவுள் 64 திருவிளையாடல்களை நிகழ்த்திக் காட்டியது இத்தலத்துக்கு மட்டுமே உரிய பெருமை ஆகும். இதனால் பிரதோஷ தினத்தன்றும் மகா சிவராத்திரியன்றும் வழிபடுவதற்குரிய ஒப்பற்ற சிவத்தலமாக இது விளங்குகிறது.

இந்தத் திருவிளையாடல்கள் இப்பெருங் கோயிலின் பல பகுதிகளில் கல்லிலும் வண்ணத்திலும் சுதை வேலையிலும் இடம் பெற்றிருக்கின்றன. பொற்றா

மரைக் குளத்தின் கீழ், வடபுறமாகச் சுவர்களிலும் சங்கிலி மண்டபத்தின் உச்சியிலும் சுவாமி கோயில் மகா மண்டபத்தில் கல்லாலானகோட்டங்களுக்கு இடையேயும், சுவாமி கோயில் பிரகாரங்களிலும், ஆயிரக்கால் மண்டபத்தின் வடகிழக்கு மூலையிலும் இவற்றைப் பார்க்கலாம்.

பாண்டியர் திருப்பணி

பாண்டியர் தொடங்கி, தமிழ்நாட்டை ஆட்சி செய்த முடியுடை மன்னர்கள் பரவசமடைந்தது இந்தக் கோயிலின் இறைவி-இறைவன் ஆகியோருடைய கருணையில்தான்!

பாண்டியர் இக்கோயிலில் செய்த திருப்பணிகள் பெரும்பாலும், காலத்தால் அழிந்தும், போர்களால் சிதைந்தும், வேற்றுச் சமயத்தினரால் பாதிக்கப்பட்டு விட்டன போலும். அவர்களுடைய தொடர்பைக் கிழக்கு ஆடி வீதியில் உள்ள கோபுரத்தின் கல் நிலையில் பொறிக்கப் பட்டுள்ள மீன் சின்னங்கள் நினைவு படுத்துகின்றன.

குலசேகரப்பாண்டியன், சொக்கர் கருவறையான இந்திர விமானத்தை அமைக்க ஏற்பாடு செய்தான் என்பதற்கும், அவன் மகனான மலையத்துவசன் மகள் தடாதகையே- மீனாட்சியாக வழிபடப் பெறுகிறாள் என்பதற்கும் ஆதாரங்கள் உள்ளன.

பாண்டிய மன்னர்கள் தங்கள் தலைநகரான மதுரையில் பெரிய அரண்மனை அமைத்துக் கொண்டிருந்தனர். அந்த அரண்மனையின் வனப்பைப் பத்துப்பாட்டில் ஒன்றான நெடுநல்வாடையில் நக்கீரர்

விவரித்துள்ளார். அந்த அரண்மனையின் சுவடுகள் கூட இப்போது இல்லை. அரசர்கள், அரண்மனையினும் மேம்பட்டதாக அரன்மனையைக் கருதி உறுதியாகக் கட்டினர் போலும்!‡ அது அவர்களுடைய பக்திக்கு எடுத்துக்காட்டு,

அவ்வப்போது மதுரையை ஆண்ட அரசரும் அவர் தம் குடும்பத்தாரும் இத்திருக்கோயிலுக்கு வர சுரங்கப் பாதைகள் அமைத்துக்கொண்டிருந்ததாகப் பழைய வரலாறுகள் கூறுகின்றன. அந்தப் பாதைகளின் அறிகுறிகள் கூட இப்போது இல்லை.

மீனாட்சி, பாண்டிய அரசனின் மகளாகப் பிறந்ததால் இந்த ஆலயத்தை கோயில் என்றும் சொல்லலாம், கோவில் என்றும் சொல்லலாம்.

வரலாற்றுப் பெட்டகம்

பாண்டியர்கள், அவர்களுக்குப் பின்வந்த பல அரச மரபினர், அந்த அரசர்களுடைய பட்டத்தரசிகள் மற்றும் தேவியர், அமைச்சர்கள் ஆகியோருடைய தோற்றங்கள் இந்தக் கோயிலின் வெவ்வேறு பகுதிகளிலும், இதைச் சேர்ந்த புதுமண்டபத்திலும் நம் அகக் கண்களுக்கு முன் நிறுத்தப்படுகின்றன.

பல நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஆடவரின் பொலிவும் பெண்டிரின் கூந்தலும் ஆடை அணிகலன்களும் கல்லிலும் ஓவியத்திலும் படம் பிடித்துக் காட்டப்பெற்றுள்ளன. இந்தக் கோணத்திலிருந்து

---

‡ அரண்மனை—மன்னர் மாளிகை.
அரன்மனை—சிவனுடைய கோயில்

பார்த்தால், இக்கோயில் வரலாற்றுப் பெட்டகமாக இருப்பது தெரியவரும். பாண்டியநாட்டின் வரலாற்றுக்கு விளக்கம் தரும் 44 கல்வெட்டுகள் சொக்கர் கோயில் திருச்சுற்றுச் சுவர்களிலும் பிற இடங்களிலும் நல்ல தமிழில் அகவற்பாவாலும் உரைநடையாலும் திருமுருகப்பட்டையங்களாகவும் உள்ளன.

தமிழ் நாடெங்குமிருந்த புலவர்கள் தங்கள் நூல்களை அரங்கேற்ற மதுரைக்கே வந்தனர்.

இவையெல்லாம் மதுரையின் பழமையையும் பெருமையையும் விளக்கி நிற்கின்றன.

விழா மலி நகரம்

இடையறாது திருவிழாக்கள் நடைபெறும் கோயில் என்ற வகையிலும் இத்திருக்கோயில் பெருமையுடையது. வேறு எந்தத் திருக்கோயிலிலும் கொண்டாடப்பெறாத சில திருவிழாக்கள் இந்தக் கோயிலுக்கு உண்டு. இவை பற்றிய விவரங்களையும் இந்த நூலில் எடுத்துச் சொல்லுவோம்.

கோயிலின் அமைப்பு

இறைவன் கோயில் கருவறையின் அமைப்பு, இந்தக் கோயிலில் தனித் தன்மையாக விளங்குகிறது. இதைப் பிறிதோரிடத்தில் விளக்கமாகக் கூறுவோம்.

எல்லாக் கோயில்களிலும் இறைவனுக்கு இடப்புறத்தில் அம்மனின் கோயில் இருக்க, இங்கு வலப்புறத்தில் அம்மன் கோயில் கொண்டிருக்கிறாள். இறைவன் கிழக்கு நோக்கியும், அம்மன் தெற்கு நோக்கியும் இருக்கும் மரபு இந்தக் கோயிலில் கிடையாது. மீனாட்சி அம்மனுடைய திருமணக்கோலம் இக்கோயி

லுக்கு உரிய சிறப்பாக இருப்பதால், மணமக்கள் இருவரும் மணமேடையில் இருப்பதுபோன்று இறைவனும் இறைவியும் கிழக்கு நோக்கியவர்களாக அவரவர் கருவறையில் உள்ளனர். இவ்வமைப்பு முறை, பாண்டி நாட்டிலுள்ள எல்லாக் கோயில்களிலும் கடைப்பிடிக்கப்படுகிறது. நகரத்தார்கள் தமிழ் நாட்டின் பிற பகுதிகளில் புதுப்பித்திருக்கும் கோயில்களிலும் இவ்வமைப்பு முறையைப் புகுத்தியுள்ளனர்.

இக்கோயில் 64 சக்தி பீடங்களுள் முதன்மையாக இருப்பதும், அதற்கேற்ப இங்கு எல்லா வகையிலும் மீனாட்சி அம்மனுக்கே முதன்மை நல்கப் பெறுவதும் இக்கோயிலுக்குரிய தனிக் கூறுகள் எனலாம்.

துவாத சாந்தத் தலமாக, இத்தலம் போற்றப் படுகிறது.

சமணமும் அதன் விளைவுகளும்

வட நாடெங்கும் சமணமும் பௌத்தமும் காலூன்ற இந்து மதம் செல்வாக்கு இழந்தது. தென்னாட்டில் மட்டும் இந்து மதம் நிலைத்து வந்ததை அயல் மதத்தாரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஆந்திர மாநிலத்தில் நாகார்ஜுனா கொண்டாவை மையமாக வைத்துப் பௌத்தமும், கருநாடகத்தில் சரவணபௌகோலாவை மையமாக வைத்துச் சமணமும் தழைத்தன. இரு சமயங்களும் தமிழ்நாட்டில் வேரூன்றத் திட்டமிட்டு, சைவமும் தமிழும் ஏற்றம் பெற்றுத் தமிழ் நாகரிகத்தின் நிலைக்களனாக இருந்த மதுரையில் ஊன்றிக்கொள்ள அரும்பாடு பட்டன. அரசனும் சமணன் ஆனான். அந்நிலையில் பாண்டிய அரசியான மங்கையர்க்கரசி, திருஞான

சம்பந்தப் பெருமானை வரவழைத்து, மதுரையையும் பாண்டிய நாட்டையும் தமிழ்நாட்டையும் சைவக் கோட்டையாக மாற்றினார். இங்கு சமணம் நிலைத் திருப்பின் சைவசித்தாந்தமே அழிந்திருக்கும். அழியும் நிலைக்கு வந்துவிட்ட சைவசமயம் மறுமலர்ச்சிபெறச் செய்த தலம் மதுரை.

திருஞானசம்பந்தப்பெருமான் திருநீற்றுப் பதிகம் பாடி, சைவ சமயச் சின்னத்தைப் பாண்டிநாட்டார் அனைவரும் துணிந்து அணியச் செய்த நிகழ்ச்சி மதுரையில்தான் நிகழ்ந்தது.

சிவபெருமான் 64 திருவிளையாடல்கள் செய்து காட்டி, அருள் வழங்கிய சிறப்பு வேறெந்தத் தலத்துக்கும் கிடையாது.

பல தலங்களில் சைவ—வைணவச் சண்டைகள் அல்லது தென்கலை—வடகலை பூசல்கள் உண்டு. இத் தலத்தில் எவ்வகையான பூசலும் இன்றிச் சைவத்தையும் வைணவத்தையும் இணைக்கும் வகையில் திருவிழாக்கள் உருவாக்கப் பெற்றுள்ளன.

மதுரையில் நிலவிய சமயப் பொறைக்குப் பல சான்றுகள் உள்ளன. பௌத்த சமயத்தினரான சாத்தனார்க்கு சைவ சமயம் அடைக்கலம் கொடுத்தது. இவற்றுள் ஒன்று, அனல் ஏந்தி ஆடும் ஆனந்தக் கூத்தனின் இடமாகிய வெள்ளியம்பலத்தினை, மதுரையை எரித்த அங்கியங் கடவுளால் அணுகமுடியவில்லை என்னும் உண்மை இதிலிருந்து புலப்படுகிறது.

நாகரிகத்தின் தலையூற்று

தெற்கேயிருந்து காசி யாத்திரை செல்லுபவர்களும் வடக்கேயிருந்து இராமேசுவர யாத்திரை மேற்கொண்டுவருபவர்களும் தவறாமல் வழிபடும் கோயில் மதுரைக் கோயில். மேலும், வடஇந்தியாவிலுள்ள சமணரும் பௌத்தரும் அங்குள்ள இந்துக் கோயில்களுக்குச் செல்லாவிட்டாலும் தமிழ்நாட்டுக்கு வரும்போது சக்தி வழிபாட்டிற்கு உரியதாகவும் வரலாற்றுப் பழமைமிக்ககோயிலாகவும் இருப்பதால் அன்னை மீனாட்சியை ஆறுதலாக வழிபடுவதையும் காணிக்கை செலுத்துவதையும் கடமையாகக் கொண்டுள்ளனர்.

இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கும் மேலாக, தென்னிந்திய அரசியலிலும், வரலாற்றிலும், சமயத்திலும், கலைகளிலும், இலக்கியத்திலும் மதுரை மாநகரம் இடையறாப் புகழ்பெற்றுள்ளது. திராவிட நாகரிகத்தின் தலையூற்றாகவும் இருந்து வந்திருக்கிறது. இந்தப் பெருமை அனைத்தும் இக்கோயிலுடன் இணைந்ததே ஆகும்.

அரசும் கோயிலும்

இக்கோயில் தோன்றிய காலத்திலிருந்து அரசர்கள் வழிபடும் தலைமைக் கோயிலாக இருந்து வந்திருக்கிறது. முற்காலப் பாண்டியர், பிற்காலப் பாண்டியர், நாயக்கர் ஆகியோருடைய ஆட்சிகளில் இந்தக் கோயில் பெரு வளர்ச்சியடைந்தது. இடையிடையே ஆட்சி குலைந்தபோது அல்லது புதிய ஆட்சி நிலை கொள்ளுமுன் கோயிலுக்குப் புரவலராக இருந்தவர் பலர். இவர்கள் அந்தணர், முதலியார், நாயுடு முதலிய

எல்லா இனத்தவரும் ஆவர். ஒரு சமூகம் தவறாமல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சாதியினரும் இந்தக் கோயிலில் மண்டபங்கள் கட்டியும் கட்டளை கள் ஏற்படுத்தியும் நிபந்தங்கள் வழங்கியும் உள்ளனர். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தக் கோயி லின் பல பகுதிகளைப் புதுக்கிய பெருமை அமராவதி புதூர் வயிநாகரம் குடும்பத்தாருக்கு உரியது.

ஆங்கிலேய ஆட்சியினர் வேறு மதத்தினராக இருந்தபோதிலும்இக்கோயிலின் ஆட்சி செம்மையாக இருப்பதில் அவர்கள் அக்கறை காட்டி வந்தனர். உரிமை பெற்ற இந்திய நாட்டிலும், இந்தியக் குடி யரசின் தலைவர்களும், தலைமை அமைச்சர்களும் இங்கு வழிபடுவதைக் கடமையாகக் கொண்டுள்ளர். இன்றைய தமிழக அரசு, தொடர்ந்து இக்கோயிலின் நல்வளர்ச்சியில் நாளும் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

கோயில் நகைகள்

பாண்டிய அரசர்கள் இக்கோயிலுக்கு ஏராளமான நகைகளை வழங்கினார்கள் என்பது கர்ணபரம்பரைச் செய்தியாகும். இப்போது உள்ள பழமையான பாண்டியர் காலத்து நகையைப் பற்றிய விவரம் பிறிதோரிடத்தில் கூறியிருக்கிறோம்.

பாண்டிய நாடு முத்து உடையது. எனவே, இக் கோயில் நகைகளில் முத்து மிகுதியான இடம் பெற்றி ருக்கிறது.

முத்து ஆபரணங்களில் பொதுவாகக் கேப்பை அளவான சிறிய முத்துக்களும், பலாக்கொட்டை

அளவிலான பெரிய முத்துக்களும் இருக்கின்றன. சோமசுந்தரருக்கும், சோமாஸ்கந்த மூர்த்தியின் நடுவில் இருக்கும் பால முருகனுக்கும் அணிவிக்கப் பெறும் முத்தங்கி, சிறிய முத்துக்களால் ஆனது.

உற்சவ அம்மன் கையில் பிடித்திருக்கும் ஒற்றைக் கிளி பெரிய முத்துக்களால் ஆனது.

ஆவணிமூலத் திருவிழாவில் இறைவனுக்கும் இறைவிக்கும் அடிமுதல் முடிவரை முன்னும் பின்னும் முத்துமாலை. முத்தங்கி சாத்துவது வழக்கம்.

பல்லவப் பேரரசர்கள் வழங்கிய நகைகளும் நள மஹாராஜா அளித்த நள பதக்கமும் நாயக்க மன்னர் களும், அவர்களுடைய அமைச்சர்களும் காணிக்கை செலுத்திய அணிகலன்களும் இப்போது உள்ளன. புதுக்கோட்டைத் தொண்டைமானும் ஏராளமான குறுநில மன்னர்களும் அன்புடன் அளித்த அணிகலன் களும் ரூஸ்பீட்டர் என்னும் ஆங்கிலேய ஆட்சியாளர் செய்துவைத்த நகைகளும் கோயிலின் நகைப்பட்டி யலில் அடங்கும்.

திருமலை நாயக்கர் இக்கோயிலுக்கு ஏராளமான நகைகளையும் கிரீடங்களையும் வழங்கினார் என்பது அவருடைய வரலாற்றிலும் திருமலை நாயக்கர் மகாலில் உள்ள அருட்காட்சியகத்திலும் குறிக்கப்பெற் றுள்ளது.

வைரக் கிரீடம்

இத்திருக்கோயில் நகைகளுள் முதன்மையானது வைரக்கிரீடம்.

11-12-1972இல் இந்தக் கிரீடம் முதல்முறையாக மீனாட்சி அம்மனுக்கு அணிவிக்கப்பெற்றது. இதன்

உயரம் பதினாலரை (14.5) அங்குலம்; அடிப்பாகத்தின் சுற்றளவு 20 அங்குலம்.

சிற்ப நூல்களில் கூறப்பெற்றுள்ள அளவு, அமைப்பு முறைகளுக்கு ஏற்ப இந்தக் கிரீடம் செய்யப் பெற்றுள்ளது. கிரீடத்தின் மேற்கலசம், தாமரை மொட்டுப் போன்றது. நடுப்பாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தாமரையின் இரண்டு பக்கங்களிலும் அன்னப் பறவைகள் விளையாடுவதுபோலச் சித்திரிக்கப் பெற்றுள்ளது.

நெற்றி மாணிக்கத் திலகத்தைச் சுற்றிலும் மூன்று வைர வளையங்கள் அழகு செய்கின்றன. பக்கங்களில் இரண்டு மகர மீன்கள் காட்சி அளிக்கின்றன. கிரீடத்தின் நடுவே பெரிய மரகதம் ஒன்று எழிலுடன் ஒளி வீசுகிறது. கிரீடத்தின் முன்புறம் வைரககற்களாலும் பின்புறம் சிவப்புக் கற்களாலும் அமைக்கப்பெற்றுள்ளன.

அன்பர்கள் இத்திருக்கோயில் அலுவலகத்தில் 501 ரூபாய் செலுத்தினால், அவர்கள் விரும்பும் நாளில் அம்மனுக்கு வைரக்கிரீடமும், தங்கக் கவசமும் அணிவிக்கப்பெறும்.


வட இந்தியச் செல்வர்கள் வழங்கிய நகைகள், மைசூர் திவான் பூரணய்யா அன்பளித்த பவழத் தாவடம் மற்றும் பலர் காணிக்கையாகக் கொடுத்த முத்து, வைடூரியம், நீலக்கற்கள், ஒட்டியாணம், பச்சை, செப்பு, நவரத்தினங்கள் ஆகியவையும் கிரீடங்கள், கவசங்கள், மகர கண்டிகைகள், பதக்கங்கள், முத்துவிதானம், கப்பல் வணிகர் ஒருவர் செய்து வைத்த மிகப்பெரிய வெள்ளிப்பாத்திரம் முதலியனவும் தங்கத்தாலான குடங்களும் உள்ளன.



மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணக் காட்சி




திருமலை நாயக்கரும் அவரது துணைவியரும்




மீனாட்சி அம்மனின் முத்துக்கவசம் (முன்புறம்)



மீனாட்சி அம்மனின் முத்துக்கவசம்(பின்புறம்)




அம்மனுக்கு அணிவிக்கும் முத்து—வைரப் பதக்கங்கள்



அம்பாளின் ரத்ன ஸ்ரீ பாதம்



சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமக்கும்பொழுது
உபயோகிக்கும் தங்கக்கூடை—மண்வெட்டி



பட்டாபிஷேக கிரீடம்

1978 ஆம் ஆண்டு மதிப்பு

கிரீடத்தின் கற்கள் விவரம்

	கிரீடத்தின் மொத்த எடை	3,645 கிராம்
	பொன் எடை	3,415 கிராம்
	கிராம் ரூ. 50 வீதம் மதிப்பு ரூ.	1,70,750
1	பெரிய குச்சை சிவப்பு சுமார் 8 கியாரட்—கியாரட் ரூ. 1,500 வீதம் — ...	12,000
2	1 பெரிய ஜாத் சதுரப் பச்சை சுமார் எடை 7 கியாரட்— கியாரட் ரூ. 3000 வீதம்	21,000
	21 பெரிய, சிறிய உலாந்தா வைரம், பச்சை வைரம் மதிப்பு	20,300
3327	வைரங்கள் (சிறியது, பெரியது சுமார் மொத்த எடை 432 கியாரட், கியாரட் ரூ. 2750)	11,88,000
4195	சிவப்பு பட்டைக் கற்கள் சுமார் மொத்த எடை 680 கியாரட், கியாரட் ரூ. 40 வீதம்	27 200
7525	ஆக	ரூ. 14.39,250

தங்க ரதம்

இத்திருகோயிலுக்குத் தங்கரதம் இல்லாத குறை, உலகத் தமிழ் மாநாட்டின்போது நிறை வேற்றப் பெற்றது. பக்தர்களுடைய நீண்டநாள் விருப்பத்தின் பயனாக, பதினான்கு இலட்சம் ரூபாய்ச் செலவிலும், அறங்காவலர் குழுத் தலைவரின் இடை விடாத முயற்சியாலும் மேற்பார்வையாலும் மிகக்

கவர்ச்சியான முறையில் செய்யப்பெற்ற தங்கரதம் 8-2-1981 அன்று வெள்ளோட்டம் விடப்பட்டது.*

இத்திருக்கோயில் அலுவலகத்தில் 1,001 ரூபாய் செலுத்தி அன்பர்கள், தாங்கள் விரும்பும் நாளில் உற்சவ மீனாட்சி அம்மனைத் தங்க ரதத்தில் நான்கு ஆடி வீதிகளிலும் வலம்வரச்செய்து இம்மை மறுமைப் பயன்களை அடையலாம்.

ஆலவாய்

ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயி லுறையும்எம் மாதியே!

—திருஞானசம்பந்தர்

ஆல மரத்தை முகப்பில் எல்லையாகக் கொண்ட காட்டில், இறைவன் ஆணையிட்டபடி தலையும் வாலும் கூடுமாறு ஆலகால நாகம் வளைத்துக் காட்டி இக்கோயில் கட்டப்பட வேண்டிய இடத்தைச் சுட்டிற்று.

தங்கரதத்தின் மதிப்பு

*மரங்களின் மதிப்பு	10,660
தங்கம் 6 கிலோ 964 கிராம் அன்றைய மதிப்பு கிராம் 1—க்கு ரூ 158 வீதம்	11,00,312
வெள்ளி சுமார் 87 கிலோ 667 கிராம் 1980 இல் மதிப்பு 10 கிராம் ரூ. 28.50 வீதம்.	2,49,850
செம்பு 222 கிலோ 400 கிராம் மதிப்பு	14,002
கூலி, மின் இணைப்பு, பிற செலவுகள்	32,248
ஆக	ரூ. 14,07,072

இந்நிகழ்ச்சி பற்றியே, மதுரை மாநகர் ஆலவாய் என்னும் பெயர் பெற்றது.

''ஆலவாய் அண்ணல் கோயில்'' தாமரைப் பொகுட்டாகவும் சுற்றியுள்ள தெருக்கள் தாமரை இதழ்களாகவும் இருந்ததாகப் பரிபாடல் உருவகம் செய்கிறது.

தென் திருவாலயுடையார் கோயில், வடதிருவால யுடையார் கோயில் என்ற பெயர்களிலும் மதுரையில் கோயில்கள் உள்ளன. வைகைக் கரைக்குத் தெற்கே தென் திருவாலவாய நல்லூர், வைகைக்கு வடக்கே மேலக்கால் அருகே (வட) திருவாலநல்லூர் என்னும் சிற்றூர்கள் இருக்கின்றன.

''அண்ணல் ஆலவாய்—நண்ணி னால்தனை
எண்ணியேதொழத் திண்ணம் இன்பமே''

என்று பாடிப் பரவுகிறார் திருஞானசம்பந்தர்.

கல்வெட்டுகளில் (1) திருவாலவாயுடை நாய னார், (2) திருவாலவாயுடையார், (3) திருவாலவா யுடைய தம்பிரானார் என்ற பெயர்கள் காணப்படு கின்றன. இத்தலத்தின் வரலாறு கூறும் நூல்களில் ஒன்று, திருவாலவாய் மான்மியம் என்பதாகும்.

நான்மாடக்கூடல்

''உலக மொருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க—உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்.''

—பரிபாடல்

''பஞ்சவன்றன் நான்மாடக் கூடலில் கல்வலிது''
—ஔவையார்

''மைந்தரோ டுடி மகளிர் திமிர்ந்திட்ட
குங்கும ஈரஞ்ச ந்தின் சேறிழுக்கி—எங்கும்
தடுமாற லாகிய தன்மைத்தே தென்னன்
நெடுமாடக் கூடல் அ௨ம்''

என்பதும் ஒரு பழம்பாடல்.

சங்கப் புலவர்கள் உவப்பத் தலைக்கூடும் இடமாக இருந்ததால், மதுரை 'கூடல்' என்னும் பெயரும் பெற்றது.

கூடல் என்ற சொல்லுக்கு 'ஒன்றுசேர்தல்' என்பது 'பொருள். கடற்கோள்களால் சிதறுண்ட பாண்டிய வமிசத்தின் பலவளங்களும் மீண்டும் இணைந்து ஒன்றுகூடிய இடம் 'கூடல்' ஆயிற்று என்பர்.

வளங்கள் அனைத்தும் ஒருங்கே நிறைந்திருந்ததால் ,நெடுமாடக் கூடல்' என்று சிறப்பான அடைமொழிகளுடனும் இந்நகர் விளங்கிற்று.

மதுரைக்கு வழங்கும் பல பெயர்களில் சிறப்பானது, நான்மாடக்கூடல் என்பது. கன்னி, கரிமால், காஸி, ஆலவாய் ஆகிய நான்கு மாடங்களும் கூடியதால் ஏற்பட்ட பெயர் என்பது ஒரு கருத்து. மாறுபட்ட கருத்தும் உண்டு.

மதுரையை அழிக்கக் கருதிய வருணன், கடலை ஏவினான். உடனே சிவபெருமான் நான்கு மேகங்களை அழைத்துக் கடல்நீரைக் குடித்துவிடுமாறு பணித்தார். அவை அவ்வாறே செய்தன.

பின்னர், வருணன் பெருமழை பெய்யச் செய்தான். நான்கு மேகங்களும், நான்கு மாடங்களாகி மதுரையைக் காப்பாற்றின. அதனால் நான்மாடக் கூடல் என்ற பெயர் இத்தலத்துக்கு உண்டாயிற்று.

மீனாட்சி அம்மன் அரசு செலுத்திய காரணத்தால் மீனாட்சிபட்டினம் என்ற பெயரும் இக்கோயிலுக்கு உண்டு.

கோயில் உலா

இனி கோயிலுள் நுழைவோம். சித்திரை வீதிகள் நான்கிலும் அமைந்துள்ள மதில் சுவர்களின் நீளம் கிழக்கிலிருந்து மேற்கே 920 அடி. தெற்கிலிருந்து வடக்கே 740 அடி.இதனுள் அடங்கியது 15 ஏக்கர் பரப்பளவு ஆகும். கோயிலை வலம் வந்தால் சரியாக ஒரு கிலோமீட்டர் தொலைவு நடந்ததற்குச் சமமாகும்.

ஆடிவீதிகளில் திருக்கோயிலாரும் ஏனைய நிறுவனங்களும் மக்களை நல்வழிபடுத்த சமயச் சொற்பொழிவுகள், கதா காலட்சேபங்கள், இசை நிகழ்ச்சிகள், திருமுறைப் பாராயணங்கள் ஆகியவற்றை நடத்திய வண்ணமிருப்பது இக்கோயிலின் சிறப்புக் கூறு ஆகும்.

கரிக்குருவிக்கும் பன்றிக் குட்டிகளுக்கும் அருள் பாலித்த அம்மையும் அப்பனும் மன்பதை வளர மக்கட்கும் அருள்சுரக்கக் காத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

2. கோயில் உலா

கோபுரங்களை வழிபட்ட பிறகு, இறைவழி பாட்டிற்குத் தேவையான தேங்காய், வெற்றிலை பாக்கு, ஊதுபத்தி, குங்குமம், திருநீறு, பழங்கள், சூடம், மாலை முதலியவற்றை வாங்கிக்கொண்டு முறைப்படி, கோயிலுக்குள் செல்லுவோம்.

அஷ்டசக்தி மண்டபம்

கீழ்ச்சித்திரை வீதியிலிருந்து அம்மன் சந்நிதிக்குச் செல்லுவதற்குரிய மண்டபம் இது.

தெற்கேயும் வடக்கேயுமாக மொத்தம் எட்டுத் தூண்கள் உள்ளன. தென்புறத்தில் கௌமாரி ரௌத்திரி, வைணவி, மகாலட்சுமி வடிவங்களும் வட புறத்தில் எக்குருபனி, சாமளை, மகேசுவரி, மனோன் மணி உருவங்களும் தனித்தனித் தூண்களில் வடிக்கப் பெற்றுள்ளன. இந்தச் சக்திகளை வணங்குபவர்களும் பெயர்களை நினைப்பவர்களும் எல்லா நலங்களும் பெறுவர் என்பது சக்தி வழிபாட்டில் ஈடுபாடு உள்ள வர்களின் நம்பிக்கை.

இம்மண்டபத்தில் மீனாட்சி அம்மனின் அவதாரக் குறிப்புகள் சுதைச் சிற்பங்களாகத் தெரிவிக்கப்

பட்டுள்ளன. மீனாட்சி அம்மனின் பிறப்பு முதல் திருமணம் வரையுள்ள வரலாற்றை வண்ண ஓவியங்களாகச் சித்திரிக்கப் பெற்றிருப்பதைப் பார்க்கலாம்.

இந்த மண்டபம் திருமலைநாயக்கரின் பட்டத்துத் தேவியரான உருத்திராபதிஅம்மாள், தோளியம்மாள் என்ற இருவராலும் கட்டப்பெற்றது.

நம் நாட்டின் வடகோடியிலுள்ள அமிர்தசரசில் சீக்கியருடைய பொற்கோயிலுக்கு வருகைதரும் அனைவர்க்கும் இலவசமாக உணவு படைக்கப்படுவதைப் பலரும் அறிந்திருக்கலாம். அவ்வாறே இத் திருக்கோயிலுக்கு வெளியூரிலிருந்து வழிபாட்டுக்கு வருபவர்களுக்கு உணவு படைக்கும் அறச்சோற்று நிலையமாக இம்மண்டபம் திருமலை நாயக்கர் காலத்துக்கு முன் பயன்பட்டது. பிறகு கீழச் சித்திரை வீதியின் தொடர்ச்சியாகத் தெற்கு ஆவணிமூலவீதி முனைவரையும் சோற்றுக்கடைகள் ஏற்பட்டு, அப்பகுதி 'சோற்றுக்கடைத் தெரு' ஆயிற்று. அக் காலத்திலிருந்து, வழிபாட்டிற்குத் தேவையான தேங்காய், பழம்முதலியவற்றின் விற்பனை இம்மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

தெற்கே உள்ள வல்லபகணபதியையும், வடபுறத்தில் உள்ள சண்முகரையும் வழிபட்டு இணைப்பு மண்டபத்திற்குச் செல்லுவோம்.

மீனாட்சி நாயக்கர் மண்டபம்

தேங்காய் மற்றும் பழக் கடைகள் உள்ள அஷ்ட சக்தி மண்டபத்திலிருந்து பூக்கடைகளும், பொம்மைகள் முதலிய பல பொருள்கள் விற்கும் கடைகளும் நிறைந்த இந்தமண்டபத்திற்குள் நுழைகிறோம். இது

160 அடி நீளமுள்ளது. ஆறு வரிசைகளில் தூண்கள் கொண்ட பெரிய பரப்பு (48×33மீட்டர்).

இம்மண்டபத்தின் நாற்சந்தியான பகுதியில் நின்றுபார்த்தால், மேல் விட்டத்தில் மேஷம், ரிஷபம் முதலிய 12 ராசிகளின் சதுரம் பொறிக்கப்பெற் றிருப்பது தெரிகிறது.

திருமலை நாயக்கரின் அமைச்சருள் ஒருவரான மீனாட்சி நாயக்கர் இந்த மண்டபத்தைக் கட்டியவர் ஆவர்.

இங்கிருந்து தெற்கே திரும்பி, கிழக்கு ஆடி வீதிக்குச் செல்லுவோம்.

வன்னியும் கிணறும் லிங்கமும்

ஒரு வணிகப் பெண் இறைவனுடைய திருமகன் ஒருவனைத் திருமணம் செய்துகொண்டாள். பிறகு யாராவதுசான்றுகேட்டால், சிவபெருமானைச்சாட்சி யாக வரவேண்டும் என்று அவள் வேண்டினாள். வணிகப் பெண்ணுக்காக, இப்பெருமான் வன்னியும் கிணறும் லிங்கமுமாகக் காட்சியளித்தார். கல்லால் ஆன வன்னிமரமும் கிணறும் லிங்கமும் இப்போது சுவாமி சந்நிதி முதல் பிரகாரத்தில் உள்ளன. இந்த இடத்தில் இருந்த வன்னிமரத்தையும் லிங்கத்தையும் திருமலை நாயக்கர் கிழக்கு ஆடிவீதிக்கு மாற்றி அங்கு ஒரு கிணறு வெட்டி விநாயகரைப் பிரதிட்டை செய் தார். இந்த வன்னி விநாயகரை வழிபட்டு மீண்டும் னாட்சி நாயக்கர் மண்டபத்துக்கு வருவோம்.

பித்தளைத் திருவாச்சி

1,008 விளக்குகள் உடைய இந்தத் திருவாச்சி, விடுதலை வீரர்களும் சிவகங்கை அரசர்களுமான மருது சகோதரர்களால் வழங்கப் பெற்றது. திருக் கார்த்திகை அன்று மட்டும் அந்த விளக்குகள் எல்லாம் ஏற்றப்படுகின்றன. ஏனைய நாட்களில் ஒரு விளக்கு மட்டும் பொருத்தப்படுகிறது.

1008 என்ற எண், சிவத்தலங்களின் எண்ணிக் கையைக் குறிப்பது.*

முதலி மண்டபம்

இம்மண்டபம் கடந்தை முதலியார் என்பவர் கட்டியது என்பர். இங்கு சிவபெருமான் பிட்சாடன ராய், தருகாவன முனிவருக்கு உபதேசித்த வரலாறு பல சிலைகள் மூலம் விவரிக்கப் பெற்றுள்ளன, மோகினியின் சிற்பத்தில் ஆடை மடிப்புகள் எடுப்பாக உள்ளது கூர்ந்து கவனிக்கத் தக்கது.

பொற்றாமரைக் குளம்

இக்குளத்தை வலம் வந்து கிளிக்கட்டு மண்டபத் தின் வழியே அம்மன் சந்நிதியை அடைவோம்.

இதன் அகலம் 165 அடி. 240 அடி நீளம். பரப் பளவு ஏறத்தாழ ஒரு ஏக்கர்.

---

*மூவர்கவி முந்நூறு முன்சோழ னைந்நூறு
நாவலர்மா ணிக்கர்தல நாற்பத்தெட்—
டோவறுசீர்
நூதனசி வாலயங்க ளூற்றறுப துங்கூட
ஓதவரு மாயிரத்தெட் டோர்.

எல்லாக் கோயில்களுக்கும்தான் தெப்பக்குளம் இருக்கிறது. ஆனால் இந்தக் குளம், கோயில் தோன்றிய காலத்துக்கு முற்பட்டது. மூலலிங்கமாகிய சொக்கலிங்கத் திருமேனியைத் தனஞ்செயன் இக் குளத்திலேயே கண்டதாகவும் கூறுவர். அவ்வணிக னுடைய உருவமும் சொக்கலிங்கப் பெருமானுடைய கருவறையைக் கட்டிய பாண்டியனின் உருவமும் இந்தக் குளத்தின் வடகரையில் ஒரு தூணில் பொறிக் கப் பெற்றிருக்கின்றன. இதனால் இந்தப் படித்துறை, பாண்டியன் படித்துறை என்ற பெயரால் வழங்கி வருகிறது.

மலரின் மையப் பகுதி அரசனது அரண்மனை யாகவும், மலரிலுள்ள மகரந்தத்தூள் நகரில் வாழும் மக்களாகவும் ஆலவாய் அண்ணல்கோயில் தாமரைப் பொகுட்டாகவும், சுற்றிலுமுள்ளதெருக்கள் தாமரை இதழ்களாகவும் பரிபாடலில் உருவகம் செய்யப்பட் டிருக்கிறது.

''மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு, புரையும் சீரூர், பூவின்
இதழகத் தனைய தெருவும், இதழகத்து
அரும்பொருட்டு அனைத்தே அண்ணல் கோயில்''

—பரிபாடல்—7

இக்காரணம் பற்றியே தாமரைக் குளமாக இது அமைந்தது. பொன் நிறமாகத் தாமரையின் இதழ் கள் காட்சியளித்ததால் பொற்றாமரைக்குளம் என்ற பெயர் உண்டாயிற்று எனப் பழைய நூல்கள் கூறு கின்றன. இந்திரன் அந்த ம்லர்களை எடுத்துக் கடவுளர்க்குப் பூசைசெய்ததாக வரலாறு. இப்போது பொன்நிறம ான தாமரைபலரின் உருவம்மிதக்கவிடப்

பட்டிருக்கிறது. தவளையும் மீனும் இக்குளத்தில் இல்லாதது குறிப்பாகக் கவனிக்கத்தக்கது.

தாமரை இந்தியப் பண்பாட்டில் உயர்ந்து விளங்குகிறது இந்து சமயத்தை ஒட்டி வளர்ந்திருக்கும் புராணங்களிலும், கதைகளிலும் அடிப்படையான சிறப்பு தாமரை மலருக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறது. கடவுளின் திருவடிகளைத் திருவடித் தாமரை என்றுதான் குறிப்பிடுவது மரபு.

தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் அரங்கேற்றிய பெருமை இக்குளத்தைச் சேரும். இதனாலேயே,

''தவளத் தாமரை தாதார் கோயில்
அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே''

என்ற பாடல் பிறந்தது.

இந்தக் குளத்தின் கரையிலேயே திருக்குறள் அரங்கேற்றப்பெற்றது. குளத்தின் வடபுறத்தில் காணப்படும் சிறிய பாலமே திருவள்ளுவருக்குரிய சங்கப் பலகை மிதந்த இடம் எனக் கூறுவர்.

குளத்தின் தென்புறத்தில் சுவரில் வெண்சலவைக் கற்களில் 1330 அருங்குறள்களும் பொறிக்கப் பெற்றுள்ளன.

தலத்துக்குரிய தேவாரப்பதிகங்களும் திருவாசகப் பாடல்களும் மற்றும் சிவஞான போதம், அபிராமி அந்தாதி ஆகியவையும் இவ்வாறேஇச்சுவரில் சலவைக் கல்லில் பொறிக்கப்பெற்றுள்ளன. குளத்தின் தென் கிழக்கு மூலையிலிருந்து சுவாமி கோயில், அம்மன் கோயில் தங்க விமானங்களை வழிபடலாம்.

சங்ககாலத்தில் புலவர்கள் தங்கள் படைப்புக் களை—எழுத்தாணியால் எழுதிய ஏடுகளை இங்குக் கொண்டுவந்து, ஏனைய புலவர்களிடம் படித்துக் காட்டுவர். பிறகு அந்த ஏடுகளைப் பொற்றாமரைக் குளத்துள் போடுவர். தாமரை தாங்கிக் கொண்டால் நல்ல நூல்; தண்ணீரில் ஏடுகள் மூழ்கிவிட்டால், சங்கப் பலகை அந்த நூலை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கருதப்பெற்றது.

பொற்றாமரைக் குளத்தின் வடகரையில் உள்ள மண்டபத்தின் தூண்களில் கடைச்சங்கப் புலவர்கள் உருவங்கள் கையில் ஏடும் எழுத்தாணியும் உடைய கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளன.

இத்திருக்குளத்தில் எந்த நேரமும் ஏராளமான ஆடவரும் பெண்டிரும் நீராடுகின்றனர். ஈர உடை உடுத்தியவாறு, அவர்கள் படியேறி தென்மேற்கு மூலையில் திருவாலவாயன் திருநீறு நிறைந்த தொட்டிக்குள் பிரதிட்டை செய்யப்பெற்ற விநாயகனர வணங்கி நெற்றி நிறைய நீறு அணிவர். ஞானசம்பந்தப் பெருமான் திருநீற்றுப்பதிகம் பாடிய பதி அல்லவா?

செவ்வந்தீசுவரர் கோவில் : இது 16ஆம் நூற்றாண்டில் செவ்வந்தி செட்டியார் என்பவர் அமைத்த சிவன் கோயில். பொற்றாமரைக் குளத்தின் தென் மேற்கு மூலையில் உள்ளது. இந்த மூலையில் நின்ற வாறு கோபுரங்கள் பலவற்றைக் காணலாம். செவ்வந்தீசுவரர் கோயில் வளாகத்தில் வில்வக்

கன்று வளர்க்கும் நந்தவனமும் அறங்காவலர்களின் அலுவலகமும் உள்ளன. இந்த இடத்தில், இத்திருக் கோயிலின் முழு அமைப்பையும் நெட்டி வேலைப் பாடாகக் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டுள் ளது. இது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இவ்வாறே சங்கிலி மண்டபத்தில் உள்ள முருகன் சந்நிதிக்கு அருகே தங்கத் தேரின் மாதிரி வடிவம் ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் காட்சியில் வைக்கப் பெற் றிருக்கிறது. மாதிரியைப் பார்த்ததுமே அசலைக் காணத் துடிக்கிறோம். அம்மன், சுவாமி சந்நிதிகளில் வழிபாடுகளை முடித்துக்கொண்ட பிறகு, கிழக்கு ஆடி வீதிவழியே திருக்கல்யாண மண்டபத்துக்குச் சென்று தங்கத் தேரைத் தரிசித்து மனநிறைவு அடையலாம். இந்தத் தேரில் அம்மன் பவனி வரும் போது வழிபடுவது சாலச் சிறந்தது.

ஊஞ்சல் மண்டபம்

வெள்ளிக்கிழமைதோறும் இறைவன்-இறைவியர் திருவுருவத்திருமேனிகளை இங்குள்ள ஊஞ்சலில் வைத்து ஊஞ்சலாட்டுவர்.

ஊஞ்சல் மண்டபத்துத் தூண்களில், திருக்கோயி லுக்குச் செல்லுபவர்கள் இறைவன் இறைவியரை எவ்வாறெல்லாம் வழிபட வேண்டும் என்பதை கல்லிலே செதுக்கிக் கட்டியிருக்கிறார்கள்.

ஊஞ்சல் மண்டபம் ராணி மங்கம்மாவால் அமைக்கப்பெற்றது என்பர். இதற்குஎதிரில், தெப்பக் குளத்தின் மேற்குக் கரையில், ராணி மங்கம்மாள் நாயக்க அரசர்களின் தளவாயாக இருந்த இராமப்ப .

அய்யர் ஆகியோருடைய உருவங்கள் கொண்ட ஒரு மண்டபம் உள்ளது.

சங்கிலி மண்டபம்

கலைநுணுக்கம் நிறைந்த தூண்களைக் கொண்டு இந்த நீண்ட மண்டபம் அபிடேக பண்டாரம், திம்மப்ப நாயக்கர், செட்டியப்ப நாயக்கர் என்பவர்களால் திருப்பணி செய்யப்பெற்றது.

சுக்கிரீவன், வாலி, கிராதார்ச்சுனர் முதலிய சிற்பங்கள் தூண்களில் இருப்பதால், இந்தத் தூண்கள் ஏற்கனவே இக்கோயிலில் சொக்கர் கருவறைக்கு வடக்கே இருந்ததாகக் கூறப்படும் கரியமாணிக்கப் பெருமாள் கோயில் தூண்களாக இருக்கக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர். மாறுபட்ட கருத்தும் உண்டு.

சித்தி விநாயகர்

இந்த விநாயகர், இத்திருக்கோயிலுக்கு மிக முக்கியமான விநாயகர் ஆவார். இவரை வழிபட்ட பிறகு பலிபீடத்திற்கு அருகே செல்லவேண்டும்.

பலி பீடம்

நாள்தோறும் காலை 6—30 மணி அளவில் பலி பீடத்திற்கு, 'தமிழ் கண்டதோர் வைகை' ஆற்றிலிருந்து கொண்டுவரப்பட்ட நீரால் அபிடேகம்செய்யப் படுகிறது.

பலிபீடத்தின் முன் நிலந்தோய விழுந்து வணங்கி விட்டு வேம்பத்தூர் தாண்டவநம்பி அமைந்த மூன்று நிலைக் கோபுரத்தின் வழியாக அம்மன்கோயிலுக்குள் நுழைகிறோம். இந்தக் கோபுரத்தின் குடைவரைப்

பகுதிகளில் மீனாட்சி அம்மனின் பட்டாபிஷேகக் காட்சியும், திருக்கல்யாணக் காட்சியும் உள்ளன. இந்த வண்ண ஓவியங்கள் ராணி மங்கம்மாள் காலத்தில் வரையப்பெற்றன என்று தெரிகிறது.

ஆறுகால் பீடம்

கொடிமரத்துக்கு அருகே நின்று அம்மனை நினைத்து வழிபட்டு உண்டியலில் காணிக்கை செலுத்திய பிறகு ஆறுகால் பீடத்தை அடைகிறோம்.

ஆறுகால் பீடத்தின் அடிப்பகுதியில் உள்ள இசைக் கருவிகளின் சிற்பங்களும், மேற்பகுதியின் அரிய கொடுங்கைகளும் தளத்தில் உள்ள செம்பாலான துவார பாலகியரும் நம் கவனத்தை ஈர்க்கின்றன.

இந்தப் பீடம் வரலாற்றுச் சிறப்புடையது, பட்டாபிஷேக விழா நடைபெறும் இடமும் இதுவே.

இந்தப் பீடத்தில்தான்குமரகுருபரர்மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழைப் பாடினார். இந்த நிகழ்ச்சியை இந்நூலில் 'அருட்செயல்கள்' என்ற தலைப்பில் குறிப்பிட்டிருக்கிறோம். பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் சலவைக் கல்லில் பொறித்து, இந்தப் பீடத்தின் சுவர்களில் பொருத்தப்பட்டுள்ளன.

மதுரையில் இருந்தபோதுதான் (1) மதுரைக் கலம்பகம், (2) நீதிநெறி விளக்கம், (3) மதுரை மீனாட்சியம்மைக் குறம். (4) மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை ஆகிய நூல்களையும் குமரகுருபரர் இயற்றினார்.

அன்னை அங்கயற்கண்ணி

தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
　　தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
　　சுவையே! அகந்தைக் கிழங்கை அகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
　　கேற்றும் விளக்கே! வளர்சிமய
இமயம் பொருப்பில் விளையாடும்
　　இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
　　ஒருவன் திருவுள்ளத்தில் அழ(கு)
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
　　உயிரோ வியமே! மதுகரம் வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
　　வஞ்சிக் கொடியே! வருகவே
மலையத் துவசன் பெற்ற பெரு
　　வாழ்வே ! வருக வருகவே !

—குமரகுருபரர்
(மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்)

மீனாட்சி அம்மனின் சிறப்பு

இக்கோயிலில் அம்மைக்கே முதன்மை உண்டு. கோயிலுக்கு வருபவர்கள் அம்மன் சந்நிதி வழியாகக் கோயிலுக்குள் நுழைந்து, அம்மனை வழிபட்ட பிறகு சொக்கரை வணங்கி மீண்டும் அம்மன் சந்நிதி வழியாகவே வீட்டுக்குத்திரும்புவது மரபு. இறைவனுடைய சந்நிதிக்கு முன் உள்ள கிழக்குக் கோபுரத்தின் வழியாக விடைபெறும் பழக்கம் இத்தலத்தில் இல்லை.

கோயிற் பூசைகளும் அம்மனுக்கு நடைபெற்ற பிறகே இறைவனுக்குச் செய்யப் பெறுவது நடைமுறையாகும்.

நின்ற திருக்கோலத்தில் காட்சி வழங்கும் ஒப் பற்ற அன்னை, கயல் போன்ற அழகிய கண்களைப் பெற்றிருப்பதால், ''அங்கயற்கண்ணி'' என்றும் மீனக் கொடிக்கு உரியவள் ஆதலால் ''மீனாட்சி'' என்றும் போற்றி வணங்கப் பெறுகிறாள். மீன், முட்டை களைப் பார்வையாலே தன்வயப்படுத்தி, குஞ்சு பொரிப்பது போல, அன்னை மீனாட்சியும், தன்னை வழிபட வரும் அடியார்களின் துன்பங்களையும் ஊழ் வினைகளையும் அருட்பார்வையால் அகற்றி, அவர் களுக்கு அருள் பாலிக்கிறாள்.

அங்கயற்கண் நாயகி, அபிடேகவல்லி, தடா தகைப் பிராட்டி, மாணிக்கவல்லி, தமிழறியும் பெரு மாட்டி என்ற பெயர்களும் இந்த இறைவிக்கு வழங்கப் பெறுகின்றன.

தமிழ் அர்ச்சனை

இந்தக் கோயிலில் அர்ச்சனைகள் தமிழில் நடை பெறுகின்றன. வடமொழியில் அர்ச்சனை செய்ய விரும்புபவர்கட்கு எவ்விதத் தடையுமின்றி அவர் களுடைய வேண்டுகோள் நிறைவேற்றி வைக்கப் படுகிறது.

தமிழ் மதுரையில், மிகுதியான மக்கள் விரும்பிக் கேட்பது தமிழ் அர்ச்சனையே ஆகும்.

அம்மனின் திருவுருவம்

அருள்மிகு மீனாட்சி அம்மன் திருவுருவத்தைப் பார்த்த கண்களை எடுக்க மனம் வராது. எவ்வளவு

நேரம் வேண்டுமானாலும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். இந்த இறைவியின் புன்னகையும் பொன்னகையும் அத்தகையன. அம்மனுக்கு வழிவழியாக வகை வகையான பொன்நகைகளை, தலைமுறை தலைமுறையாகச் செய்ததால், மதுரை மாநகரம் தொன்று தொட்டு, அணிகல வாணிபத்தில் ஈடு இணையற்ற நகரமாக இலக்கியங்களில் பேசப்படுகிறது. இன்றைய நிலையும் அதுவே. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னும், இந்த நகரத்தில் நகை வாணிபம் செழித்திருந்தது. இன்றேல், பத்தினித் தெய்வமான கண்ணகியின் விலைமிக்க காற்சிலம்பை விற்க, சோழ நாட்டிலிருந்து கோவலனும் கண்ணகியும் மதுரைக்கு வருவானேன்?

மேலும் அன்னை மீனாட்சி பாண்டிய அரசனின் மகளும் ஆவாள்.

செங்கோல் செலுத்தியதால், பட்டாபிஷேகமும் செய்து கொள்ளும் பெருமாட்டியாக விளங்குகிறார்.

கணவனாகிய இறைவனிடம் சொல்லி அன்பர்களுக்கு அருள் வழங்குவதோடன்றித் தாமே அருள் பாலிக்கவும் வல்லவள் அன்னை அங்கயற்கண்ணி. அதனால்தானே ஒவ்வொரு மங்கையும், மீனாட்சியாக வாழ விரும்பிப் பிரார்த்தனை செய்கிறாள். மங்கையருள் மீனாட்சி ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவள்.

''அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்'' என்றார் மதுரையில் சில காலம் வாழ்ந்த மகாகவி சுப்பிரமணிய பாரதியார். ''ஆதார சக்தி என்றே அருமறைகள் கூறும்'' என்றும் சொல்லி வைத்து, சக்தி வழிபாட்டின் தொன்மையைப் பலப்

படுத்தியிருக்கிறார். சக்தி வழிபாடு தொல்காப்பியக் காலத்திலிருந்தே—அதாவது 4,000 அல்லது 5,000 ஆண்டுகட்கு முன்னரே—தமிழ் நாட்டில் நிலவி வந்திருக்கிறது.

கொண்டையில் முத்துக் கொண்டை என்ற அணி கலனும், தலையில் மணிமுடிஅல்லது கல்யாணகிரீடம், மூக்கில் மாணிக்க மூக்குத்தி, காதுகளில் சூரிய சந்திர தோடுகள், நெற்றியில் குங்குமம் அணிந்தவள் அன்னை மீனாட்சி.

மின்னலென ஒளியுமிழும் மேன்மைமிகு கண்கள். எத்தனையோ முடி மன்னர்களை வணங்க வைத்த **'செங்கயல் நெடுங்கண் அங்கயற் கண்ணியின் மங்கலஅழகைப் பார்க்கப் பல்லாயிரம் கண்கள் வேண்டும்!'** என்பர் புலவர்.

புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாய், முழுமதியை விஞ்சும் மோகன வடிவழகு. அருள் நோக்கால் அடியவர்தம் ஊழ்வினையை மாற்றி உலவாதபேரின்ப வாழ்வுதரக் காத்திருக்கும்—காத்து நிற்கும்—வாழ்வரசி அங்கயற்கண்ணி என்ற உணர்ச்சி எதிரே நிற்பவர்க்கு உண்டாகிறது.

மங்காப் புகழ் மதுரையில் வரலாற்று மாட்சி யுடன் வாழ்ந்திடும் அன்னை அங்கயற்கண்ணி உலகில் வாழும் உயிர்கள் அனைத்திற்கும் இன்றியமையாத அறம், பொருள், இன்பங்களை நல்குகிறாள். நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து நன்னெறியில் நிற்கும் உயிர்களின் மும்மலக்கட்டு அறுத்ததற்குத் துணைபுரிபவளாகவும் உள்ளாள். பக்குவம் அடைந்த

ஆன்மாவில் மெய்ஞானச் சுடர்விளக்கு ஏற்றுபவளாக வும் காட்சி தருகிறாள்.

சைவ சித்தாந்தக் கொள்கை

சொக்கர் மீனாட்சியோடு அபின்னமான சக்தி. அங்கயற்கண்ணியுடன் ஆய ஆலவாய் அண்ணல் என்பதே அவருக்குரிய சிறப்பு. எனவே, சொக்க ருக்கும் மீனாட்சிக்கும் வேறுபாடு இல்லை. இது தமிழருடைய சைவ மதம். ஒரே பரம்பொருள், அப்ப னாக சொக்கநாதராகவும் அம்மையாக மீனாட்சி யாகவும் காட்சி தருகிறார். இந்தத் தத்துவ நுட்பம் சைவ சித்தாந்தம் அறிந்தவருக்கே நன்கு புலப்படும்.

அன்னபூரணி, பராசக்தி, விசாலாட்சி, காமாட்சி என்பன எல் ாம் சக்தியின் கோலங்களே. ஓர்அவசரம் நிலை என்று சமய பரிபாஷையில் சொல்லுவார்கள்.

அம்மனுக்கு நடக்கும் விழாக்களில் எல்லாம் இறைவனுக்கும் பல சிறப்புக்கள் செய்யப்படுகின்றன. அம்மனுக்கு வைரக்கிரீடம் அணிவிக்கும்போது, சொக்கருக்கு நாகாபரணமும் தங்கத்தில் ஜடாமகுட மும் அணிவிக்கப் பெறுவது இக்கோயில் மரபு. திரு விழாக்களில் சோமசுந்தரக் கடவுள் இன்ன வாகனத் தில் எழுந்தருளும்போது, அங்கயற்கண்ணி இன்ன வாகனத்தில் உலா வரவேண்டும் என்ற வரன் முறை களும் உண்டு. சொக்கருக்கும் மீனாட்சிக்கும் வேறு பாடு இல்லை என்பதே இதில் அடங்கிய ஐதிகம்.

தீப ஆராதனை ஆகிறது. அன்னையின் திரு முகத்தை மீண்டும் வணங்குகிறோம். கன்னங்களில்

போட்டுக்கொண்டு அவள் அருளை வேண்டுகிறோம். நம் வாய், அம்மனின் புகழ் பாட, பட்டர் கொடுக்கும் குங்குமம் நம் நெற்றியை அலங்கரிக்கிறது. தேவிக்கு அணிவிக்கப்பெற்ற பூ, மந்திர சக்தியாலும் தனிச் சிறப்புப் பெற்று அவளுடைய அருளின் புறச்சான்றாக அர்ச்சகர் வழங்க நமக்குக் கிடைக்கிறது. கண்களில் ஒற்றிக்கொள்கிறோம். தேவாரம் இனிமையாக ஒலிக்கிறது; காது பெற்ற பயனைப் பருகுகிறோம்.

அருள் பெறும் முறைகள்

ஏழை எளியவர்கள் குங்குமத்தைக் கொடுத்து அர்ச்சனை செய்து அன்னையை வணங்கலாம்.

தேங்காய், பழம், குங்குமம் முதலியன வைத்து அஷ்டோத்திர (108) அர்ச்சனை செய்தும் அம்மனைப் பற்றிய பாடல்களை வாய்மணக்கப் பாடியும் அன்னையின் அருள் பெறுவது தொன்றுதொட்ட பழக்கம் ஆகும்.

விருப்பமுடையவர்கள் சகஸ்ரநாம அர்ச்சனை செய்யலாம். அம்மனுக்கு மலர் மாலைகளும் பச்சைப் புடைவையும் அணிவித்து மகிழலாம்; லட்சார்ச்சனையும் செய்யலாம்.

பால், இளநீர், பன்னீர், தேன், சந்தன அபிஷேகங்கள் செய்து அன்னை அங்கயற்கண்ணியின் அருளை வேண்டுவதும் நடைமுறையாக இருக்கிறது. பஞ்சாமிர்த அபிஷேகம் செய்விப்பதும் உண்டு. அன்னைக்கு நடத்தப் பெறும் எந்த அபிஷேகத்தையும் பக்தர்களோ நன்கொடையாளரோ பார்க்க இயலாது.

பஞ்ச திப ஆராதனை செய்பவர்களும் உள்ளனர். தங்கக் கவசம், வைரக்கிரீடம் சாத்துபடி விவரங்களை ஏற்கெனவே கூறியிருக்கிறோம்.

கருவறையை, பூக்கூடாரமாக அமைத்து அம்மனுக்குப் பூவால் அலங்காரம் செய்து வழிபடுவதும் ஒரு முறையாக வளர்ந்து வந்திருக்கிறது. முன் அனுமதி மற்றும் கட்டணங்களுக்குத் திருக்கோயில் அலுவலகத்தை அணுகலாம்.

திருமணத்தன்றும், தொடர்ந்தும் ஆண்டுதோறும் அதே நாளில் கணவனும் மனைவியும் அம்மன் சந்நிதியில் மாலை மாற்றி, கருத்தொருமித்தவராய் வழிபட்டு, பேறுகள் எல்லாம் பெற்று வாழ்வாங்கு வாழ்வது கண்கூடாகும்.

தம் மக்களுக்கு எல்லா நலங்களையும்அருள இறைவன் இறைவி இருவரிடமும் பிரார்த்தித்துக்கொள்ளக்கூடிய இடமும் இதுவாகும். காரணம், மீனாட்சியம்மையார், ''கிள்ளைக்கு மழலைப் பசுங்குதலையொழுகு தங்கிளவி கற்பித்தனள், மயிலுக்குக் கிளரிளஞ் சாயலை அளித்தனள்,நவ்விக்கு நோக்கைத் தந்தனள்; அரசு அனப் பறவைக்கு மடநடை பயிற்றுவித்தனள்'' என்பார் குமரகுருபர முனிவர்.

கருவறை அமைப்பு

அம்மனின் அருள்நோக்கும் கொள்ளை அழகும் நம் நெஞ்சில் பதிகின்றன. வேண்டும் வரங்களைக் கேட்டவாறு தெய்வ நினைவுகள் நிரம்பிய பக்திச் சூழலில் முதல் சுற்றில் வலம் வருகிறோம். எந்தத்

திக்கிலும் 25 அடி உள்ள சதுரமாக இந்தக் கருவறை அமைந்திருப்பது நம் கவனத்தை ஈர்க்கிறது

முதற் சுற்று

மண்டபத் தூண்களுக்குப் போர்த்தப்பட்டிருக்கும் பித்தளைத் தகடுகளும், சுற்றுச் சுவர்களில் இப்போது (1983, நவம்பர்) இணைக்கப்பட்டு வரும் மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ்க் காட்சிகளும் பட்டாபிஷேகக் காட்சிகளும் நம் கண்ணைக் கவர்கின்றன.

* இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகிய மூன்று சக்திகளையும் இரட்டை விநாயகர், சண்முகர் ஆகியோரையும் சண்டிகேசுவரியையும் வணங்கிப் பள்ளியறைமுன் சற்று நின்று மீண்டும் அம்மனை வழிபடுகிறோம். பிரார்த்தனைகள் நிறைவேற உண்டியலில் காணிக்கை செலுத்துபவர்களும் உண்டு. நிறைவேறிய வேண்டுகோள்களுக்கு நன்றி செலுத்தும் முகமாகவும் நாணயங்களையும், பொன் அல்லது வெள்ளியாலான ஆபரணங்களையும் உண்டியல் பெட்டிக்குள் அன்பளிப்பாக வழங்குவதும் மரபு. பின்னர் இரண்டாம் சுற்றில் அடியெடுத்து வைக்கிறோம்,

இரண்டாம் திருச்சுற்று

அன்னை மீனாட்சியை வழிபட்டவாறு நின்ற கோலத்தில் காட்சி தருகிறார் மாமன்னர் திருமலை நாயக்கர் தம் பட்டத்தரசியுடன்.

---

* இச்சா சக்தி—காளி; கிரியா சக்தி—துர்க்கை; ஞான சக்தி—கலைமகள் னாட்சி அம்மன், அரச வமிசத்தில் தோன்றியதால், சண்டிகேசுவரிக்கும் இக்கோயிலில் முக்கியத்துவம் இருப்பது இயல்பே ஆகும்.

இப்பெருங்கோயிலுக்கு வாரி வழங்கிய அரசர்களுள் முதன்மையான இடம் பெறுபவர் திருமலை நாயக்கரே, அவர் தொடங்கி வைத்த நவராத்திரி விழா நடத்துவதற்கு கட்டப்பட்ட கொலு மண்டபம் அவர் திருவுருவத்திற்கு எதிரே உள்ளது. பள்ளியறைச் சொக்கர் (சீர் பாதம்) திருமலைக்குக் காட்சி கொடுத்துவிட்டுத்தான் தம் கருவறைக்குச் செல்லுகிறார். இரவில் சீர்பாதம் பள்ளியறைக்குச் செல்லும் போது இந்த நிகழ்ச்சி உண்டு. திருப்பாதங்களையே பள்ளியறைக்கு எடுத்துச் செல்லுவது இக் கோயில் மரபாகும்.

இந்த இரண்டாம் சுற்றில் வேண்டுபவர்க்கு வேண்டியன வழங்கும் உப்பு விநாயகர், அருணகிரி நாதர் திருப்புகழ் பெற்ற கூடல்குமரர் கோயில்கள் உள்ளன.

இனி சுவாமி சந்நிதி நுழைவாயிலில் வீற்றிருக்கும் முக்குறுணி விநாயகர் திருமுன் நிற்போம்.

முக்குறுணி விநாயகர்

இத்திருக்கோயிலில் உள்ள விநாயகர் திருவுருவங்களின் எண்ணிக்கை நூறு இருக்கலாம். இவற்றுளெல்லாம் உருவத்தால் பெரியது முக்குறுணி விநாயகர். அம்மன் சந்நிதியில் வழிபாடுகளை முடித்த பிறகு சுவாமி கோயிலுக்குள் நுழைந்ததும் முதற்கண் இவ விநாயகரை வழிபடவேண்டும். தெற்குச் சித்திரை வீதியிலிருந்து பார்த்தாலும் இவ்விநாயகர் எதிர்ப் படுவார்.

திருமலை நாயக்கர் வண்டியூரில் மாரியம்மன் தெப்பக்குளத்தை வெட்டியபோது இந்தத் திருவுருவம் கிடைத்தது. இதற்குச் சான்றாக இந்த விநாயகர் முன் உள்ள நிலை விளக்குகளில் திருமலை நாயக்கர் உருவத்தையும் அவர் குடும்பத்தாரின் உருவங்களையும் பார்க்கிறோம். அந்தக் காலத்து உலோக வார்ப்புக் கலையின் அருமையை அறிகிறோம்.

ஒரு குறுணி என்பது 4 பட்டணம் படிக்குச் சமம். முக்குறுணி என்பது 12 படி அல்லது 21 லிட்டர். இவ்வளவு அரிசியைக் கொண்டு ஒரே கொழுக்கட்டையாகச் செய்து விநாயக சதுர்த்தி நாளில், இந்த விநாயகருக்குப் படைப்பது மரபு. அதையொட்டியே இவர் பெயர் வழங்குகிறது.

விநாயகர் அருள் பெற விரும்பும் அன்பர்கள், முக்குறுணி விநாயகருக்கு வெள்ளிக் கவசம் அணிவித்தும் சந்தனக் காப்புச் சாத்தியும் வழிபடுகின்றனர். விரும்பும் நாளில், முக்குறுணி அரிசிக் கொழுக் கட்டை படைக்க ஏற்பாடு செய்து வெள்ளைக் கொம்பனை விநாயகரைத் தொழுது இடையூறு நீங்கப் பெற்றவர்களும் உள்ளனர்.

சுவாமிகோயில் இரண்டாம் திருச்சுற்று

முக்குறுணி விநாயரை வழிபட்டதும் மேற்கே சென்று இந்த திருச்சுற்றில் வலம்வந்து, சந்நிதிக்குள் செல்லுவதே முறையாகும்,

இத்திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் நின்று கிழக்கேயும் வடக்கேயும் பார்ப்போம்.

இருமருங்கிலும் வரிசை வரிசையாக நீண்டுயர்ந்த பெரிய தூண்கள் காட்சி தருகின்றன. ஒழுங்குமுறை யான அமைப்பும், சீரான எழிலும் ஒவ்வொரு தூணி லும் சித்தரிக்கப்பெற்றிருக்கும் சிற்பவேலைப் பாட்டின் அருமையும் என்னே! பார்த்தும் நினைத்தும் இன்புறலாம், நமக்கு நேரம் இருக்கும் வரை.

இந்தத் திருச்சுற்றின் மேற்கூரையில் உள்ள வண்ணச் சித்திரங்களும் கோலங்களும் நம்கண்களுக்கு விருந்து படைக்கின்றன.

மண்டபத்தின் தெற்கு, மேற்குப் பகுதிகள் இரண்டு அடுக்குகளாக அமைந்துள்ளன. மேற்குப் பக்கத்தில் உள்ள மேலடுக்கில், 1981-ல் சில மாறுதல் கள் செய்யப்பட்டிருக்கின்றன.

மதுரை மாநகருக்குக் கடற்கரைக் காற்றுப் போன்ற இனிய தென்றலை வழங்கும் மேற்கு ஆடி வீதியிலிருந்து இந்தத் திருச்சுற்றுக்குக் காற்றும் வெளிச்சமும் வரத் தக்கவாறு மாறுதல்கள் அமைந் துள. அவ்விடத்தில் பொருத்தப்பட்டுள்ள இரும்புக் கிராதிகளிலும் சிவ வழிபாட்டை நினைவூட்டும் உரு வங்களும் இசைக் கருவிகளின் வடிவங்களும் இடம் பெற்றிருப்பது பக்தர்களின் பார்வைக்கு உரியது.

பராசக்தி கோயில்

இந்தத் திருச்சுற்றின் வடமேற்கு மூலையில் பராசக்தி கோயில் உள்ளது.

தவறு செய்தவர்கள் இந்த அம்மன் முன்னிலை யில் தாங்கள் செய்த பிழையை உணர்ந்து, மனமார

வருந்தி வேண்டுவர். இந்த அம்மன் மன்னித்து அவர் களுக்கு அருள் புரிந்து வருகிறார்.

அடுத்து இருப்பது சங்கத்தார் கோயில்.

சங்கத்தார் காயில்

நாதன் விளையாட்(டு) அறுபத்து
நாலு நடத்துந் தமிழ்மதுரை
நாலா யிரத்து நானூற்று
நாற்பத் தொன்ப தருட்புலவர்
ஓதுந் தலைச்சங் கத்தினுக்கும்
உயர்நா னூற்று நாற்பதுடன்
ஒன்ப தான தமிழ்ப்புலவர்
ஒழியா இடைச்சங் கத்தினுக்கும்
வேத நிகர்நக் கீரர்முதல்
விரிவா நாற்பத் தொன்பதுபேர்
மேவும் கடைச்சங் கத்தினுக்கும்
விதிசொல் குருவாம் அகத்தியற்கும்
ஆதி குருவாம் ஆறு குணத்(து)
அமலா தாலோ தாலேலோ
ஆல் வாய்வாழ் ஆறுமுகத்(து)
ஐயா தாலோ தாலேலோ!

—க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ்

இரண்டாம் பிரகாரத்தின் வடக்குச் சுற்றின் மேற்கு மூலையில் கடைச் சங்கப்புலவர் 49 பேருக்கும் ஒரு கோயில் இருக்கிறது. அவ்வையார், ஒக்கூர் மாசாத்தியார், வெண்ணிக்குயத்தியார், காவற் பெண்டிர் ஆகிய பெண்பாற் புலவர்களும் இந்த 49-ல் அடங்குவர்.

திருவாலவுடையார், பாணபத்திரர் பொருட்டுச் சேரமான்பெருமாள் நாயனாருக்கு எழுதிய திருமுகப் பாசுரம் கல்வெட்டாகப்பொறிக்கப் பெற்றிருக்கிறது.

''கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமொடு அமர்ந்து
பண்ணுறத்தெரிந்து ஆய்ந்த இப் பசுந்தமிழ்''

என்ற அடிகள் சிவபெருமானே தமிழ்ச்சங்கத் தலைவராக அமர்ந்து, புலவர்களோடு சேர்ந்து தமிழ் ஆராய்ந்ததைப் புலப்படுத்துகிறது. பாண்டிய அரசர்கள் இக்கோயிலையும் இங்குஅமைத்தது சாலப் பொருத்தமேயாகும்.

சண்பகப் பாண்டியன் தனது தேவியின் கூந்தலின் இயற்கை மணத்தை ஒரு நாள் முகர்ந்தான். கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத் தன் கருத்தறிந்து பாடல் இயற்றுவோர்க்கு ஆயிரம் பொன்முடிப்பொன்று தருவதாகச் சங்கத்தார் அவையில் தெரிவித்தான். தருமி என்ற ஆதிசைவ இளைஞன் ஆலவாய்ப் பெருமானை வழிபட்டுத் தன் வறுமை தீரும்படி அரசன் கருத்தமைந்த பாடல் ஒன்றை இறைவன்பாற் பெற்றனன். ''கொங்குதேர் வாழ்க்கை' என்று தொடங்கும் பாட்டு இது.

இப்பாட்டைக்குறைகூறிய நக்கீரரைக்கண்டிக்கும் பொருட்டுச்சிவபெருமான் ஒரு புலவர் வடிவமாக வந்தார் என்பது புராணம். கி,மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரை 600 ஆண்டுகள் இயங்கிய, கடைச்சங்கத்தில் வீற்றிருந்த புலவர்கள் படைத்தவை எட்டுத்தொகை,

பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்ற 36 நூல்கள் ஆகும்.

அடுத்தது 80 அடி நீளமுள்ள ஒரு மண்டபம். இதில் கரியமாணிக்கப் பெருமாள் கோயில் இருந்ததாகச் சிலர் கூறுவர்.

இந்தப் பிராகாரத்தில் சென்றால் வடகிழக்கு மூலையில் தெற்கு நோக்கி நடராசர் சந்நிதி உட்பட நூற்றுக்கால் மண்டபத்தையும் அதன் அருகே மேற்கு நோக்கி நவக்கிரகக் கோயிலையும் அடைகிறோம்.

நவக்கிரகக் கோயில்

சுவாமி சந்நிதியின் இரண்டாம் பிராகாரத்தில் வடபகுதியை முடித்துக் கொண்டு கிழக்குப் பகுதிக்கு வந்ததும் நவக்கிரகங்கள் உள்ள கோயில் நம்மை எதிர் கொண்டழைக்கிறது.

''வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளிசனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்ல
அடியா ரவர்க்கு மிகவே''

என்ற பாடலைப் பாடி எள்விளக்கு ஏற்றி வழிபடுகிறோம். இது கோளறு பதிகத்தின் முதல் பாட்டு. மதுரையில் தமக்கு எவ்விதத் தீங்கும் நேராது

என்பதை வலியுறுத்த ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முன்னிலையில் வேதாரண்யம் என வழங்கும் திருமறைக்காட்டில் பாடியது. எனவே, இந்தப் பதிகத்தை மதுரைத் தலத்தில் பாடிச் சிவபெருமானைச் சிந்தித்து நவக்கிரகங்களை வழிபடுவதில் மகிமை உண்டு.

நவக்கிரகக் கோயிலிலிருந்து தெற்குநோக்கி நடந்தால் நமக்கு வலப்புறத்தில் கழுகுமலைக் குமரனும் பாலமுருகனும் கோயில் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கோயில்களின் வெளிச் சுவரின் மேற்பகுதியை உற்று நோக்கினால் அசுர மயில் வலப்பக்கத்திலும் தேவேந்திர மயில் இடப்பக்கத்திலும் காட்சி தருமாறு அமைக்கப் பெற்றிருக்கும் அருமை தெரிய வரும்.

கம்பத்தடி மண்டபம்

சுவாமி சந்நிதியில் இரண்டாம் பிராகாரத்தில் அனைவர் உள்ளங்களையும் ஈர்க்கும் கம்பத்தடி மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்திலுள்ள சிற்பங்கள், சிற்ப வேலைப்பாட்டின் சிகரமாக என்றென்றும் நின்று நிலவும் என்று சிற்ப ஆராய்ச்சியாளரான மேலை நாட்டார் பலரும் ஒருமுகமாகப் புகழ்ந்துள்ளனர்.

1494-ல் மதுரை மன்னராக இருந்த கிருஷ்ண வீரப்ப நாயக்கர் நான்கு தூண்களையும் நந்தியையும் பலிபீடத்தையும் அமைத்திருந்தார். 1877-ல் நகரத்தார்கள் இதைப் பிரித்து, புதியனவாகச் சிற்பக்

கலை எழிலுடன் எட்டுத் தூண்களும் அவற்றின் மேல் கருங்கல் விதானமும் அமைத்தனர்.

இந்த மண்டபத்தில் 25 மூர்த்திகள் உள்ளன.

1. கயிலாச ரூடர்
2. சந்திரசேகர்
3. இடபாந்திகர்
4. இலிங்கோற்பவர்
5. சாமதகனர்
6. நடராசர்
7. சுகாசனர்
8. காலசம்ஹாரர்
9. மார்க்கண்டேயர்
10. சோமசுந்தரர்
11. கலியாணசுந்தரர்
12. திரிபுராந்தகர்
13. சங்கரநாராயணர்
14. அர்த்தநாரீசுவரர்
15. இடபாரூடர்
16. ஏகபாதமூர்த்தி
17. சக்ரதரர்
18. சலநீதரானுக்கிரர்
19. தட்சிணாமூர்த்தி
20. கஜசம்ஹாரர்
21. சண்டேசானுக்கிரர்
22. சோமசுந்தரர்
23. கிராதர்ச்சுனர்
24. உருத்திரர்
25. பிட்சாடனர்

ஆகிய சிவ மூர்த்தங்கள், சிவரகசியம் என்ற நூலில் கூறியிருக்கிறவாறு வடிக்கப் பெற்றுள்ளன.

மீனாட்சி அம்மனின் திருமணக் கோலத்தைச் சித்திரிக்கும் சிற்பமாக இப்பொழுது எங்கும்புகழுடன் பரவியுள்ள காட்சி, இம்மண்டபத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மணமகனான சிவபெருமானின் எடுப்பான தோற்றமும், மணமகளாகிய அங்கயற் கண்ணியின் நாணமும் புன்சிரிப்பும் இயல்பான ஆண் பெண் மனநிலைகளைப் படம்பிடித்துக் காட்டு கின்றன. மணநாளில் இவ்வாறு இருப்பீர் என்று வருங்கால மணமக்களுக்குக் கற்பிக்கும் ஒளிக்காட்சிப் பாடமாகவும் உள்ளது.

ஒவ்வொரு தூணிலும் நாற்புறங்களிலும் சிற்பங் கள் வடிக்கப்பெற்றுள்ளன. திருமணக் காட்சி தரும் தூணில் சோமசுந்தரரைக் காணுகிறோம். தார காட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் முப்புர அசுரர்களையும் சிவபெருமான் எரித்தார் என்பதை நினைவூட்டும் சித்திரத்தையும் காணுகின்றோம்.

வலம் வரும் போது இரண்டாவது தூணில் மார்க்கண்டேயனுக்காகக் காலனைக் கொல்லும் காட்சிவெளிப்புறத்திலும், சுகஆசனர் திருவுருவத்தை உட்புறத்திலும் பார்க்கின்றோம்.

அடுத்த தூணில் நடராசரும் காம தகனரும் உள்ளனர். நான்காவது தூணில் சந்திரசேகரர், காளை வாகனத்தில் சிவபெருமான், மாலடிகாணாச் சிவபெருமான், இராவணன் கயிலையைத் தூக்கும். காட்சி ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இனி, வட வரிசையில் உள்ள தூண்களைப் பார்ப்போம். சந்நிதிக்கு அருகேயுள்ள தூண் சங்கர நாராயணர், அர்த்தநாரீசுவரர், ஏகபாதமூர்த்தி, சந்தரர் முதலிய வடிவங்களை உடையது.

அடுத்த தூணில் வெளிப்புறத்தில் சலந்திர அனுக்கிரகரும் உட்புறத்தில் தட்சிணாமூர்த்தியும் உள்ளனர்.

அடுத்த தூணில் வெளிப்புறத்தில் யானைத் தோல் போர்த்திய சிவபெருமானும், உட்புறத்தில் சண்டேசுவரர்க்கு மாலையிடும் சிவபெருமானும் சித்தரிக்கப் பெற்றுள்ளனர்.

எட்டாவது தூணில் சோமாஸ்கந்தர், கிராத அர்ச்சுனர், உருத்திரர், பிட்சாடனர் முதலிய மூர்த்தி களின் கோலங்கள் இருக்கின்றன. இதனடியில் நவக் கிரகச் சிற்பங்கள் இருக்கின்றன. திருமாலின் பத்து அவதாரக் காட்சிகள் தூண்களின் உட்புறங்களில் இடம் பெற்றுள்ளன.

சிவபெருமானுக்குரிய பல மூர்த்தங்கள் இந்த எட்டுத் தூண்களிலும் அழகாக வடிக்கப்பெற்றிருக் கின்றன. ஒவ்வொரு மூர்த்தமும் ஒரு கதையைச் சொல்லுகிறது. மேலும், இம்மண்டபத்தில் பிட்டுக்கு மண் சுமத்தல், நாரைக்கு முத்தி கொடுத்தல் போன்ற திருவிளையாடல் நிகழ்ச்சிகளும் காட்டப்பெற் றுள்ளன.

சுவாமி சந்நிதி இரண்டாம் பிராகாரம் கிழக்குச் சுற்று

கம்பத்தடி மண்டபத்திற்குக் கிழக்கே பழந்தமிழர் வீரத்தை நம் மனக்கண்முன் நிறுத்துவதற்காக

உயர்ந்த பெரிய தோற்றமுடைய உருவங்கள் காட்டப் பட்டிருக்கின்றன. இவை யாவும் மேற்கு நோக்கியவை; அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய முழுமையான படைப்புகள்.

சிவனையும் சக்தியையும் மதியாமல் வேள்வி செய்த தக்கனையும் அவன் கூட்டாத்தாரையும் தண்டிப்பதற்காக இறைவனுடைய நெற்றிக்கண்ணி லிருந்து பிறந்த வீரபத்திரர் இருகோலங்களில் உள்ளார். வடக்கே இருப்பவர் அக்னி வீரபத்திரர். தெற்கே இருப்பவர் அகோர வீரபத்திரர்—பத்துக் கைகளுடையவர்.

அகன்ற மார்பு, சுருங்கிய இடுப்பு, சரியாத தொந்தி, எலும்பு தெரியாத உடல், விறைப்பும் அழுத் தமும் உள்ள கால்கள், போராடத் துடிக்கும் தோள் களும் மீசையும், மிடுக்கான முகம், கோபம் பொங்கும் கண்கள்—இவ்வாறு இந்தத் திருவுருவங்கள் வடிக்கப் பட்டுள்ளன.

அப்பனின் கோபத்திலிருந்து பிறந்த வீரபத் திரன் சிலைக்குத் தெற்கே, அம்மனின் கோபத்தி லிருந்து தோன்றிய பத்திரகாளி நிறுத்தப்பட்டிருக் கிறாள். ஆனால் ஒரு வேறுபாடு. இறைவனுடைய ஊர்த்துவத் தாண்டவத்தைப் பார்த்து மயங்கி நிற் கிறாள். இந்தத்தூண் கூர்ந்து கவனிக்கத்தக்கது. இதன் அடிப்பகுதியில் உள்ள காரைக்கால் அம்மையார் திரு வுருவம் பக்தி மேலீட்டால் மெலிந்ததாயினும் புன் சிரிப்புடன் களையுடன் திகழ்கிறது.

நந்திகேசப் பெருமானும் உடனிருந்து சிவபெரு மானின் ஆட்டத்தைக் கண்டு இன்புறுகிறார்.

பத்திரகாளிக்கு வெண்ணெய் அப்புவது இங்கு வழக்கமாக உள்ளது. இதற்கு ஒரு வரலாறு உண்டு. மாலிக்காபூர் இந்தக் கோயில் வளாகத்துக்குள் மசூதி கட்ட ஏற்பாடு செய்தபோது பத்திரகாளிக்குக் கோபம் மேலிட்டு இந்த விக்கிரக கண்களிலிருந்து இரத்தம் சொட்டியவாறு இருந்ததாம். இரத்தத்தை நிறுத்த பக்தர்கள் வெண்ணெய் உருண்டைகள் எறிந்தனராம். இப்போது இரத்தம் வெளிவரவில்லை ஆனாலும் அந்தப் பழக்கம் ஏழு நூற்றாண்டுகளாக இடையீடின்றி நிலவிவருகிறது.

பெருமான் தம்முடன் ஊர்த்துவத் தாண்டவத்தில் போட்டியிட்ட காளியின் கர்வத்தை அடக்க, தம் வலக்காலைத் தூக்கி காதுவரை கொண்டு போய் நிறுத்தினார்.காளியும் அவ்வாறு செய்ய வெட்கப் பட்டுத் தன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டாள்.

பிட்டுக்கு மண் சுமந்த அண்ணல்

வந்தி என்ற மூதாட்டிக்குப் பதிலாகத் தாமே மண்சுமந்து வைகையின் வெள்ளத்திற்கு அணைபோட பல்லாயிரக்கணக்கான மக்களோடு சிவபெருமான் கூலியாளாக வேலை செய்தார் அல்லவா? அப்போது இறைவன் தம் தலையில் கூடை தாங்கி நிற்பது ஒரு தூணில் சித்திரிக்கப் பெற்றிருக்கிறது. வாடிய பயிரை கண்டபோதெல்லாம் மனம் வாடிய வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் பிட்டுக்கு மண் சுமந்த இறைவன் பிரம்படி பட்ட வரலாற்றைக் கேள்விப் பட்டதும்,

"வன்பட்ட கூடல் வான்பட்ட வைகை வரம்பிட்டநின்
பொன் பட்ட மேனியில் புண்பட்டபோது புவிநடையாம்
துன்பு அட்டவீரர் வாதவூரர்தம் தூயநெஞ்சம்
என்பட்டதோ இன்றுகேட்ட என்நெஞ்சம் இடிபட்டதே.'"

என்று பாடினார் என்பது இங்கு நெஞ்சுருக நினைந்து நாமும் பாடுவதற்கு உரியது.

இத்தூணுக்கு எதிரில் அநுமன் உருவமும் ஒரு தூணில் உள்ளது. கரியமாணிக்கப்பெருமாள் கோயிலிலிருந்து இது கொண்டுவரப்பட்டிருக்கக்கூடும் என்பர்:

இந்தச் சுற்றில் வடகிழக்கு மூலையில் நூற்றுக் கால் மண்டபம் உள்ளது. இதை மண்டப நாயகம் என்று சொல்லுவர். திருச்சுற்றின் தென்கிழக்கு மூலையில் ஞானசம்பந்தர் மண்டபம் உள்ளது. ஞானசம்பந்தர் மண்டபத்தில் தேவார மூவர், திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர், பாண்டி நாட்டில் சைவ சமயத்தை நிலைநிறுத்திய ஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பாண்டியன் நெடுமாறன், அரசி மங்கையர்க்கரசி, அமைச்சர் குலச்சிறையார், மூர்த்தி நாயனார் ஆகியோருடைய திருவுருவங்களை கிருஷ்ண வீரப்ப நாயக்கர் பிரதிட்டை செய்து வந்தார். நால்வர் கோயில் என்று இது குறிக்கப்பெறுகிறது. பள்ளியறையைத் திறந்து நடைபெறும் முதற்பூசை, இந்தக்கோயிலில் ஞானப்பால் வழங்குவதுடன் நிறைவேறுவது இக்கோயில் மரபாக இருந்து வருகிறது.

மூர்த்தி நாயனார் இக்கோயிலுக்கு நாள்தோறும் சந்தனம் வழங்கி அதை (சங்கிலி மண்டபத்தில் மடைப் பள்ளிக்கு அருகே உள்ள) சந்தனக்கல்லில் அரைத்துக் கொடுத்தார். சைவ சமயத்தை ஒழிக்கத்

திட்டமிட்ட மாலிக்காபூர் சந்தனம் கிடைக்காமற் செய்தான். முழங்கையைத் தேய்த்தாவது இறைவனுக்கும் இறைவிக்கும் சந்தன மணம் ஊட்டுவேன் என்ற மூர்த்தியாருடைய உறுதியைப் பாராட்டி, சேக்கிழார் இவருக்கு நாயன்மார் தகுதி வழங்குகிறார்.

''நட்டம் புரிவார் அணி நற்றி ந மெய்ப்பூச்சு இன்று
முட்டும் பரிசாயினும் தேய்க்கும கைமுட்டாது என்று
வட்டம் திகழ் பாறையின்வைத்து முழங்கை தேய்த்தார்
கட்டும் புறத்தோல் நரம்பு என்பு கரைந்து தேய''

—பெரியபுராணம்

120ஆண்டுகள்

பாண்டியர் காலம் தொடங்கிச் சிறப்பாகக் கட்டப்பெற்றிருந்த இக்கோயில் அலாவுதீன் கில்ஜியின் தளபதி மாலிக்காபூரால் பெரும் அழிவுக்கு ஆளாயிற்று. மீனாட்சி சொக்கர் கருவறைகளும் அவற்றைச் சுற்றிய மண்டபங்களுமே எஞ்சி நின்றன.

பின்னர் விசுவநாத நாயக்கர் காலம் முதல் இக்கோயில் புதுப்பிக்கப்பெற்றது. செல்வர் பலர் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ற மண்டபங்கள் கட்டலாயினர். இதனாலேயே இக்கோயிலில், ஏராளமான சிறுமண்டபங்கள் காணப் பெறுகின்றன.

இவ்வாறு செப்பனிட 120 இலட்சம் ரூபாயும் 120 ஆண்டுகளும் ஆயிற்று என்று வரலாறு தெளிவாகக் கூறுவதிலிருந்து இக்கோயிலின் பெருமை உணரத்தக்கது.

கோயிலின் வெளிப்பகுதியிலுள்ள ஆயிரக்கால் மண்டபம், ஆடி வீதி முதலியவற்றுக்குச் செல்லுமுன்,

சந்நிதிகளிலும் திருச்சுற்றுகளில் உள்ள எல்லாத் தெய்வங்களையும் வணங்க வேண்டும். பிறகு, கம்பத்தடி மண்டபத்திற்குக் கிழக்கே அமர்ந்து கருவறையின் கண் வீற்றிருக்கும் சொக்கநாதப் பெருமானை மீண்டும் பலிபீடம், நந்தி ஆகியவற்றின் வாயிலாகக் கண்டு வழிபட வேண்டும். பிறகு, நிலந்தோய விழுந்து வணங்கி எழுவது மரபு. உடனே மீனாட்சி அம்மன் கோயிலிலுள்ள பலிபீடத்தின் முன்னர் இவ்வாறே வணங்கி, அதன் பிறகு கோயிலின் வெளிப்பகுதிகளுக்குச் செல்லுவது அல்லது கோயிலை விட்டு அகலுவது வழிபாட்டு முறையாகும் என்பர் சான்றோர்.

சுவாமி சந்நிதி

அனுக்ஞை விநாயகரையும் பழனியாண்டவரையும் வழிபட்டு அவர்கள் இசைவுபெற்று சுவாமிசந்நிதி முதல் பிராகாரத்திற்குள் நுழைகிறோம். இக்கோயிலில் எல்லாத் திருவிழாக்களும் அனுக்ஞை விநாயகரிடம் இசைவு பெற்ற பிறகே நடைபெறுகின்றன.

துவார பாலகராக (அதாவது கோயிற் காவலராக) இருபுறமும் உள்ள திருவுருவங்களின் உயரத்தைப் பார்த்தால் மலைக்காமல் இருக்க முடியாது. இவர்கள் பெயர் ஆட்கொண்டார், உய்யக்கொண்டார். காவலரான இவர்களுடைய வலுவான தோற்றம் ஒருபுறம் அல்லது செதுக்கிய சிற்பியின் வேலைத்திறன் மறுபுறம். இவற்றுள் எதை வியப்பது என்று முடிவு செய்வது எளிதன்று. இந்தத் துவார பாலகர்களின் அகன்ற நெற்றியும் விரிந்த மார்பும் வலுவான கரங்களும் உயர்ந்த தோள்களும் நீண்ட

கால்களும் கூர்மையான நகங்களும் வணங்காத முதுகும் எடுப்பான தோற்றமும் கூர்ந்து கவனிக்கத் தக்கன.

நான்கு சிற்பங்கள்

இந்த இடத்தில் நான்கு அழகிய சிற்பங்கள் இருக்கின்றன. அவற்றைப்பற்றி இப்போது கூறுவோம்:

சிவபெருமான் அருவத்திருமேனியாகவும் உருவத் திருமேனியாகவும் காட்சியளிக்கிறார். கருவறையில் உள்ள அருவத்திற்குச் செல்லுமுன், அவருடைய உருவத் திருமேனியைக் கண்டு இன்புறலாம். ஐந்து முகங்கள் கொண்ட இவ்வடிவம் சுவாமி சந்நிதி நுழைவாயில் தூணில் உள்ளது.

(1) சத்புருஷம், (2) அகோரம், (3) சத்யோஜாதம், (4) வாமதேவம், (5) ஈசானம் என்ற ஐந்து முகங்களோடு கூடிய உருவத்திருமேனியாகச் சிவபெருமான் இத்தூணில் காட்சி தருகிறார். இது சதாசிவ மூர்த்தம் எனப்படும்.

சைவ சித்தாந்தக் கோட்பாட்டில் ஐந்து தத்துவங்களில் ஒன்று, சதாக்யம், ஞானமும் கிரியையும் ஒத்து நிற்கக்கூடிய நிலையே சதாக்ய தத்துவம் என்றும் சதாசிவ தத்துவம் என்றும் பெயர் பெறும். இதுவே நிட்களமதனில் சகலம் நிறைந்திருக்கிற தத்துவ நிலையாகும்.

சதாசிவ மூர்த்தத்திற்குரிய சக்தி, காயத்ரி. காயத்ரியும் ஐந்து முகங்களுடன் கூடியது. அது எதிர்ப் பக்கத் தூணில் உள்ளது. அதனைச் சூழ்ந்த அரை வட்ட வடிவமாக உள்ள திருவாட்சி, ஏனைய திரு

வாட்சிகளினின்றும் வேறுபட்டிருப்பது கூர்ந்து கவனித்து வியக்கத்தக்கது. நுண்ணிய துவாரங்கள் அருமையாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

சதாசிவ மூர்த்தியும் காயத்ரி அம்மனும் திருக் கயிலையில் வீற்றிருப்பதை நினைவூட்டுமாறு இங்கு வடிக்கப்பெற்றுள்ளனர்.

இந்த இரு உருவங்களுக்குக் கீழே, முறையே வல்லபகணபதி, முருகன் வடிவங்கள் நம் மனத்தைக் கொள்ளை கொள்ளுமாறு செதுக்கப்பட்டுள்ளன.

இந்த நான்கு சிற்பங்களும் தமிழ்நாட்டின் திறமையான கல்வேலைப்பாட்டுக்குச் சான்று பகர்வன.

நால்வர் திருவுருவங்கள்

வாயிலின் இருபுறமும் ஒருபக்கத்திற்கு இருவராக —சிறிய அளவில் நால்வரின் திருவுருவங்கள் அழகாகச் சமைக்கப்பட்டிருக்கின்றன.

அதிகார நந்தி

வாயிலில் கால்வைத்ததும் நமக்கு இடப்புறத்தில் மாடக்குழியில் வடக்கு முகமாக உள்ள அதிகாரநந்தி யின் உருவம் நம் கவனத்தை ஈர்க்கிறது. பெரிய சிவன் கோயில்களில் மட்டுமே அதிகாரநந்தியைக் காண இயலும். அதிகாரநந்தி, சிலாத முனிவரின் தவத்திற்கு இரங்கி, சிவபெருமானுடைய ஆணைப் படி அவருடைய மகனாக வந்தவர்.

சித்திரைத் திருவிழாவில் ஒன்பதாம் நாளிலும், பத்தாம் திருநாளன்று காலையிலும், ஆவணிமூலத் திருவிழாவிலும், மார்கழி அஷ்டமி பிரதட்சிணத்திலும், தை மாதம் நடைபெறும் தெப்பத் திருவிழாவிலும், திருப்பரங்குன்றத்துக்குச் சுவாமியும் அம்மனும் எழுந்தருளும்போதும் அதிகார நந்தி உலா நடைபெறும்.

ஆறுகால் பீடம்

இப்போது படியேறி, ஆறுகால் பீடத்திற்குச் செல்லப் போகிறோம்.

அதற்குமுன், சற்று நிதானமாக, பீடத்தின் அடிப் பகுதியில் உள்ள 108 நடன வகைகளின் முத்திரைகளைக் காண்பது நன்று. தமிழ்நாட்டுக்கே உரிய நாட்டியக் கலையின் நுட்பங்களாகிய கை அடவுகள் கல் வடிவிலேயே நிலையாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவை நாட்டியம் பயில்வோர்க்கும் நாட்டியக் கலை வல்லார்க்கும் வழிகாட்டுதலாகவும் ஆதாரமாகவும் நின்று நிலவுகின்றன.

தாழ்த்திய கண்களை உயர்த்திக் கொடுங்கைகளைப் பார்த்து, கல்சிற்பியின் திறனை வியக்கலாம். ஆவுடையார் கோயில் கொடுங்கைகள் நம் நினைவுக்கு வருகின்றன.

இந்த ஆறுகால் பீடத்தில்தான் உற்சவங்கள் தொடங்குகின்றன. சுவாமியின் பட்டாபிஷேகம் நடைபெறும் இடமும் இதுவே.

இங்குள்ள தூண்களைத் தட்டிக் காட்டி, இந்தப் பீடத்திலேயே இத்தலத்தைப் பற்றிய சம்பந்தர் தேவாரத்தை ஒலிப்பதிவு செய்து, திருச்சி வானொலி

நிலையத்தார் 1941லும், 1954லும் நிகழ்ச்சிகளை ஒலி பரப்பியுள்ளனர்.

வெள்ளியம்பலம்

ஆடற் பெருமானாகிய நடராசரை வழிபடுவதற் குரிய சிறப்பான தலங்களுள் ஒன்றாக இருக்கும் பெருமையையும் மதுரை உடைத்து.

சுவாமி சந்நிதியில் முதல் பிராகாரத்தில் கனக சபையும், இரத்தின சபையும், வெள்ளியம்பலத்தில் இரஜத சபை, நூற்றுக்கால் மண்டபத்தில் தேவசபை, ஆயிரக்கால் மண்டபத்தில் சித்திரசபை, ஆக ஆடவல் லார்க்கு உரிய ஐந்து சபைகளும் உள்ளன.

வெள்ளியம்பலத்தில் ஒரு மாணிக்கப்பீடத்தில் ஞானப்பேரொளி வடிவாலான சோமசுந்தரக்கடவுள் அம்பல வாணனாகத் தோன்றியது எப்படி?

பூதகணங்கள் மொந்தையையும், தண்ணுமை யையும் முழக்கின. திருநந்திதேவர் முழவம் கூட்டி னார். விஷ்ணு இடக்கை பார்த்தார். தும்புரு நாரதர் இசை மீட்டினர். பஞ்சு துந்துபிகள்முழங்கின. சரசுவதி சுருதிகூட்டினாள். பிரமன் பாடிக்கொண்டே இசை மழை பொழிந்தார். விண்ணிலுள்ள தேவர்கள் கற்பக மலர்களைச் சொரிந்தனர்.

சிவபெருமான் முயலகன் மேல் வலப்பாதத்தை ஊன்றி, இடப்பாதத்தைத் தூக்கிச் சற்றே வளைந்து ஆடலானார்—யாருக்காக?

மீனாட்சியம்மனின் திருமணத்தைக் காண வந்த பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் தில்லையில் நாள்

தோறும் இறைவனுடைய திருநடனம் கண்டாலல்லது உண்ணமாட்டார்கள். அன்றும் அவ்வாறே திரு நடனம் காணத் தில்லைக்குச் செல்ல விரும்பி, விடை வேண்டினர். 'திருமணவிருந்து உண்ணாது, நீங்கள் செல்லலாகாது' என்று கூறிய சோமசுந்தரக் கடவுள், ''நாம்தானே அங்கே ஆடுகிறோம். இதோ அந்த ஆட்டத்தை இங்கேயே உங்களுக்குக் காட்டுவோம்'' என்று கூறி உடனே பரமானந்தத் தாண்டவம் ஆடிக் காட்டினார்.

பாண்டியன் கேட்ட வரம்

இவ்வாறு சோமசுந்தரப் பெருமான் பரமானந்த தாண்டவத்தை நாள் தோறும் ஆடி மதுரையில் அருள்பாலித்து வந்தார்.

மதுரையை ஆண்ட இராசசேகரபாண்டியன் பல கலைகளிலும் வல்லனாக இருந்தும், பரதக் கலை தெரியாதிருந்தான். அந்தக் குறையைப் போக்கத் தக்க ஆசிரியரைக் கொண்டு நாட்டியம் பயில ஆரம்பித்தான்.

இராசசேகரன் பரதம் பயிலுங்கால் தன் கால்கள் நோவுறுவதை அறிந்தான். இத்தகைய வருத்தம் வெள்ளியம்பலத்தில் இடையறாது கூத்தாடும் பெரு மானுக்கும் உண்டாகுமே என்று கவலைப்பட்டான்.

அன்று சிவராத்திரி. இரவு நான்கு சாமமும் விசேட பூசை நிகழ்வித்தான். பின்னர்ப் பெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று கண்ணீர் சோரச் சிரசின் மீது கரங்குவித்தான்.

''எம்பெருமானே! ஊன்றிய திருவடியை எடுத்து வீசித் தூக்கிய திருவடியைக் கீழே ஊன்றி இன்றைக்கு அடியேன் காணும்படி கால்மாறியாடித் தமியேனு டைய வருத்தம் முழுவதையும் தீர்த்தருள வேண்டும். இல்லையேல் இறந்துவிடுவேன்'' என்று கூறித் தன் உடைவாளை நாட்டி அதன்மேல் குப்புற விழப் புகுந் தான்.

அடியார்க்கு எளியவரான சிவபெருமான் தம் அன்பன் விரும்பியவாறே கால் மாறியாடிக் காட்சி தந்தார். இன்றும் கால் மாறியாடும் கோலத் திலேயே உள்ளார். தில்லையிலும் பிற தலங்களிலும் வலக் காலை ஊன்றி ஆடும் இறைவன், மதுரையில் இடக்காலை ஊன்றி ஆடுகிறார். வெள்ளியம்பலத்தில் வலக்கால் தூக்கிய பாதமாக உள்ளது.

பத்துத் திருக்கரங்களுடன் அம்பலவாணன் நடனம் ஆடும் காட்சி மதுரையிலுள்ள வெள்ளியம் பலம் தவிர வேறு எங்கும் காணற்கியலாது வலக் கரங்கள் ஐந்தில் காக்கும் கரத்தில் சூலம், மற்றவற் றில் தமருகம், பாணம், வாள், மழு என்பனவும், இடக் கரங்கள் ஐந்தில் வரத ஹஸ்தத்தில் பாம்பும், ஏனையவற்றில் தீ, வில், கேடயம், தண்டு என்பவை களும் ஏந்தியுள்ளார்.

இறைவன் ஆடிய தாண்டவங்கள் எழுவகைப் படும். இவற்றுள் இதுவே பரமானந்தத் தாண்டவம் என்றும், சொக்கத் தாண்டவம் என்றும் பெயர் பெறும்.

இறைவன் மதுரையில் மூன்று வகையான நடனம் —பரமானந்த நடனம், கால் மாறிய நடனம், ஊர்த்துவ நடனம் ஆடினார் என்பர். இவை நிகழ்ந்த கனக சபையும், வெள்ளியம்பலமும், இரத்தின சபையும் இக்கோயிலில் சிறப்பாக வழிபடத்தக்க இடங்களாகும். வெள்ளியம்பலமாகிய இரஜத சபை சுவாமி சந்நிதியருகேயும், கனகசபையும் இரத்தின சபையும் முதல் பிராகாரத்தின் வடக்குச்சுற்றிலும்,தேவசபை நூற்றுக்கால் மண்டபத்திலும், சித்திரசபை ஆயிரங்கால் மண்டபத்திலும் உள்ளன. வெள்ளியம்பலத்திற்கு எதிரே, ஆடற்பெருமானுடைய ஏனைய தலங்கள் நான்கும் வண்ண ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளன.

சிலப்பதிகாரத்தில் வெள்ளியம்பலம்

மதுரையில் வெள்ளியம்பலம் இருப்பதற்கான தெளிவான சான்று சங்க நூலாகிய சிலப்பதிகாரத்தில் கிடைக்கிறது.

பௌத்த சமயத்தினரும், மணிமேகலை ஆசிரியருமான சாத்தனார், மதுரை எரிந்த அன்று, இரவுப் பொழுதை வெள்ளியம்பலத்தில் கழித்தார்.

> ''அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
> கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில்
> வெள்ளியம்பலத்து நள்ளிருட் கிடந்தேன்''

என்பது சாத்தனார் வாக்கு.

• பொன்னமபலம்—சிதம்பரம், சித்திரசபை—திருக்குற்றாலம், இரத்தினசபை— திருவாலங்காடு, தாமிர சபை—(1) திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், (2) செப்பறை, இராசவல்லிபுரம், திருநெல்வேலி.மாவட்டம்

வெள்ளியம்பலத்தில் கால்மாறி ஆடிய பெருமானையும், அன்னை சிவகாமியையும் வழிபட்ட பிறகு, சந்திர சேகரரை வணங்கிச் சொக்கர் கருவறைக்குச் செல்லுவோம்.

வெள்ளியம்பல வாணராகிய நடராசப் பெருமானுக்கு அபிஷேகம் இல்லை. ஆனி-உத்தரத்தன்றும் மார்கழி திருவாதியரை யன்றும் தைலக் காப்பு உண்டு.

சொக்கர்* கருவறை

நித்தம் எழுந்தருளி நின்மலனே என்றனக்குப்
புத்தி மிகமிகவும் போதித்துச்—சித்தமயல்
போக்குவாய் இன்பசுக பூரணத்தி ரண்டறவே
ஆக்குவாய் சொக்கநா தா.
ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம்—பாலொளியாம்
மத்தனே கடல் மதுராபுரி உமையாள்
அத்தனே ஆலவா யா.
உனக்குப் பணிசெய்ய உன்றனை யெந்நாளும்
நினைக்க வரமெனுக்கு நீதா—மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநா தா.

—குருஞானசம்பந்தர்
'சொக்கநாத வெண்பா'

---

* சொக்கர் என்பது மூலலிங்கத்தையும், சோம சுந்தர ஈசுவரர் என்பது உற்சவரையும் சுட்டு வதற்கு ஏற்பட்ட தனித்தனிப் பெயர்கள்.

புராணங்கள் கூறும் வரலாறுகள்

இந்தக் கருவறை கட்டப்பெற்ற வரலாறு பின் வருமாறு புராணங்களில் கூறப்படுகிறது.

கொடிய பகைவனேயாயினும் தவம் செய்து கொண்டிருக்கும் பொழுது ஒருவனைக் கொல்லுவது போர் மரபு அன்று. விருத்திராசுரன் என்ற அசுரனை நெறிமுறைகளுக்கு மாறாகக் கொன்ற குற்றத்திற்காக இந்திரனைப் பிரமஹத்தி பாவம் பிடித்துக்கொண்டது. அது அவனைப் படாத பாடு படுத்தியது. விண்ணுலகத்திலிருந்தால் இப்பழிபாவம் தன்னைவிட்டு நீங்காது என அறிந்து அவன் மண்ணுலகத்திற்கு வந்து புண்ணிய தீர்த்தங்கள்தோறும் முழுக எண்ணினான். அவ்வாறே இமயத்திலிருந்து தென்றிசை நோக்கி ஒவ்வொரு தீர்த்தமாக முழுகி வந்தும் பிரமஹத்தி பாவம் அவனைவிட்டு நீங்கவில்லை. ஒருநாள் பாண்டி நாட்டில் ஒரு கடம்பவனத்தின் எல்லையோரமாகப் போய்க்கொண்டிருக்கும் பொழுது திடீரென்று அக் கொலைப்பாவம் தன்னைவிட்டு நீங்கிய உணர்வு அவனுக்கேற்பட்டது. அதைக்கண்டு இந்திரன் வியப்புற்று இது இவ்வனத்தின் பெருமையாகும் என்று அதனுட்சென்று உண்மையை அறிந்துவரத் தனது ஏவலாள்களை அனுப்பினான். அவர்களும் காட்டினுள் சென்று அங்கு ஒரு குளமும் அதன் கரையில் கடம்ப மர நிழலில் ஒரு சிவலிங்கமும் இருப்பதைக் கண்டு வந்து கூறினர். இந்திரன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து தனது பழியைத் தீர்த்தது அச்சிவலிங்கமேயாகும் என்று அதனை வழிபட்டு அதற்கோர் அழகான விமானமும் கட்டிமுடித்துத் தேவலோகம்

திரும்பிச் சென்றான். அச்சிவலிங்கமே இன்று மதுரைத் திருக்கோயிலில் சொக்கநாதராக விளங்கும் மூலவராகும்.

பாண்டி நாடு இருமுறை கடல்கோள்களுக்கு இரையானதால் முடத்திருமாற பாண்டியன் தன் தலைநகரை உள்நாட்டுக்குள் அமைக்க விரும்பினான். அவனுக்குப் பின் வந்த குலசேகரபாண்டியன் இன்றைய மதுரைக்குக் கிழக்கே 10 கி. மீ. தொலைவில் இராம நாதபுரம் நெடுஞ்சாலையிலுள்ள மணலூர் என்னும் சிற்றூரில் தங்கி, தலைநகருக்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் சிந்தனை செலுத்தி வந்தான்.

அந்த ஊரில் தனஞ்செயன் என்ற ஒரு வணிகன் இருந்தான். வணிகச் சாத்துடன் பல பகுதிகளுக்குச் சென்று அவன் ஒரு நாள் மணலூர்க்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது இருட்டிவிட்டது. எங்கேயாவது பத்திரமாகத் தங்கி இரவுப்பொழுதைக் கழிக்க முடிவு செய்தான். கடம்ப வனம் ஒன்று அவன் எதிரே தோன்றிற்று. தங்குவதற்கு ஏதாவதோர் இடம் படாதாவென்று அவன் கவலையுற்றிருந்தான். இந்திரன் கட்டிய விமானம் அவன் கண்களுக்குத் தென்பட்டது. இதுவே தங்குவதற்குச் சரியான இடமென்று உள்ளே சென்றான். அங்கு ஒரு சிவலிங்கமிருப்பதைக் கண்டு சிறந்த சிவபக்தராகிய தனஞ்செயன் அதை வணங்கிக் கருவறையிலேயே படுத்துக் கொண்டான். காலையில் எழுந்து பார்த்தபொழுது சிவலிங்கத்திற்கு யாரோ வந்து சிறப்பான பூசைகள் செய்த அறிகுறிகளைக்கண்டு, இது தேவர்களின் செயலேயாகும் என்பதை உணர்ந்து மிக்க வியப்புற்றான்.

மறுநாள் தனஞ்செயன் அரசனைச் சந்தித்து தான் கண்ட காட்சிகளைக் கூறினான். அரசன் உவகையோடு உடனே புறப்பட்டுக் கடம்பவனத்தைக் கண்டான். தனஞ்செயன் காட்டிய விமானத்தையும் சிவலிங்கத்தையும் வழிபட்டான்.

இறைவன் தன்னுடைய கனவில் உணர்த்தியபடி அக்கடம்பவனத்தில் ஒரு நகரை அமைக்க வேண்டு மென்று அரசன் திட்டமிட்டான். சோமசுந்தரப் பெருமானே ஒரு சித்தராகத் தோன்றிச் சிற்பநூல் விதிப்படி ஆலயமும் நகரமும் இவ்வாறு அமைக்க வேண்டுமென விதித்து மறைந்தருளினார். அதற் கொப்பப் பாண்டியனும் கைதேர்ந்த சிற்பிகளைக் கொண்டு கோயிலையும் மண்டபங்களையும் அவற்றை சுற்றித் தெருக்களையும் மாளிகைகளையும் அமைத் தான். இன்றைய மதுரை நகரின் அமைப்பே அதனை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்ததாகும். ஆகவே சோமசுந்தரப் பெருமானே அம்மதுரை நகரை உரு வாக்கிய சிற்பியாவார் என்பதைத் திருவிளையாடற் புராணத்தினின்றும் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

கருவறையின் அமைப்பு

இந்தக் கருவறை எட்டு யானைகளும்† 32 சிங்கங் களும் 64 கணங்களும் தாங்குவதுபோன்று இந்திர னின் கட்டளைப்படி மயன் என்ற தேவதச்சனால் கட்டப்பட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. கடம்ப

---

† வெளிப்பகுதியில் 6 யானைகளும், மூலவருக்கு பக்கத்தில் இரண்டு யானைகளும் உள்ளன.

வனக் காட்டில் உண்டாக்கப்பட்டதால், காடுவாழ் உயிரினங்கள் இடம் பெற்றன. மதுரையில் யானைகளுக்கும் சிங்கத்துக்குமே கல்(யானைக்கல், சிம்மக்கல்) இருப்பது இங்கு நினைக்கத்தக்கது.

சிவபெருமானின் எண்குணங்களைக் குறிப்பிட யானைகளின் எண்ணிக்கை 8 ஆக வரையறுக்கப் பட்டது. அவையாவன:

1. முற்றறிவு
2. வரம்பில் இன்பம்
3. பாச நீக்கம்
4. தன்வயம்
5. பேரருள்
6. முடிவில் ஆற்றல்
7. இயற்கை உணர்வுடைமை
8. தூய உடம்பு உடைமை

எத்திக்கிலும் 33 அடி உடைய சதுரமாக இந்தக் கருவறை அமைக்கப்பட்டிருக்கிறது.

கடம்பமரக் காட்டை வெட்டிக் கோயில் உண்டாக்கிய பாண்டியன், உத்தராயணம் தொடங்கும் நாளில் (தைப்பொங்கலன்று) இறைவன் மீது சூரிய ஒளி விழுமாறு இக்கோயிலை அமைத்தான். 50 ஆண்டுகளுக்கு முன்னர்வரை அவ்வாறு ஒளி விழுந்து வந்தது. பல மாடிக் கட்டிடங்கள் ஏற்பட்ட பிறகு அம்மன் கோயிலிலும் அந்த நிலை மாறிவிட்டது. தெருக்கள் உயர்ந்து விட்டதன் விளைவு இது.

ஸ்படிக லிங்கம்

காலசந்தியிலும் சாயரட்சையிலும் கருவறைக்குள் இருக்கும் ஸ்படிக லிங்கத்துக்கு அபிஷேகம் உண்டு. எனவே, இந்தக் காலங்களில் சொக்கர் சந்நிதிக்குச் சென்றால், ஸ்படிக லிங்கத்தையும் வழிபட வாய்ப் பாக இருக்கும்.

சிறப்பு வழிபாடுகள்

சொக்கநாதப் பெருமானைச் சிறப்பாக வழிபட விரும்புபவர்கள் பால், இளநீர், சந்தனம், தேன், பழச் சாறு, திருநீறு முதலியவற்றால் அவருக்கு அபிஷேகம் செய்யலாம்.

அன்னாபிஷேகம் செய்யும் மரபும் உண்டு. 160 கிலோ அரிசியை வழங்கி, திருக்கோயில் மடைப் பள்ளியில் சாதமாக்கி உரிய மந்திரங்கள் சொல்லி இறைவனுக்குப் படைத்து வழிபடலாம். இந்த அன்னத்தில் தயிர் சேர்த்து ஏழை எளியவர்களின் பசியைப் போக்குவது வழக்கம்.

வசதியில்லாதவர் வாயாரப் பாடினால் வாழ்த் தினால் அவன் அருள் பெறலாம். வாழ்த்துவதும் நாம் வாழ்வதற்கே.

ஆலவாய் அண்ணலின் முதன்மை

இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள லிங்க மூர்த்தி உலகத்தில் வெவ்வேறு தலங்களிலுள்ள எல்லாச் சிவலிங்கங்களுக்கும் முன்னே தோன்றியவர். அதனால் சொக்கநாதருக்கு மூல லிங்கம் என்ற பெயர் உண்டாயிற்று.

ஏனைய லிங்கங்கள் யாவும் இதிலிருந்து கப்பு விட்டனபோல எழுந்தன.

திருக்கயிலாயம் முதலான மிகப்பெரிய தலங்களில் விளங்கும் மூர்த்திகளின் திருவொளி இப்பேரி லிங்கத்தினின்றே தோன்றிப் பரவி நிற்கின்றது. மற்ற லிங்கங்கள் சொக்கலிங்கத்தினின்று தனித் தனியே பிரிந்து சென்ற லிங்கங்கள். இதுவோ ஒருங்கே தொக்கலிங்கம் (அல்லது கூட்டுலிங்கம்) என்பர்.

''மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவ ளைக்கை மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணி
செய்து நாளதொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி!
அங்கையற்கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே.''

என்று திருஞான சம்பந்தர் பெருமான் ஆலவாய் அண்ணலைப் பாராட்டினார்.

''முளைத்தானை எல்லார்க்கும் முன்பே தோன்றி
முதிரும் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறாத்
தூமுத்த வெண்முறுவல் உமையோடு ஆடித்
திளைத்தானைத் தெனகூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே''

எனக் கூடற்பெருமானைத் திருநாவுக்கரசர் பாடினார்.

"பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோலால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்."

என்று மதுரைப் பெருமானைப் பாடி மகிழ்ந்தார் மணிவாசகப் பெருமான்,

இசை

சிவன் இசையின் உயிர். அவனே இசையாகவும், இசையின் பயனாகவும் விளங்குபவன். விறகு விற்ற திருவிளையாடலில் சோமசுந்தரப் பெருமானுடைய இசைப்புலமை வெளிப்படுகிறது. ஆலவாய் அண்ணல் இசையில்—தமிழ் இசையில்— உள்ளத்தைப் பறி கொடுத்த நிகழ்ச்சிகள் ஏராளமாக உண்டு.

திருநீலகண்ட யாழ்ப்பாணர், பாணர் என்ற தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவர். எனினும் இசை வல்லார். ஆலவாய் அமர்ந்து அண்ணல் கோயில் வாயிலை, அந்தப் பாணர் அடைந்து யாழ் வாசித்து தம் இசையை இறைவனுக்குப் படைக்கிறார். அவர் பாணராக இருந்ததால் கோயிலுக்குள் வர அவருக்கு உரிமை இல்லை. வாயிலிலேயே நின்றுவிடுகிறார்.

சோமசுந்தரக் கடவுள் அர்ச்சகர் கனவில் தோன்றிப் பாணரைக் கோயிலுக்கு உள்ளேஅழைத்து வர உதவுமாறு கட்டளை பிறப்பிக்கிறார். அவ்வாறு உட்சென்ற பாணர் அடக்கத்தோடு வெறும் தரையில் அமர்ந்து யாழை மீட்டி வாசிக்கிறார். "சந்தயாழ்

கரையிற் கீதம் தாக்கில் வீக்கழியுமென்று சுந்தரப் பலகை நீர் இடும்'' என்று சோமசுந்தரப்பெருமானின் கட்டளை அசரீரியாக ஒலிக்கிறது. உட்காரப் பீடம் அளித்து, பாணருக்கு மரியாதை செய்கிறார்கள் மதுரை மறையவர்.

சோமசுந்தரப் பெருமான் தேவாரப் பாடல் களைக் கேட்பதில் விருப்பம் உடையார் என்பதை உணர்ந்த பழந்தமிழ் அரசர்கள் திருமுறை ஓதுவார் பலரை இக்கோயிலில் நியமித்திருந்த செய்தி பழமை யான சான்று ஏடுகளிலும் செப்பேடுகளிலும் விவர மாக இடம் பெற்றுள்ளது.

சொக்கலிங்கப் பெருமானுடைய மூலத்தானத் திலும் வெள்ளியம்பலத்திலுமே தேவார திருவாசகங் கள் ஓதவேண்டும் என்ற நடைமுறை உளது.

பள்ளியறைச் சொக்கர் அம்மன் சந்நிதியிலுள்ள பள்ளியறையிலிருந்து எழுந்தருளி, கம்பத்தடி மண்ட பத்தின்முன் வரும்போது, 'தேவாரம் அருளிப் பாடுக' என்றவுடன் திருமுறை விண்ணப்பிப்பது வழக்கம். ஒரே ஒரு திருப்பாட்டு விண்ணப்பிக்கப்படுகிறது.

பிரதோஷ நாளில் இறைவன் ரிஷப வாகனத்தில் வரும்போது அஷ்ட திக்குகளிலும் முறையே 1. நட்ட பாடை, 2. காந்தாரம், 3. பயந்தைக் காந்தாரம், 4. சாதாரி, 5. நட்டராகம், 6. தக்கராகம், 7. சிகா மரம், 8. தாண்டகம் அல்லது செந்துருத்தி என்ற பண்கள் ஓதப்படுவதும் மரபு.

சித்திரை விழாவில் திருமுறைப் பணிக்கும் இவ் வாறு பல வரையறைகள் உள்ளன.

வைகாசி, பங்குனி வசந்த விழாக்களில் இறைவன்முன் மேகராகக் குறிஞ்சித் திருப்பதிகம் பாடுதல் வேண்டும். ஆனி ஊஞ்சல் விழாவில் திருப் பொன்னூசல் பாட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

சுவாமி கோயில் வடக்குச் சுற்றில் உள்ள நடராசர் சந்நிதியில் இருக்கும் தூண் ஒன்றில் 35 வகையான தாளங்கள் ஒரு கல்வெட்டில் குறிக்கப்பட் டுள்ளன.

ஆயிரக்கால் மண்டபத்திலும் கம்பத்தடி மண்ட பத்திலும் இசை ஒலிக்கும் தூண்கள் உள்ளன. வடக்குக் கோபுரத்திற்கு அருகே ஆடி வீதியில் ஐந்து தூண்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலும் 22 உருட்டுக் கம்பிகள் இணைக்கப் பெற்றிருக்கின்றன. இந்தத் தனித்தனித் தண்டுகளை மெல்லெனத் தட்டி னால், ஒரு தூணில் எழும் சுரத்தின் கிளைச் சுரங்கள் பக்கத்திலுள்ள தூண்களிலிருந்து தாமே ஒலிக் கின்றன.

இக்கோயிலில் தொன்று தொட்டு, நிகழ்ச்சிகள் நடந்த வண்ணமாக இருந்தன. இதை ஓவியத்தில் நெய்து காட்டப்பெற்றுள்ள திரைச்சேலை, லண்டன் விக்டோரியா அண்டு ஆல்பர்ட் பொருட்காட்சிக் கூடத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பெற் றுள்ளது.

சாரங்கி என்ற இசைக்கருவியை வாசிக்க இக் கோயிலில் பழங்காலத்தில் சாரங்கிக் கட்டளை என்று அழைக்கப்பெறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்ததாகவும் தெரிகிறது.

ராணி மங்கம்மாள் காலத்தில் கீழச் சித்திரை வீதியில் அம்மன் சந்நிதி வாயிலுக்கு எதிரில் நகரா மண்டபம் அவருடைய அமைச்சர் அச்சராயனால் கட்டப்பட்டது இன்றும் நாள்தோறும் காலை 4-30 முதல் 5வரையும் மாலை 4-30 முதல் 5வரையும் இங்கு நகரா வாசிக்கப்பெற்று வருகிறது. முன்னர் முரசு கொட்டப் பெற்றது என்பர். இம்மண்டபத்தில் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு தூணில் மங்கம்மாளின் உருவம் பொறிக்கப் பெற்றிருக்கிறது.

மதுரைக் கோயில் நீண்ட நெடுங்காலமாக இசைக் கலைக்கு இருப்பிடமாக இருந்திருப்பது மேற்கூறிய திலிருந்து தெரியவரும்.

''அண்ணல் ஆலவாய், நண்ணி னான்றனை
எண்ணி யேதொழத் திண்ணம் இன்பமே''

—திருஞானசம்பந்தர்

முதல் திருச்சுற்று

சொக்கர் கருவறையிலிருந்து முதல் பிராகாரத் தின் தென் பகுதிக்குச் செல்லுகிறோம்.

63-வர் திருவுருவங்களும், கலைமகள் (சரசுவதி), சப்த மாதாக்கள் எனப்படும் மங்கையர் எழுவர் ஆகியோர் உருவங்களும் தென் பக்கத்தில் உள்ளன. எதிர்த்திக்கில் தெற்கு நோக்கி தட்சிணாமூர்த்தி எனப்படும் ஆலமர் செல்வன் சந்நிதி இருக்கிறது.

இந்தமண்டபத்தின் தெற்கு வடக்குப் பிராகாரங் களில் முதற் பிராகாரத்தில் மதிற் சுவரின் வெளிப் பகுதியில் சுதைகள் உள்ளன. திருவிளையாடற்

புராணக் காட்சிகளும், பிற வேலைப்பாடுகளும் கவர்ச்சியாகச் சித்திரிக்கப் பெற்றுள்ளன.

மேற்குச் சுற்றில் தென்கோடியில் உற்சவர் சந்நிதி உள்ளது. அன்பர்கள் 501 ரூபாய் பணம் செலுத்தி, இந்தச் சந்நிதியில் திருக்கல்யாண விழா நடத்துகின்றனர். வட கோடியில் காசி விசுவநாதர் விசாலாட்சிக்கு உட் கோயில் கட்டப்பட்டுள்ளது. எதிர்ப்புறத்தில் தோட்டத்தில் உள்ள லிங்கோத்பவர் திருவண்ணாமலையில் கோயில் கொண்டிருக்கும் அண்ணாமலையாரை நினைவூட்டுகிறார். தொலைவி லுள்ள தலங்களுக்குப் போக இயலாதவர்கள் இங் கிருந்தே அந்த இறைவன் இறைவியரை வழிபட இது ஓர் ஏற்பாடு. இவ்வாறே மீனாட்சி சுந்தரேசுவரர் சந்நிதிகளைத் தமிழ் நாட்டுப் பெருங் கோயில்கள் பலவற்றில் காணலாம்.

மேற்கு வரிசையில் அருவமாகிய சோடசலிங்கமும் (16 பட்டைகள் உடையது) உருவமாகிய நான்கு முக, ஐந்து முக லிங்கமும் உள்ளன.

அடுத்தது பிச்சைப் பெருமான் (பிச்சாடனர்) கோயில். இவருடைய வடிவம் ஐம்பொன்னால் ஆனது.

சித்தர்

சித்தர்கள் எனப்படுவோர் தமிழ்நாட்டுக்கே சிறப்பாக உரிய ஞானிகள். அவர்கள் மருத்துவ நிபுணர், தத்துவ வல்லுநர். உடற்கூறு, இரசாயனம் முதலியதுறைகளில் நுண்மான் நுழைபுலம் பெற்றவர்.

அருளாளர். எளிய உலோகங்களைப் பொன்னாக மாற்றும் ஆற்றல் பெற்றவர்.

இறந்தவர்களை, உயிருள்ளவர்களின் உடலுக்குள் சற்று நேரத்திற்குப் புகச் செய்து சில கருத்துக்கள் அல்லது செய்திகளைத் தெரிவிக்க வைக்கவும் சித்தர்களால் இயலும்.

சித்தர்கள் முக்கால ஞானிகள். அதாவது நடந்ததும் நடப்பதும் இனிநடக்க இருப்பதும் அவர்களுக்குத் தெரியும். நினைத்த மாத்திரத்தில் வாழவும் மறையவும் காற்றில் பறக்கவும் மூலிகைகளை உண்டு மெய் மறந்திருக்கவும் அவர்கள் அறிந்திருந்தார்கள்

ஒரு சில தலங்கள் சித்தர்கள் அங்கு வாழ்ந்ததால் புகழ் பெற்றவை. மதுரைத் தலத்திற்கு உரிய சித்தர் சுந்தரானந்தர். இவர் பதினெண் சித்தருள் ஒருவர். கடம்ப வனத்தைத் தமக்கு உரிய இடமாகக் கொண்டிருந்தவர். இந்தச் சித்தர் பெயராலேயே இக்கோயில் ஈசுவரர் சுந்தரேசுவரர் எனப் பெயர் பெற்றவர் என்பர்.

சதுரகிரியிலுள்ள மகாலிங்கத் திருவுருவத்தை அகத்தியர் பிரதிட்டை செய்து, இந்தச் சித்தரின் மேற்பார்வையில் இருந்துவரச் செய்தார். அதனாலே அது சுந்தர மகாலிங்கம் என்று குறிக்கப்பெறுகிறது.

மதுரை, புதன்மேடு என்று கருதப் பெறுகிறது. எனவே புதன் கிழமைகளில், சித்திரை வழிபாட்டால் குறைகள் நீங்கும் என்று மக்கள் நம்புகின்றனர்.

சித்தர் சந்நிதியைப் பூவால் அலங்கரித்தும் சித்தருக்குச் சாம்பிராணித் தைலமும் மாலையும் சாத்தியும் சிலர் வழிபடுகின்றனர்.

'எல்லாம் வல்ல சித்தராக' இறைவன் எழுந்தருளி கல் யானையைக் கரும்பு தின்ன வைத்த திருவிளையாடல் புரிந்தார். இந்த விழா தைப் பொங்கலன்று கொண்டாடப்படுகிறது. கரும்பு தின்ற யானை இந்தச் சித்தர் கோயில் அருகே, சொக்கர் கருவறைச் சுவரில் உளது.

துர்கை

கிழக்கு நோக்கியிருக்கும் சித்தர் கோயில் அருகே வடக்கு நோக்கி துர்கை அம்மன் கோயில் கொண்டிருக்கிறாள்.

இந்த துர்கையை வழிபடுபவர்கள் உடனே பலன் பெறுவதாகக் கூறப்படுகிறது.

(1) இந்திய—சீனப் போர் (2) இந்தியா—பாகிஸ்தான் போர், (2) பங்களா தேசப் போர் ஆகியவை நடை-பெற்றபோது இந்தத் துர்கை மிகவும் கோபமாகக் காட்சியளித்ததாயும் அந்தப் போர்கள் நடந்த காலம் முழுவதும் சிறப்பு வழிபாடுகளை ஏராளமான மக்கள் தொடர்ந்து செய்து வந்ததாகவும் கூறுவர்.

பருவம் வந்தும் திருமணம் கூடாத பெண்கள் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் ராகு காலங்களில் துர்கையை வழிபடுகின்றனர். எலுமிச்சம் பழத்தை இரண்டாக நறுக்கிச் சாறு பிழிந்த பிறகு, அதன் உட்பகுதியில் திரியுடன் நெய்விளக்கு ஏற்றிப் பிரார்த்தித்துத் திருமணம் கைகூடப் பெறுகின்றனர்.

கணவனுடன் நேர்ந்த ஊடல் நீங்க, துர்கை அம்மன் சந்நிதிக்கு முறையாக வந்து உளமார வழி

பட்டு வேண்டி, மீண்டும் கூடிய தம்பதிகளும் உள்ளனர்.

துர்கை அம்மனிடம் வேண்டுகோள்களை நிறை வேற்றும் முறைகள் வருமாறு:

(1) சந்தனக் காப்புச் சாத்தல்
(2) சிவப்புப் புடைவை அணிவித்தல்
(3) மாலை அணிவித்து
அர்ச்சனை செய்தல்

மஞ்சளும் சந்தனமும் கலந்து சேலை போல துர்கை அம்மனுக்கு அலங்காரம் செய்யப் பெறுவது இக்கோயிலின் தனிச்சிறப்பு. இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 1981—இல் இத்திருக்கோயிலுக்கு வந்திருந்த போது, இந்தச் சோடனையைப் பாராட்டி மகிழ்ந்தது குறிப் பிடத்தக்கது.

சண்டிகேசுவரர்

துர்கைக்கு அருகே சண்டிகேசுவரர் சந்நிதி உளது. பஞ்ச மூர்த்திகளில் ஒருவரான இவரை வழிபடுவதும் சிவ வழிபாட்டில் இன்றியமையாத ஒரு கூறாகும்.

விமான வழிபாடு

சுவாமி கருவறை மீதுள்ள விமானத்தைச் சண்டி கேசுவரர் சந்நிதிக்கு அருகேயிருக்கும் ஒரு தூண் ஓரமாக நின்று பார்த்துக் கும்பிட வழி செய்யப் பெற்றுள்ளது. தங்கத்தாலான இந்த விமானத்தை வழிபடுவது ஒரு பேறாகும்.

தலவிருட்சம்

''எப்புவனத் தினுமென்றும் கண்டறியா
அதிசயமும் எண்ணுக்கு எய்தாத்
திப்பியமும் இக்கடம்ப வனத்தின்று
கண்டுவகை திளைத்தோம் அங்கண்
வைப்பனைய ஒருபுனித வாலிமருங்கு
ஒருகடம்ப வனத்தி னீழல்
ஒப்பிலொளி யாய்முளைத்த சிவலிங்கம்
ஒன்றுளதென றுரைப்பக் கேட்டான்''

(திருவிளையாடற்புராணம்—இந்-76)

ஒவ்வொரு தலத்துக்கும் சிறப்பாக ஒரு மரம் உண்டு. கடல் வாணிகத்திற் சிறந்த பாண்டியர் வழிபடும் கோயிலுக்கு உரியது, கப்பல் கட்ட உதவும் கடப்ப மரம். இக்கோயில் ஏற்படுமுன் இப்பகுதி கடம்பவனமாக இருந்தது.

இப்போது கடப்ப மரம் அருகிவிட்டது. பட்டுப் போன ஒரு மரத்தின் பகுதிகளுக்குத் திருப்பனந்தாள் காசி மடத்தார் வெள்ளித் தகடு போர்த்தி அதைப் பாதுகாக்க உதவியுள்ளனர். தாவர இயலார் இந்த மரத்தை Stephegyre Parvifolia என்பர்.

கடம்பவனப் புராணம் என்பது இத்தலத்துக்கு உரிய இலக்கியங்களுள் ஒன்றாகும். மீனாட்சியம் மனுக்கு

கடம்ப வனத்தாய்
கடம்ப வனத் தேன்
கடம்ப வனப் பூவை
கடம்ப வனப் பொன்
கடம்ப வன வல்லி

என்ற பெயர்களும் சொக்கருக்குக் கடம்பவனச் சொக்கர் என்ற பெயரும் உண்டு.

கனக சபை

கடம்ப மரத்தையடுத்து கனகசபை உளது. கனக சபையில் திருநீற்றுப் பதிகம் பொறிக்கப் பெற்றிருக் கிறது. ராகங்கள், தாளங்கள் பற்றிய ஒரு பழைய கல்வெட்டும் இங்கு உண்டு. அடுத்த மண்டபத்தில் 51 சிவலிங்கங்கள் உள்ளன.

மகாலெட்சுமி சந்நிதி

அதையடுத்து, திருமகள் (மகாலெட்சுமி) தெற்கு நோக்கி அருள் வழங்கிக் கொண்டிருக்கிறாள். இதே யிடத்தில் தெற்குப் பிராகாரத்தில் கலைமகள் (சரசுவதி) வடக்கு நோக்கி அமர்ந்து கல்விச் செல்வம் வழங்குவதைக் கண்டோம்.

வெள்ளைத் தாமரையில் வீற்றிருக்கும் கலை மடந்தைக்கும் செந்தாமரையில் வீற்றிருக்கும் திரு மகளுக்கும் இடையே இறைவனின் கருவறையை அமைத்த பாங்கு இன்புறத் தக்கது.

பொற்படியான்

மகாலெட்சுமி சந்நிதிக்கு அடுத்தது பொற்படி யான் சந்நிதி. இது ஊர் காவல் தெய்வமாக இருந்தது என்பர். விக்கிரகம் எதுவும் இல்லை. ஆகாய லிங்க மாக வழிபடப் பெறுகிறது.

இந்தத் திருச்சுற்றில் கடைசியாக இருப்பது இரத்தின சபை. அப்பால் தெற்கே திரும்பினால், மீண்டும் ஆறுகால் பீடத்தை அடைகிறோம்.

3. ஆயிரங்கால் மண்டபம்

கைபுனைந் தியற்றிய கவின்பெரு வனப்புகளாகவும் ஆய கலைகள் அறுபத்து நான்கிற்கும் நிலைக்களனாகவும் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் விளங்குகின்றன. தூண்களில் அழகொழுகும் சிற்பங்களை வடிப்பதற் காக, (1) திருவண்ணாமலை, (2) சிதம்பரம், (3) திருவாரூர், (4) திருவானைக்கா, (5) திருவரங்கம், (6) மதுரை, (7) திருநெல்வேலி ஆகிய ஏழு கோயில்களில் மட்டும் ஆயிரங்கால் மண்டபங்கள் உள்ளன.

இவற்றுள் எல்லாவகைச் சிறப்புக்களும் உடையது மதுரையில் உள்ள ஆயிரங்கால் மண்டபம். நாயக்க மன்னர்களின் தளவாயாக இருந்த அரியநாத முதலியார் இந்தக்கலைச் செல்வத்தைப் படைத் தவர் ஆவார். ஒவ்வொரு தூணும் தாங்கும் சிற்பத்தைக் கூர்ந்து கவனித்தால் அதையடுத்த தூணைக் காணுவதற்குக்கூட மனம் செல்லாது.

''கால் ஆயிரம் உடைய இம்மண்டபத்தைக் காண
கண் ஆயிரம் வேண்டும்''

என்று பாடத் தோன்றுகிறது.

இம்மண்டபம் ஈடும் இணையும் இல்லாச் சிற்பக் காட்சிக் கூடமாகும். இதன் சிறப்பை அறிஞர் பெர் கூசன் வியந்து போற்றுகிறார்.

''ஆயிரங்கால் மண்டபத்திலுள்ள சிற்பங்கள் மற்ற மண்டபங்களில் உள்ள சிற்பங்களையெல்லாம் விடச் சிறந்து விளங்குகின்றன. தூண்களின் கலை நுட்பம் செறிந்த வேலைப்பாடு காண்போரை வியப் படையச் செய்யும் வகையில் அமைந்துள்ளது.''

நுழைவாயிலின் இருபுறங்களிலும் கண்ணப்பர், அரியநாதர், அரிச்சந்திரன், குறவன், குறத்தி உருவச் சிலைகளைக் காணலாம். இங்குள்ள இசைத் தூண் களும் தனிக் கவனத்துக்கு உரியன. ஒரு தூணில் அன்னத்தின்மீது ரதி உட்கார்ந்திருக்கிறாள். அன்னத் தின் பாதத்தைத் தட்டினால் இசை ஒலியைக் கேட்க லாம்.

உள்ளேயிருக்கும் ஒவ்வொரு தூணும் காணத் தக்கது. வடகோடியில் கவினுறு நடராசர் திருவுருவம் இருக்கிறது.

கோயில் தொடர்புடைய தத்துவங்களையும் கலைகளையும் விளக்கும் வகையிலும் விக்கிரகங் களைப் பேணும் வகையிலும் இந்த ஆயிரங்கால் மண்டபம் 1963-இல் சுத்தம் செய்யப்பெற்று, கோயில் கலைக்கூடம் அமைக்கப்பெற்றது. தொல் பொருள் களஞ்சியங்களின் நிலைக்களனாக இந்தக் கூடம் இருந்து வருகிறது.

மதுரை காட்டிய வழியைப் பின்பற்றி, ஏனைய ஆயிரங்கால் மண்டபங்களும், புதுப்பொலிவு பெறத் தொடங்கியுள்ளன.

மதுரையில் உள்ள கோயில் கலைக்கூடத்தின் பிரிவுகள் வருமாறு:

1. கட்டிடக் கலை
2. கோயில் சிற்பங்கள்
3. படிம வகைகள்
4. ஆகமங்களும் பூசை முறைகளும்
5. கோயில் அலங்காரம்
6. கவின் கலைகள்
7. நாட்டுப்புறக் கலைகள்
8. கல்வெட்டு
9. தலவிருட்சங்கள்
10. சிவபெருமான் திருவிளையாடல் வண்ண ஓவியங்கள்
11. சந்தனக்கட்டையில் செய்யப் பெற்ற சாமரங்கள்
12. தந்தத்தில் செய்யப்பெற்ற பொருள்கள்
13. பனை ஓலையில் எழுதப்பெற்ற பழங்காலத்துக் கோயில் கணக்குகள்

4. அருட் செயல்கள்

இந்தத் தலத்தில் நடைபெற்றுள்ள அருட்செயல்கள் ஆயிரமாயிரம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்றைப் பதம் பார்ப்பதுபோல, எடுத்துக்காட்டாக ஏழாம் நூற்றாண்டு தொடங்கி, 1982-1983 வரை நடைபெற்ற ஒருசில நிகழ்ச்சிகளை இங்கு தொகுத்துச் சொல்லுவோம்.

1. சம்பந்தருக்கு அருள் பாலித்து திருநீற்றுப்பதிகம் பாடச்செய்த வரலாறு

ஏழாம் நூற்றாண்டில் மதுரையில் சைவ சமயம் நிலைகுலைந்து சமணம் ஓங்கியிருந்தது.

சைவ சமயத்தின் அடிச்சுவடுகூடத் தெரியாதபடி அது அழிந்துவிடக்கூடிய அபாயம் இருந்தது. பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியும் அமைச்சர் குலச்சிறையரும் திருமறைக்காட்டில் தங்கியிருந்த திருஞானசம்பந்தருக்குத் தூது அனுப்பி அவரை மதுரைக்கு வரவழைத்தார்கள்.

"சிவன் பாதம் பணியாத சமணர்களை வென்று வேத நெறியை நிலைநாட்டி, அரசனையும் சமணத்தினின்றும் மாற்றித் திருநீறு அணியச்செய்து பாண்டி

நாட்டில் சைவம் தழைக்கச் செய்து வெற்றியுடன் வருக'' என்று சிவனடியார்கள் பலரும் சம்பந்தரிடம் வேண்டினர். அவரும் நாள் நட்சத்திரம் பார்க்காமல் துணிச்சலுடன் புறப்பட்டார்.

சம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளினார். அவருடைய ஆற்றல்களையும் மகத்தான சாதனைகளையும் சிவபெருமானுடைய அருள் அவருக்கு முழுமையாக வாய்க்கப் பெற்றிருந்ததையும் சமணர்கள் அறிந்திருந்தனர். எனவே, அவருடைய வருகையால் சமணர்கள் அஞ்சினர். சமணர்கள் மிகுதியாக இருந்த இடங்கள் வழியாகச் சம்பந்தர் சென்ற போது, அவருக்கு அவர்கள் (சமணர்கள்) தொல்லை கொடுத்தார்கள். ஆனால் அந்தத் தொல்லைகள் சம்பந்தரை ஒன்றும் செய்யவில்லை என்பதை

''ஆனை மாமலை யாதி யாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயரன் நிற்கவே''*

என்ற சம்பந்தர் வாக்காலேயே அறிகிறோம். அவர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர்.

''அமணர் கொளுவுஞ் சுடர் பையவே சென்று
பாண்டியர்க்கு ஆகவே''

---

* திருவாலவாய் அரன் — மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான். அவன் அருள் எனக்கு இருந்ததால் ஆனைமலை முதலான இடங்களில் எத்தனையோ இன்னலைத் தந்த—நான் தங்கியிருந்த மடத்துக்கே நெருப்பு வைத்த — இந்த ஈனர்களால் என்னை ஒன்றும் செய்ய முடியவில்லை.

என்று சம்பந்தர் பாடினார். திருநீறு பூசியவர்களையும் உருத்திராட்ச மாலை அணிந்தவர்களையும் பாண்டியன் நின்ற சீர் நெடுமாறன் தண்டித்து வந்தான். சமணர் கைப்பாவையாக இருந்து வந்த அந்த அரசனையே அந்தத் தீ வெப்ப நோயாகத் தாக்கட்டும் என்பது கருத்து. 'பையவே' என்ற சொல் கருணையால் ஏற்பட்டது. தீயின் திசையை சம்பந்தர் திருப்பி விட்டதால் மன்னருக்கு வெப்ப நோய் கண்டது. அதைக் குணப்படுத்தச் சமணர்கள் மயில் பீலியும் கையுமாகக் கூடித் தங்கள் மந்திரங்களை ஓதினர். அரசனின் நோய் குணமாகவில்லை. அப்போது சம்பந்தர் அந்த மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார். அரசனுடைய நோயைத் தாம் நீக்கிவிடுவதாக இந்தக் குழந்தை கூறியதைக் கேட்டுச் சமணர்கள் எள்ளி நகைத்தனர்.

இருவருக்கும் சமமான வாய்ப்பு நல்கும் ஓர் உடன்பாடு காணப்பட்டது. அரசனுடைய உடலை சமணரும் சம்பந்தரும் ஆளுக்குப்பாதியாகப் பிரித்துக் கொண்டு, அவரவருடைய மதத்தின் மந்திரசக்தியால் குணப்படுத்தலாம். யார் குணப்படுத்துகிறார்களோ அவர்களுடைய மதமே வென்றதாக மற்றொரு சாரார் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது இந்த ஏற்பாடு (Formula).

சமணர்கள் அரசினின் உடம்பில் இடது பாதியை மயில் பீலியால் தடவி மந்திரம் சொன்னார்கள். அவர்கள் தடவத் தடவ அரசனின் வலி அதிகமாயிற்று. அரசனால் அதைப் பொறுக்க முடியவில்லை. சம்பந்தரை நோக்கினான் அரசன்.

''மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திருஆல வாயான் திருநீறே!''

என்ற பதிகத்தைச் சம்பந்தர் பாடி, ஆலவாய் அரன் திருநீற்றைப் பாண்டியனுடைய உடலில் வலப் பாதியில் பூசினார். அவர் திருநீற்றைப் பூசப்பூச, வெப்பம் அடங்கி உடல் குளிர்ச்சியாயிற்று. அரசனுடைய வேண்டுகோளுக்கு இணங்க, இடப்பக்கத்து வெப்ப நோயையும் சம்பந்தரே குணப்படுத்தினார்.

2. மாலிக்காபூர் மனமாற்றம்

டில்லியிலிருந்து வட இந்தியா முழுவதையும் ஆண்டு வந்த மகமதிய மன்னன் அவுரங்கசீப் மண்ணாசை கொண்டு தென்கோடியிலுள்ள தமிழ் நாட்டையும் தன் ஆளுகைக்குள் கொண்டுவரத் திட்டமிட்டான். தன் தளபதி மாலிக்காபூரை அதற்காக ஏவினான். அவன் அவ்வாறே 1310-ஆம் ஆண்டில் மதுரையை முற்றுகையிட்டான். அப்போது ஆட்சி புரிந்த பிற்காலப் பாண்டிய மன்னனான வீர பாண்டியன் வலு இழந்திருந்தமையால் மாலிக்காபூர் எளிதில் வெற்றி பெற்றான். கோட்டையைக் கைப் பற்றியதோடு மதுரைக் கோயிலைச் சூறையாடவும், இடித்துத் தரைமட்டமாக்கவும் மாலிக்காபூர் முற்பட்டான்.

அவனுடைய படை வீரர்களில் ஒருவனாகிய திருவேகம்பராயன் என்பவன் கோயிலைச் சுற்றிப் பார்த்து வந்தான். சுவாமி கோயில் கருவறையைச்

சுற்றி எட்டு யானை உருவங்கள் இருப்பதைக் கண்டு, சித்தர் சந்நிதியில் இருந்த துறவி ஒருவரிடம் அதைப் பற்றிக் கேட்டான். அத்துறவி யானைகள் விமானத்தைத் தாங்கும் புராண வரலாற்றைக் கூறினார், சிவ பெருமான் எல்லாம் வல்ல சித்தராக வந்து கல் யானைக்குக் கரும்பு வழங்கிய திருவிளையாடலையும் எடுத்துச் சொன்னார். அதைக் கேட்டு வியந்த திருவேகம்பராயன், முன் காலத்தில் நிகழ்ந்தது உண்மையாயின் இக்காலத்திலும் நிகழுமா எனச் செருக்குடன் வினவினான். 'அன்று தின்றது மட்டுமல்ல இன்றும் தின்னும்' என்று துறவி கூறினார்.

கேட்டு வியப்புற்ற திருவேகம்பராயன் மாலிக்காபூரையும் அவ்வற்புதம் காண அழைத்து வந்தான். துறவி கரும்பை மாலிக்காபூரிடமே கொடுத்து யானையிடம் நீட்டச் செய்தார். மாலிக்காபூரும் அவ்வாறே கொடுத்தார். அப்பொழுது யாவரும் வியக்கும் வண்ணம் கல்யானை தன் நீண்ட துதிக்கையை நீட்டி கரும்பை வாங்கித் தின்றது. வியப்புற்ற மாலிக்காபூர் 'உண்மையில் ஆண்டவன் இங்கேதான் இருக்கிறான்' என்று கூறியது மட்டுமின்றி கோயிலை இடித்துக் கொண்டிருந்த வீரர்களை அல்லாவின் பெயரைச் சொல்லி மேலும் இடிக்காதிருக்குமாறு ஆணையிட்டான்.

ஆலயம் இடிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டது. துறவி யாரென்று அறிய முற்பட்ட பொழுது, ஆலயத்துள் துறவி காணப்படவில்லை. எல்லாம் வல்ல இறைவனான சொக்கலிங்கப் பெருமானே மதுரை ஆலயத்தைக் காக்கும் பொருட்டுத் துறவியாக வந்து

இந்த அற்புதத்தை நிகழ்த்தினார் என்பது வெள்ளிடைமலை.

இந்த நிகழ்ச்சி 1310 சூன் இருபதாம் நாளில் நடைபெற்றதாகச் சீதளப் புத்தகம் கூறுகிறது.

3. மதுரையை மீட்ட கம்பண்ணன்

மகமதியர்கள் ஆதிக்கத்தின்கீழ் மதுரை இருந்து வந்தது. அவர்களுக்கு அஞ்சி மதுரையை ஆண்டுவந்த மன்னன் பராக்கிரம பாண்டியன் மதுரையிலிருந்து காளையார் கோயிலுக்கு ஓடிவிட்டான். இந்துக்களின் ஆலயங்கள் பலவும் இடிக்கப்பட்டன. இதை அறிந்த விஜயநகர மன்னன் குமார கம்பண்ணண் மதுரையை மீட்கப் பெரும்படையுடன் வந்தான்.

மகமதியர் ஆதிக்கத்தின்கீழ் மதுரை இருந்ததால், ஆலயத்தின் அவலநிலையையும், மக்களின் இன்னல் களையும் வேரொடு களைய வேண்டும் என்று விரும்பிய அங்கயற்கண்ணி அம்மன், குமார கம்பண்ண னுக்குக் கனவில் காட்சி தந்தாள். சிவபெருமானுக்கு விசுவகர்மா கொடுத்த வாளை கம்பண்ணர் கரத்தில் வைத்து "இந்த வாளால் மகமதியரை வென்று பாண்டி நாட்டையும் மக்களையும் நமது சமய ஒழுக்கங்களையும் காப்பாயாக" என்று கூறி மறைந் தாள். அம்மனின் கட்டளைக்கு ஏற்ப, கம்பண்ணர் மதுரை நோக்கி வந்தார்.

ஏற்கெனவே படையெடுத்து வந்த மகமதியர் கட்கு அஞ்சி, கோயில் ஸ்தானிகர்கள் இலிங்கத் திரு மேனியாகக் காட்சிதரும் சொக்கேசப் பெருமானைக் காப்பதற்காக, திருமேனியை மூடி அதன்மேல்

மணலைப் பரப்பி கருவறையில் கதவு உள்பட கல்லி னால் சுவர் எழுப்பி அடைத்தனர் வேறொரு சிவலிங் கத்தைச் செய்து அதுபோன்று கருவறையில் இருந்த அம்மனின் உருவத்தைப் பெயர்த்து விமானத்தில் மறைத்து அதற்குப் பதிலாக வேறொரு சிலையை வைத்து விட்டனர்.

கம்பண்ணர் மகமதியர்களை எதிர்த்துவெஞ்சமர் புரிந்து வெற்றி வாகை சூடி மதுரையை மீட்டிய போது, ஆலயத்தின் அவல நிலையைப் போக்குவ தற்குக் காவலர்களை அழைத்து கோயில் வாயிலைத் திறக்கச் சொன்னார். மணல் மேடு அகற்றப்பட்டு லிங்கத் திருமேனியை மட்டுமின்றிப் பல வியப்புகளை யும் அனைவரும் கண்டனர்.

நாற்பத்தெட்டாண்டுகளுக்குமுன் அடைக்கப் பட்ட கருவறைக்குள் லிங்கத்தின் திருமேனிக்குச் சாத்தப்பட்ட சந்தனமும், சண்பக மலர் மாலையும் அன்று விடியலில் சாத்தியதுபோலவே புதுப்பொலி வுடன் காட்சி தந்தன. வெள்ளியிலான குத்துவிளக்கு கள் இரண்டு லிங்கத் திருமேனிக்குமுன் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தன.

கருவறையின் கதவுகள் கற்சுவரால் மறைக்கப் பட்டு இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் அபிடேக ஆராதனைப் பொருள்கள் புதுப்பொலிவோடு காட்சி தந்தன. சொக்கநாதப் பெருமானின்அருள், காலனை வெல்லும் என்பதோடு மட்டுமின்றி காலத்தையும் வென்று நிற்கும் என்பது இந்த நிகழ்ச்சியிலிருந்து தெரிகிறது

4. தருமை ஆதீனத்தின் கரத்தில் தாமே எழுந்தருளிய தயாபரன்

சைவத்தையும் தமிழையும் ஒருசேர வளர்த்த தருமபுர ஆதீனத்தைத் தோற்றுவித்தவர் குருஞான சம்பந்தர். 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய இவர் தம் பெற்றோருடன் ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து சொக்கலிங்கப் பெருமானை வழிபட மதுரைக்கு வந்திருந்தார். நாள்தோறும் பொற்றாமரைத் திருக் குளக்கரையில் எண்ணற்ற சிவநேசச் செல்வர்கள் சிவ வழிபாட்டில் ஒன்றியிருப்பதைக் கண்டு தாமும் அவ்வாறே வழிபடக் கருதினார். அன்றிரவே சொக் கேசர் குருஞான சம்பந்தர் கனவில் தோன்றி ''யாம் பொற்றாமரைக் குளத்தில் வடகிழக்கு முனையில் இருக்கின்றோம். உள்ளன்போடு எடுத்து உளமார பூசித்து ஈடும் இணையுமிலாப் பேரின்ப நிலையைப் பெறுவாயாக'' என்று கூறி மறைந்தார்.

கனவில் கண்ட காட்சியையே நினைத்துக்கொண் டிருந்த குருஞான சம்பந்தர் மறுநாள் காலையில் பொற்றாமரைக் குளத்தில் நீராடி வடகிழக்கு மூலையில் இறைவனைத் தேடினார். என்னே இறைவனது அருள்! குருஞான சம்பந்தரின் திருக் கரங்களில், எல்லாம் வல்ல சொக்கநாதர் லிங்க வடிவில் தாமே எழுந்தருளினார் உளம் மகிழ்ந்த குருஞான சம்பந்தர் பொற்றாமரைக் குளத்திலிருந்து வெளியே வந்து ஆலயத்துள் சென்று பெருமானை வழிபட்டு, தமக்கு சிவபூசை முறையைத் தெளிவாகத் தெரிவிக்கும் குருநாதர் ஒருவரைக் காண்பிக்க உதவு மாறு வேண்டினார். சொக்கநாதப் பெருமான்

அன்று இரவே குருஞான சம்பந்தர் கனவில் தோன்றி 'திருவாரூரில் உள்ள கமலைஞானப் பிரகாசரிடம் சென்று உபதேசம் பெறுக' என்றார்.

தமிழோடு பிறந்து மதுரையில் வளர்ந்த கொடியை மணந்த ஆலவாயண்ணல் தமிழும் சைவமும் இந்த மண்ணில் என்றும் நின்று நிலவ குருஞான சம்பந்தர்க்கு அருள் பாலித்து வழிகாட்டியாகவும் நின்று உதவினார். அந்த முறையிலேதான் இன்றும் தருமபுரத் திருமடம் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடித் தமிழுக்கும் சைவத்திற்கும் தொடர்ந்து தொண்டினைச் செய்து வருகின்றது.

இந்நிகழ்ச்சியை விளக்கும் வண்ணமே அருளாற்றல் பெற்ற குருஞான சம்பந்தர் கீழே குறித்திருப்பது போன்ற பாமாலைகளைப் புனைந்து மகிழ்ந்தார்.

''கண்ணுக்கினிய பொருளாகியே என் கரத்தில் வந்தாய்
விண்ணும் பரவிடும் அற்புதமே என்ன விஞ்சையாதான்
மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரணவாரியுள்
நண்ணும்படி செய் மதுராபுரிச் சொக்கநாயகனே''

சொக்கநாத வெண்பா இவர் பாடிய ஒப்பற்ற தோத்திர நூல்.

குருஞான சம்பந்தர் திருவுருவம், சுவாமி சந்நிதியிலிருந்து வெளிவரும் போது, நம் இடப்பக்கத்தில், கிழக்கு ஆடி வீதியிலுள்ள கோபுரத்தில் குடைவரைப் பகுதியில் தெற்கு முகமாக உள்ளது.

5. திருமலை நாயக்கரின் பிணி அகற்றியது

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் திருமலைநாயக்க

மன்னர். கி.பி. 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்ட பெருமை இம்மன்னருக்கு உரியது. இம்மன்னர் திருச்சிராப்பள்ளியையே தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார். இவர் 1634-இல் திருச்சிராப்பள்ளி யிலிருந்து தம் தலைநகரை மதுரைக்கு மாற்றினார்.

தலைநகரை இவர் மாற்றியதற்குச் சொக்க நாதப் பெருமானின் அருளே காரணம். ஆண்டு தோறும் மன்னர் திருமலை, திருச்சியிலிருந்து மதுரைக்கு வந்து கோயில் விழாக்களில் கலந்துகொள் வது வழக்கம். அவ்வழக்கப்படி 1634-ஆம் ஆண்டில் மதுரையில் நடைபெறும் ஒரு திருவிழாவைக் காணத் திருச்சியிலிருந்து புறப்பட்டார். நெடுநாட்களாகவே மன்னர் மண்டைச்சளி நோயால் துன்புற்று வந்தர்.

மதுரைக்கு வரும் வழியில் திண்டுக்கல்லில் மன்ன ருக்கு நோய் மிகுதியாயிற்று. அத்துன்பத்தை அவரால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. மதுரைக்குச் செல்லும் எண்ணத்தைக் கைவிடக் கருதினார். அன்றிரவே சொக்கலிங்கப் பெருமான் ஒரு சித்தர் உருவில் மன்னர் கனவில் தோன்றி, ''நீ தலைநகரைத் திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றி அன்னை அங்கயற் கண்ணியையும், சொக்கநாதரையும் வழிபட்டு அரசாட்சி நடத்தினால் உன் நோய் தீரும்'' என்று திருவாய் மலர்ந்தருளி திருநீற்றைக்கொடுத்து மறைந் தார். கனவுகண்ட திருமலை மன்னர், விழித்து எழுந்து கரத்தில் திருநீறு இருப்பதை உணர்ந்து பார்த்து வியந்தார்.

பொழுது விடிந்தது. மன்னர் தம்மிடம் வந்தவர் களிடம் தாம் கனவில் கண்ட காட்சிகளைக் கூறினார்.

தம் நோய் நீங்குமானால் தாம் நிலையாகவே மதுரையில் தங்கி ஆட்சிசெய்வதாகவும் ஐந்து லட்சம் பொன் செலவில் திருப்பணியும் திரு ஆபரணங்களும் செய்வதாகவும் திருவருளை வேண்டி உறுதி எடுத்துக் கொண்டார். பின்னர் அவர் பல் தேய்த்து முகம் கழுவி மூக்கைச் சிந்தியபோது, அவர் உடலில் இருந்த சளி முழுவதும் விழுந்தது. நோயும் அன்றோடு தீர்ந்தது.

மதுரையை அடைந்த மன்னர் திண்டுக்கல்லில் வேண்டிக் கொண்டவாறு கோயிலாட்சியை அபிஷேகப் பண்டாரம் என்பவரிடமிருந்து திரும்பப் பெற்றுத் தாமே திருப்பணியைச் செய்து முடித்தார். நாட்டு வருமானத்தில் ஒரு லட்சம பொன்னுக்கு ஒரு விழுக்காடு இறைவழிபாட்டுக்கும் 40 விழுக்காடு விழாக் களுக்கும் செலவிட அறக்கட்டளைகள் ஏற்படுத்தி னார். தம் ஆலயத் திருப்பணிகள் திருமலை மன்னர் வாயிலாக நடைபெற விரும்பிய இறைவன் இத்திரு விளையாடலை நிகழ்த்தியுள்ளார்.

6. பாடல் கேட்டுப் பரிசளித்தது

திருமலை மன்னருடைய ஆட்சிக்காலத்தில் குமர குருபரர் காசிக்குச் செல்லும் வழியில் மதுரைக்கு வந்தார். ஐந்து வயது வரையில் வாய் பேசாதவராய் இருந்து செந்தில் ஆண்டவர் அருளால் பேசும் ஆற்றல் பெற்று, கந்தர் கலிவெண்பா பாடிய கவிவாணர் இவர் என்பதைத் திருமலை மன்னர் அறிந்தார். கந்தனைப் பாடிய வாயால் மீனாட்சி அன்னையின் பேரில் பிள்ளைத்தமிழ் பாடுமாறு வேண்டினார். மன்னரின் ஆணைப்படி குமரகுருபரர் பிள்ளைத்தமிழ் பாடி திருமலை நாயக்கர் முன்னிலை

யில் அங்கயற்கண்ணி ஆலயத்தில் ஆறுகால் மண்டபத்தில் அமர்ந்து அவையோர் முன்னிலையில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை அரங்கேற்றினார். அவையில் வீற்றிருந்த திருமலை நாயக்க மன்னர் தேனிலும் இனிய தெள்ளு தமிழில் குமரகுருபரர் யாத்த பாடல்களைக் கேட்டு இன்புற்றார்.

வருகைப் பருவத்தில் வருகின்ற ஒன்பதாவது பாடலாகிய 'தொடுக்குங் கடவுள்' என்ற பாடலைக் குமரகுருபரர் உளமுருகப் பாடியபோது அன்னை அங்கயற்கண்ணி அப்பாடலைக் கேட்டு உள்ளம் மகிழ்ந்து தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்த விரும்பினாள். பெண் குழந்தையின் வடிவத்தில் வந்து திருமலை மன்னர் கழுத்தில் அணிந்திருந்த முத்து மாலையைக் கழற்றி, குமரகுருபரர் கழுத்தில் இட்டு மறைந்தது.

மன்னன் மயங்கி நின்றார். அவையினர் யாவரும் ஒன்றிய உணர்வோடு அங்கயற்கண்ணி அருளை வியந்து போற்றினர். உலகில் எத்தகைய மொழிகள் இருந்தாலும் பக்திக்கு என்று உள்ள ஒரு தனிமொழி தமிழ்தான் என்று சிந்தனையாளர்கள் கருதுவது வெறும்புகழ்ச்சி அன்று. குமரகுருபரருடைய வாழ்வும் வாக்கும் அன்னை அங்கயற்கண்ணியின் அருட்கொடையும் இக்கருத்துக்குச் சான்றாக நின்று நிலவுகின்றன.

7. தீட்சிதர் கண்ணொளியும் திருவருள் துணையும

திருமலை மன்னரது ஆட்சிக் காலத்தில் அவருக்கு உறுதுணையாக இருந்த அமைச்சர் நீலகண்ட

தீட்சிதர் என்பவர் ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் 'இளவேனில்விழா' (வசந்த உற்சவம்) நடை பெறுவதற்குப் புதிதாக மண்டபம் கட்ட வேண்டு மென்று திருமலை மன்னரிடம் கூறினார். அதன்படி கிழக்கு (சுவாமி) கோபுரத்திற்கு எதிரில் இன்றைய புது மண்டபத்தைக் கட்டும் திருப்பணி தொடங்கப் பெற்றது. கட்டுமானப் பணி மன்னரின் நேரடிப் பார்வையில் நிகழ்ந்து வந்தது.

மண்டபத்தின் உள்வரிசையில் தூண்களில் நாயக்க மன்னர் பலருடைய உருவங்களைக் கல்லால் செதுக்கி வைக்கத் திருமலை மன்னன் முடிவு செய்தான். இவற்றைச் செதுக்கும் பணியைச் சுந்தரமூர்த்தி ஆச்சாரி என்பவரிடம் ஒப்புவித்தான்.

திருமலை மன்னன் மற்றும் அவரது மனைவியர் சிலைகளை இக்கலைஞர் வடித்துக் கொண்டிருந்தார். அப்போது அரசியின் உருவத்தில் பெருந்தொடையில் ஊனம் ஏற்பட்டது. ஆச்சாரியார் எத்தனையோ கவனமாக அவ்வுருவத்தை அமைக்க முயன்றும், சிலை யின் பெருந்தொடையில் அதே இடத்தில் மீண்டும் ஊனம் ஏற்பட்டது. அங்கு வருகை தந்த அமைச்சர் நீலகண்ட தீட்சிதர் சிற்பியிடம் ''ஊனம் அப்படியே இருக்கட்டும்'' என்று உத்தரவிட்டார். அதனால் சிற்பியும் புதியதாக அரசியின் சிலையை வடிக்க வில்லை. சிலையின் பெருந்தொடையில் ஊனம் இருப் பதை திருமலை மன்னர் கண்டு அது ஏற்படக் காரணம் என்ன என்று வினவினார். சிற்பி நடந்த வற்றைக் கூறி அமைச்சர் நீலகண்ட தீட்சிதரின் உத்தரவையும் தெரிவித்தார். அரசியின் பெருந்

தொடையில், சிலையில் ஊனம் ஏற்பட்ட அதே இடத்தில் தழும்பு ஒன்று இருந்தது. திருமலை மன்னனுக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டிய இந்த மறைவான செய்தியை அமைச்சர் எங்ஙனம் அறிந்தார் என்று ஐயம் கொண்ட அரசன் அமைச்சர்மீது வெகுண்டு அவரை அழைத்துவர ஆணையிட்டான். தம் இல்லத்தில் பூசைசெய்து கொண்டிருந்த தீட்சிதர் அன்னை அங்கயற்கண்ணியின் அருளை வேண்டினார். குற்றமொன்றும் தாம் செய்யாதபோது கொற்றவன் தம்மை ஐயுற்றதை உணர்ந்தார். வழிபாட்டிற்காகத் தம் கையில் வைத்திருந்த சூடனைக் கொளுத்தி. தம் இரு கண்களிலும் வைத்துத் தம்மையே குருடனாக்கிக் கொண்டார். செய்தி மன்னருக்கு எட்டிற்று. தான் செய்த தவற்றை மன்னன் உணர்ந்தான். மாறாத் துன்பமுற்றான். அன்னையின் திருவருளால்அமைச்சர் மீண்டும் கண்ணொளி பெற்றார்.

8. தெப்பக்குளம் வெட்டியதும் விநாயகர் கிட்டியதும்

திருமலை மன்னர் மதுரை நகருக்குக் கிழக்கில் பெரிய தெப்பக் குளமொன்று வெட்டி வைக்க ஏற்பாடு செய்தார். இத்தெப்பக் குளத்தின் நீளம் 985 அடி. அகலம் 940 அடி. (305 மீட்டர், 290 மீட்டர்), நான்கு கரைகளையும் சுற்றி வந்தால் ஒரு மைல் நடந்தவர்களாவோம். இத்தெப்பக்குள வேலை கி. பி. 1635-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் முடிவுற்றது. திருமலை அரசனது அருட்பணியை உலகுக்கு எடுத்துக்காட்டச் சொக்கலிங்கப் பெருமான் விரும்பினார். மன்னர் தெப்பக்குளத்தைஉண்டாக்கிய

பொழுது ஆறு அடி உயரமும் நான்கு அடி அகலமு முள்ள கலையழகு மிக்கதுமான விநாயகர் விக்கிரகம் ஒன்று கிடைக்கச்செய்தார். இந்த விநாயகரை அருள் மிகு சுந்தரேசர் திருக்கோயிலில் இரண்டாம் பிரா காரம் தெற்குச் சுற்றில் திருமலை நாயக்கர் நிலை பெறச் செய்தார். இவ்விநாயகருக்கு மிகப் பெரிய கொழுக்கட்டை செய்து விநாயகர் சதுர்த்தியன்று படைப்பது வழக்கம். இவ்வழக்கத்தைத் திருமலை நாயக்கரே ஏற்பாடு செய்தார். விவரம் பிறிதோர் இடத்தில் காண்க.

9. பக்கிரியின் முயற்சியும் பத்திரகாளியின் கண்ணொளி மாட்சியும்

மகமதியரது ஆட்சியின்கீழ் மதுரை இருந்து வந்த பொழுது கி. பி. 1756-ஆம் ஆண்டு ஒரு மகமதிய பக்கிரி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசரர் திருக் கோயில் இராய கோபுரத்தில் கோபுர மேடையில் மசூதி ஒன்று கட்டத்தொடங்கினான். பலர் தடுத்தும் பக்கிரி தன் முயற்சியை நிறுத்தவில்லை. மதுரை மக்கள் மனம் கலங்கினர், இந்த மசூதியை அகற்ற அன்னை மீனாட்சியின் அருள் திருக்கோயிலில் கம்பத்தடி மண்டபத்திற்குக் கிழக்குப் பக்கம் உள்ள பத்ரகாளி மூலம் வெளிப்பட்டது. பத்ரகாளியம்மன் கண்களிலிருந்து உயிரொளி (இரத்தம்) இரண்டு நாட்கள் தொடர்ந்துவெளிப்பட்டுக்கொண்டிருந்தது. இந்த அற்புதத்தைக் கண்ட பக்கிரி, பள்ளிவாசல் கட்டுவதை நிறுத்திக்கொண்டான்.

10. பண்டிதராம் தொண்டருக்கு அன்னை மீனாட்சி பணிவிடை செய்தது

பண்டிதரான வேம்பத்தூர் பரம்பரையில் ஒருவர் சமையல் (பரிசாரகம்) சர்க்கார் கட்டளைப் பணியில் ஈடுபட்டவர். அவர் அம்பிகை மீனாட்சிமீது பாடல்கள் பாடிக் கொண்டு தம் பணியையும் மறந்திருந்தார்.

அவர் அரசனின் தண்டனையிலிருந்து தப்ப மீனாட்சி அம்மனே அவர் செய்ய வேண்டிய பணிகளைச் செய்து இரவு அர்த்தசாமப் பூஜைக்கான நிவேதனங்களைத் தயாரித்து வைத்திருந்தாள் என்பது கர்ணபரம்பரைச் செய்தியாகும்.

11. அன்னையின் அருளும் ஆங்கிலேயரான ரோஸ் பீட்டரின் அன்புக் காணிக்கையும்

இன்றைக்கு 170 ஆண்டுகளுக்குமுன் ஆங்கிலேய ஆட்சியில் ரோஸ்பீட்டர் என்னும் ஆங்கிலேயக் கிறித்தவர் 1812 முதல் 1928 வரை மதுரை மாவட்டத்து ஆட்சித் தலைவராகவும் இத்திருக்கோயிலின் மேற்பார்வையாளருமாக இருந்து வந்தார். நாள்தோறும் காலையிலும் மாலையிலும் அவர் குதிரை சவாரி செய்தவாறே சித்திரை வீதிகளில் கோவிலை வலம் வந்தார். பிறப்பால் கிறித்தவராக இருந்த போதிலும் இவருக்கு மீனாட்சி அம்மையின்பால் எல்லையற்ற ஈடுபாடு இருந்தது. நீதி தவறாது நேர்மையான முறையில் மக்கள் நலம் கருதியே இவர் ஆட்சி செய்து வந்ததால், இவரைப் பாண்டிய மன்னரது மறுபிறவி

யாக மதுரை மக்கள் கருதினர். அதனால் 'பீட்டர் பாண்டியன்' என்ற பெயரால் இவரை அழைத்தனர்.

ஒருநாள் இடி மின்னலுடன் பெருமழை விடாது பெய்து கொண்டிருந்தது. நள்ளிரவில் காரிருளிலும் மழை கொட்டிற்று. இடையிடையே செவிகள் வெடிக்கும்படி முழக்கத்துடன் இடியிடித்தது.

ரோஸ் பீட்டர் துரை அப்போது தம் மாளிகையின் மாடியில் ஒரு கட்டிலில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். அந்த மாடி இடிந்து விழப் போகிறது.

அப்போது ஒரு சிறுமி, துரையின் கட்டில் அருகே வந்து கைதட்டி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த ஆட்சியாளரை எழுப்பிவிட்டு மிக விரைவாக கீழே இறங்கி ஓடினாள்.

ரோஸ் பீட்டர் துரை திடுக்கிட்டெழுந்தார். சிறுமியைப் பின்தொடர்ந்து கட்டடத்துக்கு வெளியே ஓடினார். அடுத்த நொடியிலேயே இடி விழுந்து, மாடி சரிந்து தரை மட்டமாவதையும், தாம் படுத்திருந்த கட்டில் முறிவதையும் கண்டார். அதிர்ச்சியடைந்த துரை, அந்தச் சிறுமியை எங்கும் தேடினார். அவள் கோயிற் கோபுரத்துக்குள் செல்லுவது போன்ற காட்சி அவருக்குத் தோன்றிற்று.மீனாட்சி அம்மையே தம்மைக் காப்பாற்றியதை உணர்ந்தார். காணிக்கை வழங்க விரும்பி பட்டர்கள் கருத்தைஅறிந்து, அம்மன் குதிரை வாகனத்தில் எழுந்தருளும் போது அம்மனின் இரு திருவடிகளையும் தாங்க இரண்டு மிதியடிகள் (Stirrup) செய்து வைத்தார். ஒவ்வொன்றும் 28 தோலா எடை உடையன. அவற்றில் 412 சிவப்புக் கற்களும் 80பச்சை வைரமும், 72 மரகதக் கற்களும்

நான்கு முத்தும், நான்கு நீலமும், நான்கு வைடூரியமும் பதிக்கப் பெற்றுள்ளன.

ஓய்வுபெற்ற பிறகும் அவர் மதுரையிலேயே தங்கி மீனாட்சி அம்மன் அருளை நாளும் நன்றியுடன் நினைத்தார். அவர் விரும்பியவாறு மீனாட்சி அம்மனின் கோபுரத்தைப் பார்த்தபடியே அவர் உடல் மெயின் கார்டுப் பொட்டல் என வழங்கும் மெய் காட்டு வெளியில் ஒய். எம். சி. ஏ. அருகேயுள்ள மாதா கோயில் கல்லறையில் அடக்கம் செய்யப் பெற்றுள்ளது.

12. வயிநாகரத்தின் வள்ளன்மையும் அன்னையின் அருள்பாலிப்பும்

அமராவதிபுதூர் வயிநாகரம் நாகப்பசெட்டியார் அன்னை மீனாட்சியிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். பல திருப்பணிகளுக்காக 1850-ஆம் ஆண்டு முதல் 1880-ஆம் ஆண்டுவரை மதுரைக் கோயிலில் வயிநாகரம் குடும்பத்தார் காற்கோடி செலவிட்டிருந்தனர். மொட்டைக் கோபுரத்தை முழுக் கோபுரமாக்கினர். நாவுக்கரசரைப்போல நாகப்பரும் உழவாரப்படை கொண்டு உள்ளன்போடு ஆலயத்தைத் தூய்மைப்படுத்தினார். நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் அன்னையை எண்ணியவராக அவர் வாழ்நாள் அமைந்தது. 1877-இல் கும்பாபிஷேகம் நடத்தி, இரண்டு தங்கக் குடங்களை இக்கோயிலுக்கு இக் குடும்பத்தினர் வழங்கியிருக்கின்றனர்.

இரவு உணவாக அன்னையின் பிரசாதத்தை உண்பதேயல்லாமல் வேறு எதையும் நாகப்பர் தொடமாட்டார். சொந்த வேலையாக மதுரையை விட்டு வைகைக்கு வடக்கே 30 கல் தொலைவிலுள்ள வேற்றூர்க்கு ஒருநாள் சென்றார். அக்கால வழக்கப் படி மாட்டு வண்டிப் பயணத்தை மேற்கொண்டார். மதுரை திரும்ப இரவுச் சூழ்நிலை இடந்தராததால், வழியில் தங்கினார். அவ்வூரார் அவருக்கு உணவு வழங்க முன்வந்தபோது அன்னையின் பிரசாதத்தைத் தவிர வேறு உணவை உட்கொள்ள விரும்பாத அருளாளர் உண்ண மறந்து உறங்கச் சென்றார்.

நடுநிசிப் பொழுது. அழகே உருவான ஒரு பெண் குழந்தை கையில் தங்கத்தாம்பாளமும், அந்தத் தாம்பாளத்தில் அன்னையின் பிரசாதங்களும் ஏந்திய வாறு அருளாளருக்குக் காட்சி தருகிறது. நாகப்ப ரிடம் அவற்றைக் கொடுத்ததும் குழந்தை மறைந்து விடுகின்றது. நாகப்பர் மெய்சிலிர்க்கிறார். குழந்தை யாக வந்து தமக்குக் காட்சி கொடுத்தது அன்னை மீனாட்சியே அல்லாமல் மற்றெவரும் இலர் என உணர்கின்றார். அன்னையின் அருளாற்றலையும் தாம் இருக்கும் இடம் தேடி வந்ததையும் நினைத்து, உணர்ந்து, நெகிழ்ந்து, அன்பு வயப்பட்டு, அழுது அரற்றுகின்றார்.

இது போன்ற தொல்லையை அன்னைக்கு இனி யும் கொடுக்கக்கூடாது என்று உறுதி கொள்கின்றார். எது நேரினும் வைகைக் கரையைத் தாண்டி பயணம் மேற்கொள்வது இல்லை என்று உறுதி கொள்கிறார்.

மதுரையை நோக்கி உடனே விரைகின்றார். வைகறைப் பொழுதில் ஆலயத்தை அடைகின்றார்.

அப்பொழுது ஆலயக் கருவறையில் முந்தின நாள் வைத்துப் பூட்டப்பட்ட தங்கத் தாம்பாளத்தைக் காணவில்லை என்று தேடுகின்றார்கள். நாகப்பர் தம்மிடம் இருந்த தங்கத் தாம்பாளத்தை அர்ச்சகரிடம் கொடுத்து நடந்ததைக் கூறுகிறார். அன்னை மீனாட்சி குழந்தை வடிவில் வந்து நாகப்பருக்கு அருள்பாலித்ததைக் கேள்விப்பட்ட மதுரை மக்கள் வியந்தனர்.

வைகைக் கரையைத் தாண்டிப் பயணம் செய்ய மாட்டேன் என்று உறுதி கொண்ட நாகப்பர் அமராவதி புதூரில் தம் மனைவி இறந்த போதும்கூட மதுரையை விட்டுச் செல்லவில்லை. இறுதிவரை தாம் கொண்ட கொள்கையில் உறுதியாக வாழ்ந்து மதுரை மண்ணுக்கே தம் உடலைச் சொந்தமாக்கினார்.

13. உடைமைகள் சிதறியதும் உருவச்சிலை தப்பியதும்

இந்திய மண்ணில் பக்திப் பயிர் செழித்து வளர பன்னெடுங்காலமாக மதுரையில் அன்னை மீனாட்சி கொலுவீற்றிருப்பதைப் போல, உலக மக்களது உள்ளத்தில் எல்லாம் பக்தி உணர்வு ஊட்ட அமெரிக்க நாட்டு டெக்சாஸ் மாநிலத்தில் ஹூஸ்டன் நகரில் அன்னை மீனாட்சிக்கு ஓர் ஆலயம் எழுப்ப அமெரிக்காவாழ் இந்துக்கள், குறிப்பாகத் தமிழ் மக்கள் முன்வந்தனர். ஹூஸ்டன் நகரில் ஆலயம்

எழுப்பி அன்னை மீனாட்சியின் திருவுருவம் பிரதிட்டை செய்து குடமுழுக்கு விழாவுக்கு நாள் குறிப்பிடப்பட்டது. 1982. ஜூன் மாதம் 27-ம் தேதி யில் குடமுழுக்கு விழா இனிது நடத்த திட்டமிட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஹூஸ்டன் நகரில் உருவாகிய ஆலயத்தில் அன்றாட பூசைகள் செய்வதற்கும் குடமுழுக்கு விழா நடத்துவதற்கும் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைச் சேர்ந்த திரு. சந்திரசேகர் பட்டர் என்ற தங்கம் பட்டர் மதுரையிலிருந்து பயணம் மேற்கொண்டார்.

மதுரைக்கோயிலின் சார்பில் ஹூஸ்டன் ஆலயத்திற்காக வெண்கலத் திருவுருவம் ஒன்றும், பட்டாடை ஒன்றும் காணிக்கையாக அவர் மூலம் கொடுத்தனுப்பப் பெற்றன. தங்கம் பட்டர் சென்னையிலிருந்து 1982, ஜூன் மாதம் 21-ம் தேதியில் விமானம் மூலம் பம்பாய் வழியாக ஹூஸ்டன் நகருக்குப்புறப்பட்டார்.

அவர் பயணம் செய்த விமானம், பம்பாய் விமான நிலையத்தில் இறங்குவதற்குச் சில மணித் துளிகளுக்கு முன் விபத்திற்குள்ளாகிச் சிதறி விழுந்தது. தாம் எடுத்துச்சென்ற உடைமைப் பொருள்களோடு காணிக்கைப் பொருளான அன்னை மீனாட்சியின் திரு உருவத்தையும், பட்டு ஆடையையும் திரு. தங்கம் பட்டர் வைத்திருந்தார். விபத்தில் எந்த ஆபத்தும் வராமல் தங்கம் பட்டர் எழுந்து பார்த்தபோது அவர் எடுத்துச் சென்ற உடைமைகள் யாவும் எரிந்து சாம்பலானதையும் மீனாட்சியின்

திருவுருவமும், பட்டாடையும் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது கண்முன்னே இருப்பதையும் கண்டார்.

தம்மோடு பயணம் செய்த 18 பேர் விமான விபத்தில் உயிரிழந்த போதும் தங்கம்பட்டர் அன்னையின் அருளால் ஒரு கீறல்கூட இன்றி உயிர் தப்பினார். அவர் எடுத்துச் சென்ற ஏனைய பொருள்கள் யாவும் சேதமடைந்த போதும், கோயிற் பொருள்களுக்கு ஒரு குறையும் நேரவில்லை. என்னே அன்னையின் இன்னருள்!

5. கோபுரங்கள்

''விண்ணை முட்டும் கோபுரங்கள்'' என்று புலவர்களும், கவிஞர்களும் தமிழ்நாட்டுக் கோயில்களின் கோபுரங்களைப் போற்றியிருக்கின்றனர். ஒரு தொகுப்பாகவும் அழகாகவும் கோபுரங்கள் அமைந்தும், சுதை ஓவியங்கள் நிரம்பப் பெற்றும் இத்திருக் கோயில் வாயில்களைப் பொலியச் செய்கின்றன.

பொற்றாமரைக் குளத்திலிருந்து இவற்றைக் கண்டு களிக்கலாம். இராணி மங்கம்மாள் 1689-இல் தனக்காக அமைத்துக்கொண்டஅரண்ம்னை வடக்குச் சித்திரை வீதியில் நாளங்காடிக்கு அருகே, பொதுப் பணித் துறை அலுவலகமாக இப்போது உள்ளது. இந்த மாளிகையின் மாடிக்குச் சென்று வளைந்து வளைந்து அமைந்த படிகளின் வழியாக உச்சிப் பகுதியை அடைந்து அங்கிருந்து பார்த்தால் இக்கோபுரங்களின் அருமை தெரியும் தியாகராசர் பொறியியல் கல்லூரி வளாகத்திலுள்ள மலைமீதிருந்தும், கோபுரங்களைக் கண்டு மகிழலாம்.

அருகே நின்று, இந்தக் கோபுரங்களை நோக்கினால், இறைவனின் உயர்ந்தநிலையையும், மனிதனின் தாழ்ந்த நிலையையும், இறைவனுடைய திருவடி

நிழலில் நாம் தங்கியிருக்கும் தத்துவத்தையும் உணருகிறோம்.

"உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற—மெய்யா! விமலா! விடைப் பாகா! வேதங்கள்—ஐயா! என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!" என்னும் திருவாசகத் தத்துவமும் நம் நினைவுக்கு வரும்.

சிவபெருமான் தம் திரு முடியிலுள்ள பிறையின் அமுதமாகிய மதுரத்தை இக்கோயில் விமானங்களிலும் கோபுரங்களிலும் தெளித்தார் என்ற சிறப்புப் பற்றி ஏற்பட்ட காரணப் பெயரே மதுரை என்பது. இத்தகைய பெருமை வேறு தலங்களிலுள்ள கோபுரங்களுக்குக் கிடையாது. இக்கோயிலில் பதினான்கு கோபுரங்களைப் பாண்டியர் அமைத்திருந்ததாகவும், அவை யாவும் அல்லாவுதீன் கில்ஜியின் தளபதி மாலிக் காபூர் படையெடுத்தபோது இடித்துத் தள்ளப் பட்டன என்றும் வரலாற்று வல்லுநர் வரைந்துள்ளனர்.

இறைவனும் இறைவியும் சேர்ந்து காட்சி கொடுக்கும் சுதை, நான்கு வெளிக்கோபுரங்களிலும் இருப்பது மற்றுமொரு சிறப்பு.

இப்போது இக்கோயிலில் மொத்தம் 12 கோபுரங்கள் உள்ளன. இவற்றை மூவகையாகக் காண்போம்.

I. சித்திரை வீதிகளில் உள்ளகோபுரங்கள்

1. கிழக்குக் கோபுரம்

இதுவே இக்கோயிலுள்ள வெளிக் கோபுரங்களில், காலத்தால் பழமையானது. 1216 முதல் 1238 வரை மதுரையை ஆண்ட மாறவர்மன் சுந்தர பாண்டியன்

இந்த ஒன்பது நிலைக் கோபுரத்தைக் கட்டினான்.

உயரம் 153 அடி (49 மீட்டர்)

அடித்தளம்—நீளம் 111 அடி. அகலம் 66 அடி. சுதைகள் 1011.

பெருமிதத்துடன் விளங்கும் இக்கோபுரத்துக்கு அருகே மதுரை வீரன் கோயில் கட்டப்பெற்றிருக்கிறது. இது தனியார் ஆட்சிக்கு உட்பட்டது.

இவ்வீரனுக்கு இருபுறமும் உள்ள இவன் தேவி வெள்ளையம்மாளும் தெற்குப் பக்கத்தில் கருப்பண சாமியும் கோயில் கொண்டுள்ளனர். மதுரை மக்கள் பய பக்தியுடன் இவர்களை வணங்குகின்றனர். வீரப்பன் என்னும் பெயரோடு திருச்சியில் ஊழியம் பார்த்த ஒருவனைத் திருமலை நாயக்கர் மதுரைக்கு அழைத்து வந்தார் என்பர். திருட்டுச் செயல்களில் ஈடுபட்டிருந்த கொடியவர்களிடமிருந்து, அவன் மதுரை மக்களைக் காப்பாற்றினான். அந்தக் கள்ளர்களை அடக்கிய மாவீரன், மதுரை வீரன் ஆவான்.

திரளான மக்கள் மதுரை வீரனை வழிபடுகின்றனர். மதுரை வீரன் அம்மானை என்ற பாடல்களைப் பாடி, வெள்ளிக்கிழமைகளில் இங்கு பிரார்த்தனை செய்பவர்களுக்குத் திருமணம் கூடும், வேலை கிடைக்கும், நோய் நீங்கும், மனக்கவலை போகும், மாடு கன்றுகள் தழைக்கும், பயிர்கள் செழிக்கும் என்பது மதுரை மக்களின் நம்பிக்கை.

கருப்பணசாமிக்குப் பிரார்த்தனையாகச் சங்கிலிகள், ஈட்டி, குத்துக்கம்புகள் வழங்குகின்றனர். கருப்பணசாமி பாதத்திலிருந்து வாசற்படிவரை 18படிகள்

உள்ளன. இந்த 18 படிகளும் ஏறிச் சத்தியம் செய்து விட்டுத் திரும்ப 18 படிகளும் இறங்கி வந்தவர் யாராயினும் பொய்ச் சத்தியம் செய்திருந்தால் 18 நாள்களில் இறந்துவிடுவர் என்று மதுரை மாவட்டத்து மக்கள் நம்புகின்றனர். வழக்குகளை இந்தச் சந்நிதியில் தீர்த்துக்கொள்ளுவது உண்டு.

2. தெற்குக் கோபுரம்

இது, இந்தத் திருக்கோயில் கோபுரங்கள் எல்லாவற்றிலும் உயரமானது. இதில் ஏறி மதுரை மாநகரைக் காண்பது கவினுறு காட்சியாகும். திருக்கோயிலார் அனுமதி பெற்று, இக்கோபுரத்தின்மீது ஏறிப் பார்க்கலாம்.

கோபுரத்தின் உச்சியில் யாளியின் பெரிய உருவம் உள்ளது. இந்த யாளியின் ஒவ்வொரு கண்ணும் இரண்டரை அடி குறுக்களவு உடையது. இதிலிருந்து யாளியின் அளவையும், கோபுரத்தின் அளவையும் கற்பனை செய்து கொள்ளலாம்.

ஒவ்வொரு கலசமும் ஒன்பது அடி ஒன்பது அங்குலம் உயரமுடையன. மிகுதியான சுதைகள் இருப்பதும் இக்கோபுரத்திலேயே ஆகும்.

கட்டியவர்	—சிராமலைச் செவ்வந்தி மூர்த்தி செட்டியார்
காலம்	—கி. பி. 1559
நிலைகள்	—9
உயரம்	—160' 9'' (52 மீட்டர்)
அடித்தளம்	—நீளம் 108 அடி, அகலம் 67 அடி
சுதைகள்	—1511

3. மேலக் கோபுரம்

சட்டியவர்	*—சடையவர்மன் பராக்கிரம பாண்டியன்*
காலம்	*—கி. பி. 1315—1347*
நிலைகள்	*—9*
உயரம்	*—154' 6'' (50 மீட்டர்)*
அடித்தளம்	*—நீளம் 101 அடி, அகலம் 63' 6''*
சுதைகள்	*—1124*

4. வடக்குக் கோபுரம்

1877 வரை இது கலச மில்லாமலும் சுதை வேலை செய்யப்படாமலும் இருந்தது. அதனால் மொட்டைக் கோபுரம் என்ற பெயர் அந்தக் காலத்தில் நிலவியது.

கட்டியவர்	*—கிருஷ்ண வீரப்ப நாயக்கர்*
காலம்	*—கி.பி. 1564—1572*
உயரம்	*—152 அடி (49 மீட்டர்)*
அடித்தளம்	*—நீளம் 111' 6'' அகலம் 66' 6''*
சுதைகள்	*—404*

அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தினர் 1878-ல் இக் கோபுரத்தைப் பூர்த்தி செய்து, சுதை களையும் அமைத்தனர். இந்தக் கோபுரத்தில்தான் சுதைகள் எண்ணிக்கை குறைவு.

இக்கோபுரத்தின் அடியில் வடக்குச் சித்திரை வீதி யில் மொட்டைக் கோபுரத்து முனியின் கோயில் இருக் கிறது. வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் பெருவாரி யான மக்கள் வழிபடுகின்றனர். விளையாட்டுத் தொட்டில்களை இக்கோயிலில் கட்டுவதும் கோபுரம்

முழுவதும் பூ மாலை தொங்க விடுவதும் மரபு. மகப் பேறு இனிது நடைபெறவும் தொற்றுநோய்கள் பரவாதிருக்கவும் மதுரையின் சுற்றுப்புறத்தில் வாழும் மக்கள் இந்த முனியை வழிபடுகின்றனர்.

ஒவ்வொரு கோபுரத்திலும், புராண நிகழ்ச்சி களும் திருவிளையாடல்களும் சுதை வேலையில் வடிக்கப்பட்டிருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

II. சுவாமி சந்நிதிக் கோபுரங்கள்

5. முக்குறுணி விநாயகர் கோபுரம் (தெற்குப் பார்த்தது)

கட்டியவர்	—சிராமலைச் செவ்வந்தி மூர்த்தி செட்டியார்
காலம்	—கி.பி. 1559
நிலைகள்	—ஐந்து
உயரம்	—69 அடி (21மீட்டர்)
அடித்தளம்	—நீளம் 44 அடி. அகலம் 33 அடி
சுதைகள்	—112

நடுக்கட்டுக் கோபுரம் என்ற பெயர் இந்த கோபு ரத்துக்கு உண்டு.

6. மேல ஆடிவீதிக் கோபுரம் (சுவாமி சந்நிதி—பின்பக்கம்) பலகக் கோபுரம் என்ற பெயரும் உண்டு.

கட்டியவர்	—மல்லப்பன்
நிலைகள்	—ஐந்து
காலம்	—கி.பி. 1374
உயரம்	—72 அடி (22 மீட்டர்)

அடித்தளம்	—நீளம் 48 அடி, அகலம் 31 அடி
சுதைகள்	—340

7. வடக்கு ஆடிவீதிக் கோபுரம் (சின்ன மொட்டைக் கோபுரம்)

கட்டியவர்	—செவ்வந்தி வேலப்ப செட்டி
காலம்	—கி.பி. 1560
உயரம்	—71 அடி (21.5 மீட்டர்)
அடித்தளம்	—நீளம் 45 அடி, அகலம் 34 அடி
சுதைகள்	—184

8. கிழக்கு ஆடி வீதிக் கோபுரம் (சுவாமி சந்நிதி)

கட்டியவர்	—வசுவப்பன்
காலம்	—கி.பி. 1372
நிலைகள்	—ஐந்து
உயரம்	—66 அடி (20 மீட்டர்)
அடித்தளம்	—நீளம் 42 அடி, அகலம் 33 அடி
சுதைகள்	—280

குருஞான சம்பந்தர் சந்நிதி இக்கோபுரத்தின் குடவறையில் உள்ளது. கல் நிலையில் பாண்டியர் சின்னமாகிய மீன் உருவத்தைக் காணலாம். இந்தக் கோபுரத்துக்குக் கோபுர நாயக கோபுரம் என்ற பெயரும் வழங்குகிறது.

9. சுவாமி சந்நிதி முதல் பிராகாரக் கோபுரம்

குடவறையில் அதிகார நந்தி சந்நிதி உள்ளது.

நிலைகள்	—மூன்று
கட்டியவர்	—மாறவர்மன் குலசேகரன்
காலம்	—கி.பி. 1168
உயரம்	—12.5 மீட்டர்

இக்கோயிலிலுள்ள 12 கோபுரங்களிலும், காலத்தால் முதலிடம் பெறும் கோபுரம் இதுவே.

அம்மன் சந்நிதிக் கோபுரங்கள்

10. மேல ஆடி வீதிக் கோபுரம் (கடக கோபுரம்)

கட்டியவர்	—வீர தும்மாசி
காலம்	—கி.பி. 1570
நிலைகள்	—5
உயரம்	—64.6 அடி (20 மீட்டர்)
அடித்தளம்	—நீளம் 50 அடி, அகலம் 28.5 அடி
சுதைகள்	—228

11. அம்மன் சந்நிதி இரண்டாம் பிராகாரம்

கட்டியவர்	—வேம்பத்தூர் தாண்டவ நம்பி
நிலைகள்	—மூன்று
காலம்	—கி. பி. 1227—1228
உயரம்	—12.4 மீட்டர்

குடவறையில் வண்ண ஓவியங்களாகத் தீட்டப் பெற்றுள்ள மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகக் காட்சி

யும் எதிர்ப் பக்கத்தில் திருக்கல்யாணக் காட்சியும் காணத்தக்கன.

12. அம்மன் கோபுரம் ஏழு நிலை (கிழக்குப் பார்த்தது)

கட்டியவர் —காளத்திநாத முதலியார்

(தளவாய் அரியநாத முதலியாரின் குமாரர்)

கி. பி. 1570

உயரம் —117'0'' (37.8 மீட்டர்)

அடித்தளம் நீளம் 78'0''

அடித்தளம் அகலம் 38'0''

சுதைகள் எண் 730

சித்திர கோபுரம் என்ற பெயரும் உண்டு.

முற்றுப் பெறாத கோபுரங்கள்
(1) இராய கோபுரங்கள்

புது மண்டபத்திற்குக் கிழக்கே, எழுகடல் தெருவில் மிகப் பெரிய கோபுரம் ஒன்றைக் கட்ட கி. பி. 1654-இல் திருமலை நாயக்கர் அடித்தளம் போட்டார். அடித்தளத்தின் கிழக்குப் பகுதியில் அவருடைய உருவம் பொறிக்கப் பெற்றிருக்கிறது.

அடித்தளத்தின் நீளம் 58 மீட்டர். அகலம் 39 மீட்டர். அதாவது 174 அடிக்கு 107 அடி. நிலையின் உயரம் 19 மீட்டர் (60 அடி) வாயிலின் அகலம் 7 மீட்டர் (22 அடி).

இந்தக் கோபுரம் கட்டி முடிக்கப் பெற்றிருந்தால் தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தையும் திரு

வண்ணாமலைக் கோயில் இராச கோபுரத்தையும் இப்போது முற்றுப்பெற்றுவரும் ஸ்ரீரங்கம் கோயில் இராச கோபுரத்தையும் விஞ்சிய உயரத்தில் அமைந் திருக்கும்.

விட்ட வாசல்

சுவாமி சந்நிதிக்கு எதிரில் இராய கோபுரம் கட்ட ஏற்பாடு செய்யப்பெற்றது போல, அம்மன் சந்நிதிக்கு எதிரிலும் ஒரு இராசகோபுரம் அமைக்க அடித்தளம் போடப்பட்டிருந்தது. நகரின் கோட்டைச் சுவர்கள் இடிக்கப்பட்டபோது இந்தத் தளத்தின் சில பகுதி களும் இடிபாடு அடைந்ததாகக் கூறப்படுகிறது.

6. புது மண்டபம்

சுவாமி சந்நிதிக்கும் இராய கோபுரத்துக்கும் இடையே அமைந்தது. நீளம் 180 அடி, அகலம் 120 அடி. பரப்பளவு அரை ஏக்கர், சுற்றளவு 1000அடி. நீண்ட சதுர வடிவில் அமைந்து 124 தூண்களைக் கொண்டது. மீனாட்சி அம்மன் கோயிலில் வசந்த விழாத் திருவிழாவுக்காகத் திருமலை நாயக்கர் கட்டிய இம்மண்டபம் சிற்பக் கலைக்கூடமாகத் திகழ்கிறது. இதன் அருமையை உணர்ந்த ஆங்கிலேயர் இங்குள்ள சில தூண்களைச் செம்பால் பிரதி செய்து தங்கள் நாட்டில் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்து ஆஷ் மோலியன் அருங்காட்சிக் கூடத்தில் வைத்திருக்கின்றனர்.

புது மண்டபத்தின் மேற்கு வாயிலில் திருமலை நாயக்கர் குதிரைமீது அமர்ந்து போர் வீரராகக் காட்சி தருகிறார். வேலைப்பாடு சிறப்பாக அமைந்திருக்கிறது.

இம்மண்டபத்திற்குள் கீழே ஆவணி மூல வீதியிலிருந்து நுழைந்தால் வரிசையாகப் பின்வரும் சிற்பங்களைப் பார்க்கிறோம்.

1. ஏகபாத மூர்த்தி.

2. யாளிமீது இருக்கும் இரு வீரர்கள்.

3. குதிரைமீது இருக்கும் இரு வீரர்கள்.

4. கஜ சம்ஹாரர்.

இச்சிற்பங்களை அடுத்து உட்பகுதியில் காணப் படும் சிற்பங்கள்:

1. தடாதகை (மீனாட்சி)யின் திக் விஜயக் காட்சி.

2. மீனாட்சி அம்மனின் திக் விஜயத்தை எதிர் நோக்கி நிற்கும் சிவன்.

3. பன்றிக் குட்டிகளுக்கு இறைவன் பால் கொடுத்தல்.

4. சந்திரன்.

5. சூரியன்.

6. மான்குட்டிக்கு இறைவன் புலிப்பால் கொடுத்தல்.

7. இரு துவாரபாலகர்கள்.

மண்டபத்தின் மேற்புறமுள்ள வழியாக உள்ளே நுழைந்தால் வாயிலை அடுத்து 6 தூண்களில் பின் வரும் சிற்பங்களைக் காணலாம்.

1. திரிபுர சம்ஹாரர்.

2. குதிரை வீரர்கள் நால்வர்.

3. இராவணன் கைலாய மலையைப்பெயர்ப்பது

மண்டபத்தின் உட்பகுதியில்,பின்வரும் சிற்பங்கள் உள்ளன.

1. மீனாட்சி திருக்கல்யாணம்.
2. இந்திரன்.
3. பிரம்மா.
4. சங்கர நாராயணர்.
5. அர்த்த நாரீஸ்வரர்.
6. ஊர்த்துவ தாண்டவர்.
7. காளி.
8. கல்யானைக்குக் கரும்பு கொடுத்தல்.

இந்தச் சிற்பங்களில் சில கம்பத்தடி மண்டபத்தி லும் உள்ளன. கம்பத்தடி மண்டபத்தில் உள்ளவற்றை விடப் புது மண்டபத்தில் இருப்பவை காலத்தால் 200 ஆண்டுகள் முற்பட்டவை, அளவாலும் பெரியவை.

புது மண்டபத்தின் உட்பகுதியில் சலவைக்கல் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் தான் வசந்த விழாக் காலத்தில் இறை உருவங்கள் வைக்கப்படு கின்றன.

சலவைக்கல் மண்டபத்திற்கு முன்பாக நாயக்க மன்னர்களின் சிலைகள் இருவரிசைகளில் உள்ளன. முதல் வரிசையில் ஐந்து சிலைகளும் அவற்றின் எதிரில் ஐந்து சிலைகளும் உள்ளன. 10 சிலைகளில் உள்ள மன்னர்கள் பெயர்கள் பின்வருமாறு:

1. விஸ்வநாத நாயக்கர்.
2. முதலாம் கிருஷ்ணப்பர்.
3. முதலாம் வீரப்பர்.
4. இரண்டாம் கிருஷ்ணப்பர்.
5. இலிங்கம நாயக்கர்.
6. விஸ்வப்ப நாயக்கர்.

7. கஸ்தூரி நரங்கப்பர்.

8. முத்துக் கிருஷ்ணப்பர்.

9 முதலாம் முத்து வீரப்பர்.

10. திருமலை மன்னர்.

இவற்றுள் கஸ்தூரி ரங்கப்ப நாயக்கர் சிலை மிகச் சிறியது. காரணம், அவருடைய ஆட்சி எட்டு நாள்களுக்கு மட்டுமே நடைபெற்றது என்பதாகும்.

இந்தச் சிலைகளில் மன்னர்கள் அவரவர் பட்டத்தரசிகளுடன் காணப்படுகின்றனர். திருமலை நாயக்கருக்குப் பிறகு மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களின் உருவச்சிலைகளும் அவ்வக் காலத்தில் வைக்கப்பட்டிருந்தால் மதுரை நாயக்க மரபின் முழு வரலாற்றுக்கு இம் மண்டபம் ஆதாரமாக இருந்திருக்கும்.

அந்தக் காலத்து அரச குடும்பத்தின் இயல்புகளையும் உடை முதலியவற்றையும் இந்தச் சிற்பங்கள் சித்திரிக்கின்றன.

7. திருப்பணிகள்

(திருவாலவாயுடையார் திருப்பணி விவரம், திருப்பணி மாலை, சீதளப் புத்தகம் முதலியவற்றினின்றும் தொகுக்கப்பெற்றது)

எண்	ஆதியில் கட்டியவர்	காலம் கி. பி.	கட்டப் பெற்றவை
1.	குலசேகர பாண்டியன்	1168	சுவாமி கோயில் அர்த்தமண்டபம், மணி மண்டபம், மகாமண்டபம், அறுகால்பீடம்,சன்னிதி கோபுரம்,
		1175	மூலப்பிராகாரத் திருமதில் சூழப்பத்தி, நாயக்கர் கோயில், சூரியாதி சண்டேசுர தேவதையர், பிராகாரத் திருமதில் அம்மன் கோயில். கோட்டையகழ், கோட்டைக்கு வெளியில் கிழக்குத் திசையில் ஐயனார் கோயில்; தெற்கில் சத்தமாதர் கோயில், விநாயகர் கோயில்; மேற்கில் திருமால் கோயில்; வடக்கில் காளிகோயில்.
2.	மாறவர்மன் சுந்தர பாண்டியன்	1216 1238	சுவாமி சன்னிதி ஒன்பது நிலைக் கிழக்குக் கோபுரம், அம்மன் கோயில் சுந்தர பாண்டிய மண்டபம்.

		சுவாமி கோயில் சுந்தரமாறன் திருமதில், மேலை மாசி வீதியிலுள்ள இம்மையில் நன்மை தருவார் கோயில்.
3. ஆனந்தத் தாண்டவ நம்பி	1227 1228	அம்மன் சன்னதியிலுள்ள மூன்று நிலைக் கோபுரம்.
4. விக்கிரம பாண்டியன்	1253	எல்லாம் வல்ல சித்தர் கோயில்
	1268	சொக்கர் அட்டாலை மண்டபம்
5. பராக்கிரம பாண்டியன்	1315 1347	மேற்காடிவீதி ஒன்பது நிலைக் கோபுரம்.
6. விசுவப்பன்	1372	சுவாமி சன்னிதி ஐந்து நிலைக் கோபுரம் கிழக்கு.
7. மல்லப்பன்	1374	சுவாமி கோயில் இரண்டாம் பிராகார மேற்கு ஐந்து நிலைக்கோபுரம், அம்மன்கோயில் கொடிக்கம்பம்,
8. மாவலி வாணாதி ராயர்	1452	குலசேகரபாண்டியன் அமைத்த சுவாமி கோயில் ஆறுகால் பீடம், மகாமண்டபம் ஆகியவற்றின் திருப்பணி, சுவாமி சன்னிதியில் திருக்காவனப்பத்தி, அம்மன் சன்னிதியில் மகாமண்டபம், பள்ளியறை, முதற் பிராகாரம் முதலியன.
9. சின்னப்ப நாயக்கர்	1526	மடைப்பள்ளி அருகிலுள்ள சின்னீச்சுரர் கோயிலில் அக அணைகள்; புற அணைகள்; சனீசுரர்க்கு அருகில் உள்ள மண்டபநாயகம் என்னும் நூற்றுக் கால் மண்டபம்.

எண்	ஆதியில் கட்டியவர்	காலம் கி. பி.	கட்டப் பெற்றவை
10.	விசுவநாத நாயக்கர்	1559	சுவாமி கோயில் தங்க விமானத்திற்குப் பொன் பூசித் திருப்பணி செய்தார்.
11.	சிராமலைச் செவந்தி மூர்த்தி செட்டி	1559	ஒன்பது நிலைத் தெற்குக் கோபுரம், முக்குறுணி விநாயகர் முன்னுள்ள ஐந்து நிலைக்கோபுரம், சொக்கர் கோயில் சிகரத்திற்குப் பொற்குடம் முப்பத்திரண்டு, அம்மனுக்குப் பொன் விமானம், பிட்டுக் கோப்பில் திருவிளையாடல் மண்டபம்.
12.	செவ்வந்தி வேலப்பச் செட்டி	1560	வடக்காடி வீதியில் சுவாமி கோயில் ஐந்து நிலைக் கோபுரம்.
13.	பெருமாள்	1562	சுவாமி கோயில் நடுக்கோபுர மண்டபம், துவார பாலகர் பொற்றாமரை வடப்புற மண்டபமும் படிக்கட்டுகளும்.
14.	திரு அம்பலச்செட்டி	1562	அம்மன் சன்னிதி மூர்த்தி மண்டபம் (ஊஞ்சல் மண்டபம்).
15.	செட்டியப்ப நாயக்கர்	1563	பொற்றாமரைக்கு மேற்குக் கரையில் மூர்த்தி மண்டபத்திற்கு முன் மண்டபம்; அம்மன் கோயில் இரண்டாம் பிராகாரமும் சுற்று மண்டபமும்.

16	செல்லப்பெண் மாணிக்கம்	1563	வண்ணியடி நடராசர் மண்டபம், அன்னக்குழி மண்டபம்.
17.	கல்லூர்ச் செவ்வந்தி	1564	பொற்றாமரைக்கு மேற்குக்கரையில் செவ்வந்தீசுவரர் கோயில்.
18.	திம்மப்ப நாயக்கர்	1564	புருஷாமிருக மண்டபம் (சங்கிலி மண்டபத்திற்குத் தெற்கு மண்டபம்). கண்டர கண்டன் குறடு.
19.	திம்மு ராவுத்தர்	1564	எழுகடலில் தென்மேற்குக் கரை மண்டபம்.
20.	தீத்தியப்ப செட்டி	1565	சுவாமி சன்னிதியில் உட்பிராகார மேற்புற மண்டபம், அம்மன் சன்னிதி இரண்டாம் பிராகாரத் தென்புற மண்டபம்.
21.	கிருஷ்ணவீரப்ப நாயக்கர்	1564	சுவாமி கோயில் கொடிக்கம்ப மண்டபம், இரண்டாம் பிராகாரச் சுற்றுமண்டபம், ஆடிவீதி வடக்கு ஒன்பது நிலைக் கோபுரம், சம்பந்தர் கோயில் மண்டபம், வெள்ளியம்பலம், செவ்வீச்சுரம், திருமடைப்பள்ளி, மூர்த்தி அம்மன் மண்டபம் (உற்சவர்), சுவாமி கோயில் கொடிக்கம்பத்து முன்னர் வீரப்பமண்டபம், மல்லப்பன் நட்ட அம்மன் கோயில் கொடிக்கம்பத்திற்குப் பொன் பூசினார். முத்தளக்கும் கோபுரத்திற்குச் செங்கற் படை அம்மன் கோயில் இரண்டாம் பிராகாரத்தில் வடபுற, மேற்புற மண்டபங்கள்.

எண்	ஆதியில் கட்டியவர்	காலம் கி. பி.	கட்டப்பெற்றவை
22.	காளத்தியப்ப முதலியார்	1569	அரியீச்சுரர் சன்னிதி, அம்மன் சன்னிதி. எழுநிலைக் கோபுரம்.
23.	பட்டுத்திருமலை நாயக்கர்	1569	கங்காளநாதர் முன்னுள்ள மண்டபம் (சுவாமி கோயில் முதற்பிராகாரத்தில் வடபுறம்).
24.	அரியநாத முதலியார்	1569	சுவாமி கோயில் இரண்டாம் பிராகாரத் தென் வரிசையில் அறுபத்து மூவர் மண்டபம், அறச் சாலை மண்டபம், காளத்தீசுரம் கோயில், ஆயிரங்கால் மண்டபம், கீழமாசி வீதி அம்மன் தேர் மண்டபம்.
25.	வீரத்தும்மசி	1570	அம்மன் கோயில் இரண்டாம் பிராகார மேற்கு ஐந்து நிலைக் கோபுரம்,
26.	வீரப்பநாயக்கர்	1572—1595	சுவாமி கோயில் மூலத்தானக் கற்குறடு, சுவாமி கோயில் கோபுரவாயிற்கதவு, சுவாமி சன்னிதி தென்புற வாயிற்படிக்கட்டு, வெள்ளியம் பல நடராசர் கோயில் தளவரிசை, திருப்பள்ளி யறைப் படிகள், அம்மன் கோயில் தளவரிசை, சொக்கநாதர் மண்டபம்,

27. குப்பையாண்டி	1573	பொற்றாமரைக்குக் கிழக்கே மண்டபமும் திரு மதிற் படிகளும்.
28. கல்லூர்ச் சின்னச் செல்வந்தி	1574	செவ்வந்தீச்சுரச் சுற்றுமதில், சன்னிதி மண்டபம்
29. அப்பன் பிள்ளை	1578	பொற்றாமரைக்குத் தென்மேற்கில் விசுவநாதர் கோயிலும், பொற்றாமரைத் தென்புற மண்டபமும், படிகளும், திருமதிலும்.
30. திருநோக்கழகியார்	1584	ஆடிவீதிப் பெரிய திருமதில்கள்.
31. விருப்பணன்	1588	சுவாமி கோயில் இரண்டாம் பிராகாரத் திருநாண் மண்டபம் என வழங்கும் நிருதி மூலை மண்டபம்.
32. விசுவப்ப நாயக்கர்	1600	சுவாமி சன்னிதி கீழைக்கோபுரத்திற்கு வடமேற்கு விசுவீச்சுரம் என்னும் கோயில் (தற்போதில்லை)
33. முத்துவீரப்ப நாயக்கர்	1611	சுவாமிகோயில் ஆயிரங்கால் மண்டபத்திற்குத் தென்புறம் கீழ் மேலாக உள்ள வீரவசந்த மண்டபம்.
34. குஞ்சமழகிரி நாயக்கர்	1611	சுவாமி கோயில் முதற்பிராகாரத்தில் மேற்புறம், வடபுறம், தளவரிசை.
35. கடந்தை முதலியார்	1613	அம்மன் சன்னிதியில் முதலிப்பிள்ளை மண்டபம்.

எண்	ஆதியில் கட்டியவர்	காலம் கி. பி.	கட்டப்பெற்றவை
36.	திருமலை நாயக்கர்	1623	புது மண்டபம், மாரியம்மன் தெப்பக்குளம்.
		1659	அம்மன், சுவாமி கொடிக்கம்பங்கட்குப் பொன் பூசினார். அம்மன், சுவாமி கோயில்களில் செப்பாற் செய்த துவாரபாலகர்களை அமைத்தார். சுவாமிசன்னிதியில் இராயகோபுரம் கட்டினார். கோயில் முழுவதும் செப்பஞ்செய்து திருப்பணி செய்தார்.
37.	உருத்திராபதியம்மாள் தோளியம்மாள்	1623—1659	அம்மன் சன்னிதியில் அட்ட சக்தி மண்டபம்
38.	அபிசேக பண்டாரம்	1623	சுவாமிகோயில் இரண்டாம் பிராகாரத்தில் தெற்கு வடக்கு, மேற்குப் பிராகார மண்டபங்கள் கிளிக்கூட்டு மண்டபம்(சங்கிலி மண்டபம்)
39.	அச்சராயன்	1635	அம்மன் சன்னிதியில் நகரா மண்டபம்.
40.	பேச்சியக்காள் (பிட்டுச் சொக்குப் பண்டாரம் மூலம்)	1688	சுவாமி சன்னிதிக்கருகில் திருக்கல்யாண மண்டபத்திற்கு வடபுறமுள்ள இருபத்தெட்டுக் கால் மண்டபம் (பேச்சியக்காள் மண்டபம்)

41.	இராணி மங்கம்மாள்	1689—1706	ஆடிவீதிச்சுற்று மண்டபங்கள்
42.	விசயரெங்க சொக்கநாத நாயக்கர்	1706 1732	திருக்கல்யாணமண்டபம், பள்ளியறைக்கு முன்னுள்ள சிங்கார அறை
43.	சமூகம் மீனாட்சி நாயக்கர்	1708	அம்மன் சன்னிதியில் எழுநிலைக் கோபுரத்திற்கும் அட்டசத்தி மண்டபத்திற்கும் இடையிலுள்ள பெரிய மண்டபம்
44.	தும்மச்சி நாயக்கர்	1758	ஆடிவீதி நிருதி மூலை மண்டபம்
45.	ஆறுமுத்த முதலியார்	1760	ஆடிவீதி அக்னி மூலை மண்டபம்
46.	அருணாசல முதலியார்	1768	திருவாப்புடையார் கோயில் விக்கிரகங்கள் அமைத்துக் கும்பாபிடேகம் செய்தார்.
47.	வேங்கடேசுவர முதலியார்	1772	ஆடிவீதி ஈசானமூலை தட்டுச்சுற்றுப் பதினாறு கால் மண்டபம்.
48.	மருதப்ப சேர்வைக்காரர்	1795	சேர்வைக்காரர் மண்டபம் (திருக்கல்யாண மண்டபத்திற்கெதிரில்)
49.	சின்னியான்		கிளிக்கூட்டிற்கு வடபுறத்தில் மடைப்பள்ளிக்கு எதிரிலுள்ள மண்டபம்.
50.	செவ்வந்தியாண்டி செட்டியார்		ஏழுகடலுக்குத் தென்பால் மண்டபம்.

எண்	ஆதியில் கட்டியவர்	காலம் கி. பி.	கட்டப்பெற்றவை
51.	நல்லபெண்		சுவாமி சன்னிதியில் வடக்குமுகமாகத் திருவாயி லின் உட்புறம் நந்தீசுவரர் பிரதிட்டை
52.	கம்பலராயர்		சுவாமி கோயில் முதல் பிராகாரத்தில் கருப்பகிருக விமானத்தோடு சேர்ந்த தட்சிணாமூர்த்தி மண்டபம், மாலடி கண்டறியாத சிவலிங்க மண்டபம், துர்க்கை மண்டபம் முதலியன.
53.	கம்பலராசி		சுவாமி சன்னிதியில் நான்குகால் நந்தி மண்டபம்
54.	சங்கரநாகராசன்		திருநோக்கழகியார் செய்த ஆடி வீதிச் சுற்று மதிலைப் புதுப்பித்தார்.
55.	கிருஷ்ணப்ப நாயக்கர்		அம்மன் சன்னிதியில் குமாரருக்குக் கோயில் கட்டி பிரதிட்டை செய்தார்.
56	இராமப்ப நாயக்கர்		மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு வடமேற்கு மூலை பதினாறுகால் மண்டபம்.
57.	அனந்தாழ்வான்ஜயன்	1975	கீழ மாசிவீதியில் தேர் நிலை மண்டபம், சுவாமி சன்னிதியில் பலிபீடம்.

58.	வீரராகவன்	முத்தளக்கும் கோபுரத்திற்கு வண்ணம் பூசினார்.
59.	நாகு செட்டியாரும் அவர் மாப்பிள்ளை பெத்தப்ப செட்டியாரும்	சுவாமி கோயில் இரண்டாவது பிராகாரச் சுற்றெல்லாம் தளவரிசை.
60.	பாப்பு செட்டியார்	அம்மன் தேர்நிலையும், அறுபத்து மூவருடன் ஐம்பத்தொரு சிவலிங்கமும், சுவாமி கோயிலில் முதற் பிராகாரத்து வட்புறத்தை அமைத்தார்.
61.	பாப்பெல்லப்ப செட்டி	அம்மன் கோயில் தளவரிசை
62.	நாராணப்பன்	ஆடி வீதியில் அக்கினி மூலைமண்டபம்.
63.	கோனேரி நாரணன்	வாகன அறை.

1877-இல் நடைபெற்ற குடமுழுக்கு

(டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்)

சென்ற ஈசுவர வருஷம் (1877) மதுரையில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரருக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அமராவதி புதூர் வயிநாகரம் குடும்பத்தினர் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவிட்டுத் திருப்பணி செய்வித்தார்கள். கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மதுரைக்கு அக்காலத்தில் வந்த ஜனக்கூட்டம் கணக்கில் அடங்காது. காசிமுதல் கன்னியாகுமரி வரையிலுள்ள இடங்களிலிருந்து லக்ஷக்கணக்கானவர்கள் வந்திருந்தனர். திருவாவடுதுறை யாதீனத்தின் தலைவராக இருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் தனவைசியர்களுடைய அழைப்பிற்கு இணங்கித் தம்முடைய பரிவாரங்களுடன் வந்திருந்தார். அவர்களோடு வந்தவர்கள் 500 பேர்களுக்கு மேல் இருக்கும். திருவாவடுதுறை யாதீனத்தில் அப்போது சின்னப்பட்டத்திலிருந்த ஸ்ரீ நமச்சிவாய தேசிகரும் கல்லிடைக் குறிச்சியிலிருந்து வந்திருந்தார். அக்காலத்தில் நான் சுப்பிரமணிய தேசிகரிடம் பாடம் கேட்டுக் கொண்டும், திருவாவடுதுறை மடத்தில் உள்ளவர்களுக்குத் தமிழ்ப்பாடஞ் சொல்லிக் கொண்டும் இருந்தேன். ஆதலின் நானும் தேசிகருடன் மதுரை சென்றிருந்தேன்.

தேவஸ்தான சபையைச் சேர்ந்த ஸ்ரீமான் வேங்கடசாமி நாயுடு என்பவர் வைகையாற்றங்கரையிலுள்ள தம்முடைய பங்களாவில் தேசிகருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் இடம் அமைத்துக் கொடுத்திருந்தார். பங்களாவைச் சுற்றி நெடுந்தூரம்

பந்தல் போட்டிருந்தார். அதன் மேல் மெத்தையிலும் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. ஒரு பெரிய சைவாதீனத்துத் தலைவரென்பதற்குஏற்றபடி சுப்பிரமணிய தேசிகருக்குச் சிறிதும் குறைவின்றி உபசாரங்கள் நடைபெற்று வந்தன.

நகரத்தில் எள் போட்டால் விழ இடமின்றி ஜனங்கள் நிறைந்திருந்தனர். அங்கங்கே சமராதனைகளும், மகேசுவர பூஜைகளும் செவ்வையாக நடைபெற்றன. கும்பாபிஷேக சமயத்தில் கோவிலுக்குள்ளே செல்ல யாவருக்கும் இடங்கிடைப்பது அரிதாயிற்று. ஆதலின் தக்கவர்களுக்கு மாத்திரம் சீட்டு அளித்து உள்ளே விட்டார்கள். சேலம் முதலிய இடங்களிலிருந்து வந்த மிட்டாதார்களும் வேறு பலரும் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடன் சொல்லித் தங்கள் தங்களுக்குரிய அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுக் கொண்டனர்.

அக்காலத்தில் மதுரையில் கலெக்டராக இருந்த க்ரோல் துரை என்பவர் (நகர சபை கமிஷனர்) மணி ஐயருடைய பெருமையை நன்கு அறிந்து அவரிடம் மிக்க அன்பு பாராட்டி வந்தார். மதுரைத் திருக்கோயிலைச் சுற்றியுள்ள மதிலுக்கு வெளியில் பல ஜனங்கள் குடிசைகள் கட்டிக் கொண்டிருந்தனர். சிலருடைய வீடுகளும் இருந்தன. அவர்களால் பல வகை அசுத்தங்களும் உண்டாயின. அக்கோயிற் கும்பாபிஷேகம் செய்வித்த அமராவதி புதூர் வயிநாகரம் குடும்பத்தைச் சேர்ந்த நால்வருள் ஒருவராகிய வெங்கடாசலஞ்செட்டியார் அது கண்டு மனம் வருந்தினார். நிவர்த்தி பண்ணுவதற்கு முயன்று பார்த்தார். அவரால் இயலவில்லை. மணி ஐயர் மிக்க

இரக்கமும் அன்பும் உடையவரென்பதை அறிந்து அவரிடம் சென்று, ''திருமதில் சிவபெருமான் வடிவ மாயிற்றே! அதைச்சுற்றி ஜனங்கள் அசுத்தம் செய்கி றார்களே! இதைக் காண எனக்கு மனம் பொறுக்க வில்லை. நீங்கள் இதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும்'' என்று முறையிட்டு வந்தார்.

மணி ஐயர் அவர் கூறுவதன் உண்மையையும் அவருடைய சிவபக்தியையும் உணர்ந்தார். உடனே க்ரோல் துரையினுடைய உதவியைப் பெற்று மதிற் புறத்தே இருந்தவர்களுக்கு வேறிடங்கள் வாங்கித் தந்தும் வீடு கட்டப் பணம் உதவியும் நிலத்துக்கு விலை தந்தும் அவர்களைத் திருப்தி செய்வித்தார். பின்னர் வசதியான இடங்களிலே அவர்களைக் குடியேற்றிப் பாதுகாத்தார். அப்பால் திருமதிலைச் சுற்றி நந்தவனம் அமைக்கச் செய்தார். அதைப் பாதுகாக்க அதைச் சுற்றி இரும்பு கிராதியால் ஒரு வேலி போடச் செய்தார். அன்றியும் உள்ளே கிணறு களை வெட்டுவித்துப் பூஞ்செடிகளுக்கு நீர் பாய்ச்சு வதற்குரிய ஏற்பாடுகளும் செய்வித்தார். அந்த நந்தவனம் இன்றும் சிறப்பாக விளங்குகின்றது. கோயிலும் நந்தவனமும் சேர்ந்துள்ள அமைப்பு ஒரு பெரிய புஷ்ப தோட்டத்தின் மத்தியில் அவ்வாலயம் இருப்பது போலத் தோன்றும். மணி ஐயர் உதவி யுடன் அமைத்த நந்தவனத்தைக் கண்டு சிவநேசச் செல்வர்கள் யாவரும் மனம் குளிர்ந்தார்கள். வெங்கடாசலம் செட்டியார் எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டு அவரை வாயார வாழ்த்தினார்.

—மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே.சாமிநாதையரவர்கள்

(நினைவு மஞ்சரி முதற்பாகம், மணி ஐயர் பற்றி எழுதியுள்ள 9-வது கட்டுரையில் 1957-ம் ஆண்டில் வெளிவந்த நான்காம் பதிப்பில் பக்கம் 63, 64, 65, 72, 73 ஸ்ரீ தியாகராச விலாஸ் வெளியீடு, திருவல்லிக்கேணி, சென்னை.)

20-ஆம் நூற்றாண்டில் இக்கோயில் குடமுழுக்குகள்

மீனாட்சி கோவிலில் நிர்வாக அதிகாரியாக முதன்முதல் நியமனம் செய்யப்பட்ட தேவகோட்டை முத்து கரு. வெ. அழகப்ப செட்டியார் சில திருப்பணி கள் செய்து 1-7-1923இல் குடமுழுக்கு விழா நடத்தி னார் (ருத்ரோத்காரி, ஆணி 17)

திரு. பி.டி. இராசன் தலைமையில் அமைந்ததிருப் பணிக்குழு 1960 முதல் நான்கு ஆண்டுகளுக்குக்கோவி லின் பல பகுதிகளையும் அவற்றின் சிற்பங்களையும் பழுது பார்த்தல், புதுப்பித்தல், கோபுரங்களுக்கு வண்ணம் தீட்டுதல் முதலிய பணிகள் கொண்டது. மங்கையர்க்கரசி மண்டபம் புதிதாக அமைக்கப் பெற்றது. குடமுழுக்கு விழா 28-8-1963 இல் பெருஞ் சிறப்புடன் கொண்டாடப் பெற்றது. (சோபகிருது, ஆனி 14)

26-6-1974-ல் (ஆனந்த,ஆனி 12) மற்றொரு குட முழுக்கு விழா அறங்காவலர் குழுத் தலைவர் வெ. நாராயணன் செட்டியார் தலைமையில் இனிது நிகழ்ந்தது. வைரக்கிரீடம் செய்துவைக்கப்பெற்றது.

நந்தவனத்தைப் பாதுகாப்பதற்காக, திரு. நாரா யணன் செட்டியார் செலவில் நான்கு சித்திலர வீதி களிலும் மதில் சுவர் கட்டப்பெற்றது.

இப்போது செய்யப்பெறும் திருப்பணிகளும் வருங் காலத்தில் செய்யப்பெறுவனவும் பாண்டிய அரசர் களும் மன்னர் திருமலை நாயக்கரும்செய்ததிருப்பணி களின் தொடர்ச்சியாக இருக்கும்.

8. அன்றாடப் பூசைகளும் திருவிழாக்களும்

எட்டுக் காலங்களிலும் மீனாட்சி அம்மனுக்கும் சொக்கநாதருக்கும நாள்தோறும் நடத்தப்பெறும் நெய்வேத்தியம்

நேரம்	பூசை	நெய்வேத்தியம்
காலை 5 மணி	திருவனந்தல்	சர்க்கரை, ஏலக்காய் போட்டுப் பால், நெல் பொரி
,, 6 மணி	விளாப்பூசை	வெண்பொங்கல்
,, 7-30 மணி	கால சந்தி	புளியோதரை
,,10-30 மணி	திரிகாலசந்தி	சுத்தான்னம், பாசிப் பருப்பு
,,11-30 மணி	உச்சிக்காலம்	சுத்தான்னம், புளி யோதரை, சுண்டல், பாசிப்பருப்பு, தயிர்ச்சாதம்.
பிற்பகல் 5 மணி	சாயரட்சை	சுத்தான்னம், புளி யோதரை
இரவு 8 மணி	அர்த்தசாமம்	சம்பா அன்னம், பாயசம்
இரவு 10 மணி	பள்ளியறை	சுண்டல், சம்பா, அப்பம், நறுமணப் பொருள்கள் சேர்த்த பால்,

சித்திரைத் திருவிழா

கொடியேற்றம் முதல் திருக்கல்யாணம் வரை ஒவ்வொரு நாளும் உச்சிக் காலத்தில் அப்பம், வடை, பாயசம், இனிப்பு, பச்சடி, காய்கறிகளுடன் சம்பா, பள்ளயம்.

சித்திரைப் பரணி, ஐப்பசிப்பரணி

பிள்ளைக்கறி

ஆடிப்பூரம், ஐப்பசிப்பூரம்

புளியோதரை

ஆவணி மூலம்

பிட்டு

மார்கழி திருவாதிரை

நடராசப் பெருமானுக்கு அதிகாலையில் களி நெய்வேத்தியம்.

திருக்கார்த்திகை

கார்த்திகைப் பொரி, அப்பம்

வெள்ளி வாகனங்கள்

இந்தத் திருக்கோயிலில் உள்ள வெள்ளி வாகனங்கள் அழகான வேலைப்பாடுடையன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை வருமாறு :—

இறைவனுக்கு உரியன :	இறைவிக்கு உரியன :
1. கர்ப்பகிருகவிருட்சவாகனம்	1. சிம்மவாகனம்
2. கயிலாச பர்வத வாகனம்	2. காமதேனு வாகனம்
3. பூதவாகனம்	3. அன்னவாகனம்
4. நந்திகேசுவர வாகனம்	4. யாளி வாகனம்

5. யானை வாகனம்	5. புஷ்ப பல்லக்கு
6. குதிரை வாகனம் (தங்க முலாம் பூசியது)	6. குதிரை வாகனம் (தங்க முலாம் பூசியது)
7. ரிஷப வாகனம்	7. ரிஷப வாகனம்
8. தங்கச் சப்பரம்	8. யானை வாகனம் (ஆடித் திருவிழாவில் மட்டும்)
	9. கிளி வாகனம்
	10. தங்கச் சப்பரம்
	11. கோரதம்

பிரதோஷ ரிஷப வாகனத்தோடு கூடிய சப்பரம்:

வெள்ளி சிம்மாசனம்	1) பட்டாபிஷேகத்திற்கு 2) சுவாமிக்கு 3) அம்மனுக்கு
விநாயகருக்கு	மூஞ்சூறு வாகனம்
சுப்பிரமணியருக்கு	மயில் வாகனம்
நடராசருக்கு	கரியுடுத்த வாகனம்
சண்டிகேசுவரருக்கு	சப்பரம்
அதிகார நந்திக்கு	சப்பரம்
வெள்ளிக்குதிரை வாகனம்	மாணிக்கவாசகருக்கு

திருவிழாக்களில் இந்த வாகனங்களின் வனப்பு கண்டு இன்புறத்தக்கது.

வாரந்தோறும் நடைபெறும் விழாக்கள்

திங்கட்கிழமை

மீனாட்சி அம்மனுக்கு வைரக்கிரீடம் அணிவிக்கும் நிகழ்ச்சி ஒவ்வொரு திங்கட்கிழமையும் நடைபெறுகிறது.

ஏனைய நாட்களிலும் அன்பர்கள் செலவில் இதை ஏற்பாடு செய்யலாம்.

வெள்ளிக்கிழமை

மீனாட்சி அம்மனுக்குச் சிறப்பு நாள். ஏனைய நாட்களைவிட மிகுதியான மக்கள் இந்த சந்நிதியில் வெள்ளிக்கிழமைகளில் அம்மனை வழிபடுகிறார்கள். அதனால் அன்று அர்த்தசாம பூசையும் பள்ளியறைப் பூசையும் ஒரு மணி நேரம் கழித்து அதாவது இரவு 9 மணிக்கும் இரவு 11 மணிக்கும் நடைபெறும்.

இரவு 7 மணி முதல் 9 மணிவரை அர்த்த மண்டபத்திற்குள் ஒருவரும் செல்லஅனுமதி இல்லை.

வெள்ளிக்கிழமைகளில் மற்றொரு சிறப்பு. சுக்கிர வார அம்மனின் ஊஞ்சல் மண்டபத்துக்கு வரும் நிகழ்ச்சி. நலுங்குப் பாட்டுப் பாடிதீபாராதனைநடைபெற்ற பின், இந்த அம்மன் சேர்க்கைக்குத் திரும்பும்

திங்கள்தோறும் நடைபெறுவன

அமாவாசையன்று சித்திவிநாயகருக்குச் சிறப்பு பூசை

முழுநிலா நாளில் (பவுர்ணமி) சந்திரசேகரர் புறப்பாடு.

பிரதோஷம்

பிரதோஷ காலத்தில் நஞ்சின் வேகத்தைத் தணிக்க நந்திக்குப் பூசையும் இறைவனுக்கு சிறப்புத் திரவியங்களைக் கொண்டு அபிஷேகமும் செய்விக்கப் படுகின்றன.

அன்று மாலை 5 மணிக்கு சுவாமி சந்நிதியிலுள்ள ஆறுகால் மண்டபத்திலிருந்து பிரதோஷ ரிஷப வாகனத்தில் பிரதோஷ சுவாமி (வெள்ளியாலான உற்சவர்) புறப்பாடு நடைபெறும்.

அலங்கரிக்கப்பெற்ற இரு யானைகள் முன்செல்ல, சுவாமி முதல் பிராகாரத்தைச் சுற்றிவந்து கம்பத்தடி மண்டபத்தை அடைந்து இரண்டாம் பிராகாரத்தை மூன்று சுற்றுகள் சுற்றி சேர்க்கைக்கு வரும்.

பிரதோஷத்தன்று சிவபெருமானை வழிபட்டால் ஓராண்டு முழுவதும் வழிபட்ட பலன் கிடைக்கும் என்பதும், சனிப் பிரதோஷத்தன்று வழிபட்டால் ஐந்து ஆண்டுகளுக்கு நாள்தோறும் வழிபட்ட பலன் உண்டு என்பதும் சிவனடியார்களின் நம்பிக்கை.

எனவே பிரதோஷ நாட்களில் இங்கு பெருங் கூட்டம் கூடுகிறது.

பட்டாபிஷேக விழாக்கள்

சித்திரைத் திருவிழாவின் எட்டாம் நாளில் மீனாட்சி அம்மனுக்கும் ஆவணி மூலத்திருவிழாவின் ஏழாம் நாளில் சோமசுந்தரப் பெருமானுக்கும் பட்டாபிஷேகம் அவரவர் சந்நிதியிலுள்ள ஆறுகால் பீடங்களில் அன்றிரவு நடைபெறுகிறது.

மீனாட்சி அம்மனுக்குக் கிரீடம் சாற்றி கையில் செங்கோல் கொடுத்த பின், இத்திருக்கோயில் அறங் காவலர் குழுத் தலைவர் (அல்லது தக்கார்)அம்மனிட மிருந்து மேற்படி செங்கோலைப் பெற்று அனைத்து மரியாதைகளுடன் அம்மன் கோயிலிலிருந்து புறப்

பட்டு சுவாமி கோயில் இரண்டாம் பிராகாரம் வழியாக வலமாகக் கொண்டுவந்து மீண்டும் மீனாட்சி அம்மனின் திருக்கரத்தில் சேர்ப்பிப்பார்.

சுந்தரேசுவர்க்கு நடைபெறும் பட்டாபிஷேகத்திலும் இதே நடைமுறை கடைப்பிடிக்கப்படுகிறது.

இக்காட்சிகளைக் கண்டு களித்து இறை அருள் பெற, திரளான மக்கள் கூடுவர்.

பட்டாபிஷேக விழாக்களில் திருமலை நாயக்கர் ஆட்சியிலும் அவருக்குப் பிறகு மற்ற நாயக்கர்களாலும் கடைப்பிடிக்கப்பட்ட முறையைப் பின்பற்றி நடத்தப்படுகின்றன. அரசர்களுக்குப் பதிலாக, அறங்காவலர் குழுத்தலைவர் அந்த இடத்தை நிரப்புகிறார்.

சித்திரைத் திருவிழாவின்போது எட்டாம் நாளில் மீனாட்சியம்மனுக்கு முடிசூட்டு விழா நடைபெறுகிறது. மறுநாள் திக்விஜயம் என்ற விழாவும் பத்தாம் நாளில் மீனாட்சி சுந்தரேசுவரர் திருமண விழாவும் நிகழ்கின்றன.

இவற்றுக்கு அடிப்படை, புராணங்களில் மதுரை தல வரலாற்றாக கூறப்பெற்றுள்ள பின்வரும் குறிப்புகள் :

1. பார்வதியின் அவதாரமாக, மலயத்துவச பாண்டியனுக்கும் காஞ்சன மாலைக்கும், தடாதகை பிறந்தாள்.

2. தடாதகை முடி சூட்டப்பெற்று, மீனாட்சியாக தன் திக்விஜயத்தை மேற்கொண்டாள்.

3. அப்போது கயிலாயம்வரை சென்று வெற்றிவாகை சூடினாள்.

4. கயிலாயத்தில் சிவபெருமானைக் கண்டதும் மீனாட்சி அவரையே தம் கணவராக ஏற்று மணந்தாள்.

5. பின்னர் சிவபெருமான் மதுரைக்கு வந்து பாண்டிய நாட்டில் ஆட்சி புரிந்தார்.

6. தங்கள் மகன் உக்கிர பாண்டியனுக்கு (முருகனுக்கு) முடிசூட்டிய பிறகு இன்றைய கோயிலில் வீற்றிருந்து அங்கயற்கண்ணியும்ஆலவாய் அண்ணலும் மக்களுக்கு அருள் வழங்கி வருகின்றனர்.

முடிசூட்டு விழாவன்று (பட்டாபிஷேகத்தன்று) மீனாட்சியம்மனுக்கு வேப்பம்பூ மாலை அணிவிக்கப் பெறும் முடிசூட்டப்பெற்ற நிகழ்ச்சியில்இறுதிக்கட்டமாக இறைவனுடன் அன்னை மீனாட்சி வீதி உலா வருவார்.

யானை, ஒட்டகம், டங்கா மாடு, குடை, சுருட்டிகள், மேளம் முதலியன முன் செல்ல வீதி உலா நடைபெறுவது எல்லாக் கோயில்களிலும் எல்லாத் திருவிழாக்களிலும் மரபு.

ஆனால், மூடிசூட்டு விழா அன்றும் மறுநாளும் நடைபெறும் வீதி உலாக்களில் மேற்கண்ட சிறப்புகள் சுவாமி திருஉருவத்திற்கு முன் செல்லுவது போல, அம்மனின் திருஉருவத்திற்கு முன்னும் செல்லுவது வழக்கம். வீதி உலா ஒன்றேயாயினும் இரண்டு சிறப்புகள் இறைவனுக்கும் இறைவிக்கும் தனித்தனியே நடைபெறுவது இந்தக் கோயிலுக்கு மட்டும் உரிய தனிச் சிறப்பு.

திக்விஜயத்தன்று மாலையில் சுவாமி, அம்மன் புறப்பாடானதும் சுவாமிமட்டும் தனியாக ஈசான்ய

திக்கில், வடக்கு மாசி வீதி, கீழ மாசி வீதிகள் சந்திப்பில் உள்ள ஒரு மண்டபத்தில் தங்குவார்.

மீனாட்சி அம்மன் புறப்பாடாகி கிழக்கிலிருந்து (1) இந்திரன், (2) அக்னி, (3) எமன், (4) நீருருது, (5) வருணன், (6) வாயு, (7) குபேரன், (8) ஈசான்யன் ஆகிய எட்டுத் திசைகளிலும் போரிட்டு அந்தந்தத் திக்குகளுக்கு உரிய நாயகர்களை வென்று தீபாரா தனை பெறுவார்.

கடைசியாக சுந்தரேசுவருடன் போரிடுகிறார். அப்போது மீனாட்சி அம்மனின் மூன்றாவது தனம் மறைந்து, தன் நாயகன் இவனே என்பதை உணர்ந்து போரை நிறுத்திக் கொள்கிறாள். மறுநாள்திருமணம் நடத்த நிச்சயம் செய்யப்பெறுகிறது. நிச்சயதார்த்த சீர் என்று ஒரு கட்டளையை திருமணி நாயக்கர் ஏற்படுத்தியிருக்கிறார்.

அம்மனுக்கும் சுவாமிக்கும் பட்டாபிஷேக விழாக் களில், பட்டாபிஷேகக் கிரீடம் சாத்தப் பெறுகிறது. விஜய நகரப் பேரரசரான அப்பாஜி நாயர் இதை வழங்கியதாகத் தெரிகிறது. இதன் எடை 134 தோலா. 920 மாணிக்கமும் 78 பச்சை வைரமும் 11 மரகதமும் 7 நீலமும் 8கோமேதகமும் இதில் பதிக்கப் பெற்றுள்ளன.

முதலில் இரத்தினங்களை வரிசைப்படுத்தி அமைத்து, பின்னர் இரத்தினங்களின் இடைவெளியில் சொக்கத் தங்கத்தைச் சிறிது சிறிதாக உள்ளே செலுத்தி, இறுகச் செய்து இந்தக் கிரீடம் செய்யப் பெற்றுள்ளது.

பட்டாபிஷேகக் கிரீடம் சாத்திய பிறகும், திருமலை நாயக்க மன்னர் செய்துகொடுத்த இரத்தினச்செங்கோல் அம்மன் பட்டாபிஷேகத்தன்று அம்மன் கையிலும், சுவாமி பட்டாபிஷேகத்தன்று சுவாமி கையிலும் அணிவிக்கப்பெறும்.

இந்தச் செங்கோல் ஏறத்தாழ 68 தோலா எடையுடையது. இதில் 761 சிவப்புக் கற்களும் 74 வைடூரியங்களும் 21 பச்சை வைரங்களும் 269 மரகதமும் 44 முத்துக்களும் பொருத்தப்பட்டுள்ளன.

சைவ சமயத்தைத் திருஞானசம்பந்தர் நிலை நிறுத்திய வரலாறும் மதுரைத் திருவிழாக்களும்

இக்கோயிலில் நடைபெறும் (1) சித்திரைத் திருவிழா (2) ஆவணிமூலத் திருவிழா (3) கார்த்திகை விழா (4) தைத் தெப்ப விழா (5) மாசி மாதத்து மண்டல விழா ஆகியவற்றில் ஆறாம் திருநாளில் சமணரைக் கழுவேற்றிய நினைவாக ஒரு விழாக் கொண்டாடப்படுகிறது.

யானை மண்டபத்திற்கு அருகே இறைவன்—இறைவி திருமுன் பாண்டியன் நெடுமாறன், மங்கையர்க்கரசியார், திருஞான சம்பந்தர் ஆகியோரை எழுந்தருளச் செய்து, சமணத்தைப் பாண்டி நாட்டிலிருந்து அறவே ஒழித்து சைவ சமயமும் திருநீறும் உருத்திராக்கமும் நிலை பெற்ற வரலாற்றை ஓதுவார் பாட்டும் கதையுமாகச் சொல்லுவார். பிறகு ஞானப்பால் வழங்கப் பெறும்.

சைவ அன்பர்கள், விழாவுக்கு வந்திருப்போருக்கு அன்பளிப்பாகத் திருநீற்றுப்பை கொடுப்பது மரபு.

திருஞானசம்பந்தர் திருவிழா

வைகாசி அனுஷ நட்சத்திரத்தில் தொடங்கி மூல நட்சத்திரம் வரை மூன்று நாட்கள் இக்கோயிலில் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு விழா எடுக்கப் பெறுகிறது.

மூன்றாம் நாளில் திருஞானசம்பந்தர் மடத்தின் பிரதிநிதி ஒருவர் முன்னிலையில் மீனாட்சி அம்மனும், சொக்கநாதரும் திருக்கல்யாண மண்டபத்தில் ஞான சம்பந்தருக்குக் காட்சி கொடுப்பார்கள்.

பிறகு சம்பந்தர் அவர் மடத்துக்கு எழுந்தருளி அங்கு தீபாராதனை நடந்த பிறகு சேர்க்கைக்கு வருவார்.

அன்றிரவு சம்பந்தர் வெள்ளி வாகனத்தில் நான்கு ஆவணி மூல வீதிகளையும் வலம் வருவார்.

சித்திரை விழா

இது மீனாட்சி அம்மனின் திருக்கல்யாண விழா ஆகும். தமிழ் நாட்டில் மிகப்பெரிய திருவிழாவாக இது கருதப்பெறுகிறது.

திருமலை நாயக்கர் காலத்திற்குமுன் இவ்விழா மாசி மாதத்தில் கொண்டாடப் பெற்றது. சித்திரை மாத முழுநிலா நாளில் கள்ளழகர் விழா வைகை யாற்றங்கரையில் தேனூரில் நடைபெற்று வந்தது. இந்த இரண்டையும் இணைத்து, சித்திரைத் திங்களில் மதுரை மாநகரத்து வைகைக் கரைக்கு அழகர் எழுந் தருள்வதற்கான ஏற்பாட்டைத் திருமலை நாயக்கர் செய்தார்.

இவ்வாறே இக்கோயிலுடன் மதுரையின் சுற்றுப் புறத்திலுள்ள பிற தலங்களும் நெடுங்காலமாகத் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

மீனாட்சி அம்மனின் திருக்கல்யாணம் கோயிலுக்குள் உள்ளதும் கலைநயம் மிகுந்ததுமான திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெற்று வந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்விழாவைக் கண்டின்புற வசதியாக (1980ம் ஆண்டு முதல்) வடக்கு ஆடி வீதியில் திருமண விழாவைக் கொண்டாடப் புதிய திருமண மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது.

சித்திரைத் திருவிழாவில், சோமசுந்தரருக்கு வாசுவாலைக் கிரீடம் அணிவிக்கப் பெறும், இது எடுப்பாக அமைந்தது. முன் பக்கமும் பின்பக்கமும் முறையே மூன்று கீழ்மேல் வரிசையாகப் பெரிய மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. எடை 136 தோலா. இது 247 கெம்பு, 439 முத்து, 39 மரகதம், 300 பவளம், 27 பச்சை வைரம், 6 நீலம், 2 கோமேதகம், 241 பவளம் பதித்தது. இது முற்காலப் பாண்டியர் வழங்கிய கிரீடம் என்பர்.

திருக்கல்யாணத்தன்று, மணமேடையில் முத்து, வைரம், சிவப்பு, மரகதங்கள் கொண்ட முத்து மேற்கட்டி கட்டப்படுகிறது. இதன் நான்கு மூலைகளிலும் இருதலை யானை கிளி, புலி, பறவைகள், தாமரைப் பூ, சூரியகாந்தி பூ என்பவற்றின் உருவங்கள் 71,755 முத்துக்களால் கண்கவரும் வகையில் அமைக்கப் பெற்றுள்ளன.

வைகாசி விசாக விழா

வைகாசி விசாகத்துடன் முடிவடையும் 10 நாள் இளவேனில் விழா புது மண்டபத்தில் நடைபெறு கிறது. திருமலை நாயக்கர் இந்த விழாவைப் புதிதாக உண்டாக்கி புது மண்டபம் கட்டி அதன் இரு புறங் களிலும் நீராழி மண்டபமும் கிழக்கே நீர்த்தொட்டி யும் அமைத்தார்.

ஆனி விழா

மூல நட்சத்திரத்துடன் முடிவடையும் 10 நாட் களுக்கு ஊஞ்சல் விழா நடைபெறுகிறது.

ஆடி விழா

கேட்டை நட்சத்திரத்துடன் முடிவடையும் 10 நாட்களுக்கு முளைக் கொட்டு விழா ஆடி வீதியில் கொண்டாடப்படுகிறது, தங்கக் குதிரை வாகனம், புஷ்ப விமானம், சைத்யோபசாரம் ஆகிய காட்சிகள் சிறப்பானவை, ஆடித் திருவிழாவின் போது உற்சவ அம்மனுக்குத் தங்கத்தாலான அபயஹஸ்தமும் வரத ஹஸ்தமும் அணிவிக்கப் பெறுகின்றன.

ஆவணி மூலம்

சித்திரைத் திருவிழாவுக்கு அடுத்தபடியாக மதுரைக்குப் புகழ்தரும் இந்த விழா, அவிட்ட நட்சத்திரத்தன்று முடிவடைகிறது. ஐந்து கொடிகள் ஏற்றி இவ்விழாவைத் தொடங்கிவைப்பது வழக்கம்.

சோமசுந்தரப் பெருமானே கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்த நிகழ்ச்சியால் இந்த விழா சிறப்புமிக்கது.

ஒவ்வொரு நாளும் திருவிளையாடல் தத்துவங்களும் அவற்றின் பெருமையும் பாட்டாகவும் கதையாகவும் மக்களுக்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

கருங்குருவிக்கு அருளியது, நாரைக்கு அருளியது, மாணிக்கம் விற்று அருளியது, தருமிக்குப் பொற்கிழி அருளியது, உலவாக் கோட்டை அருளியது, பக்த பாணனுக்கு உதவி அருளியது, வளையல் விற்றது, நரி பரியானது, மண் சுமந்து பிட்டு வாணிச்சிக்கு அருளியது, விறகு விற்று அருளியது ஆகிய நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம்பெற்று மக்களை மகிழ்வித்து இறைப்பற்றை வளர்க்க உதவுகின்றன.

இறைவனுக்குச் சுருமாடு, மண்வெட்டி, மண்சுமக்கும் கூடை, பிரம்பு (ஒரு மீட்டர் நீளமுள்ள செங்கோல்) ஆகிய யாவும் தங்கத்தால் ஆனவை உண்டு. இத்திருவிழாவில் அவற்றைப் பயன்படுத்துவது மரபு.

விழாச்சிறப்பை அறிந்துகொள்ள உதவியாக ஒரு நிகழ்ச்சியைக் கூறுவோம்.

ஆவணி மூல விழாவில் ஏழாம் நாளில் சோமசுந்தரக் கடவுள் வளையல் விற்ற திருவிளையாடல் கொண்டாடப் பெறுகிறது. கோயில் மண்டபங்களில் வளையல் வியாபாரம் செய்யும் பாலிஜா நாயுடு சமூகத்தார் வாழும் பகுதிக்குக் கோயிலிலிருந்து யானையும், மேளவாத்தியங்களும் அனுப்பப் பெறும். இச்சமூகத்து மிராசுதாரருக்குக் காப்புக்கட்டி யானை மீது அவர் அமர்த்தப்பெறுவர். கோயில் மரியாதைகள் பெற்று அவர் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் உள்ள அனைத்துக் கடவுளருக்குமாக ஓராயிரத்துக்கு

மேற்பட்ட வளையல்களைச் சாத்துப்படி செய்வார். ஆவணி மூலத்தன்று 18 வகை அபிஷேகம் (மகா ருத்ராபிஷேகம்) மூலவரான சொக்கருக்கு நடை பெறும்.

நவராத்திரி

திருமலை நாயக்கர் காலம்முதல், விசயநகரப் பேரரசில் நடைபெற்று வந்த முறையைப் பின்பற்றி, நவராத்திரித் திருவிழா கொண்டாடப்பெறுகிறது.

திருமலை நாயக்கர் எழில் வாய்ந்த தம் மகாலில் நவராத்திரி விழாவின் ஒன்பது இரவிலும், தம்மைச் சிறப்பாக அலங்கரித்துக் கொண்டு இரத்தின சிம்மாசனத்தில் அமர்வார்.

சித்திரைத் திருவிழாவின் எட்டாம் நாளில் மீனாட்சி அம்மனுக்கு முடிசூட்டு விழா நடத்தி அங்கிருந்து செங்கோல் பெற்று திருமலை நாயக்கர் தம்முடைய மகாலுக்குச் செங்கோல் ஏந்திச் செல்லுவார். செங்கோலை, அரியணையின்மேல் வைத்து வழிபட்டு மறுநாள் மகாலிலிருந்து அதைக் கோயிலுக்கு எடுத்துச் செல்வது வழக்கமாக இருந்தது. திருவாங்கூர் மஹாராஜாக்கள் பத்மனாப சுவாமியின் தாசர்களாக (அடிமைகளாக) இருந்து அந்த இறைவன் சார்பில் ஆட்சி நடத்தியதுபோல், திருமலை மன்னன் மீனாட்சி அம்மனின் பிரதிநிதியாக இருந்து நீதிநெறி தவறாது ஆண்டுவர விரும்பினான் என்பது கருத்து.

இரத்தின சிம்மாசனம் உள்ள மண்டபத்தில் மாலை நேரங்களில் பணியாளர்கள், திருமலை மன்ன

ருக்கு தீவர்த்தி வணக்கம் (Guard Of Honour With Illiumination) செலுத்தினர். பாளையக்காரர்கள், குறுநில மன்னர்கள், சேதுபதி முதலிய பலரும் இங்கு தான் திருமலை மன்னருக்குத் திறை செலுத்தினர். மதுரையில் இவ்விழா நிகழ்த்தப் பெறும் முறையை சாரதா நவராத்திரி என்பர்.

இவ்விழாவுக்குக் காப்புக் கட்டிக் கொள்ளும் பட்டரே 9 நாள்களிலும் திருவனந்தல், உச்சிக்காலம் முதலிய பூசைகளையும் செய்ய வேண்டும். இவ்வாறு ஆச்சாரியார் ரட்சாபந்தனம் செய்து கொண்டு திருவிழா நடத்தும் பழக்கம் வேறு எந்தத் திருக்கோயிலிலும் இல்லை என்று தெரிகிறது.

கைவினைக் கலைஞர்கள் இந்த விழாவால் ஏற்றம் பெறுகின்றனர்.

நாள்தோறும் இரவில் அம்மனுக்கு (மூலவருக்கு சிறப்பு அலங்காரமும் பூசையும், கொலு மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் உற்சவ அம்மனுக்கு இராஜ ராஜேசுவரி முதலிய வெவ்வேறு அலங்காரங்களும் உண்டு. மின் அலங்காரங்களும் இடைவிடாத இசை நிகழ்ச்சிகளும், திருவிழாவைப் பற்றிய தொடர் சொற்பொழிவுகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்த விழாவில் மக்கள் காட்டும் ஆர்வத்துக்கு ஈடும் இணையும் இல்லை என்பதைக் கடந்த ஈராண்டுகளில் இவ்விழாவைக் காணும் வாய்ப்பைப் பெற்றவர்கள் ஒருமுகமாகக் கூறுகின்றனர்.

நவராத்திரி முடிந்ததும் மீனாட்சி அம்மனுக்கு சாந்தாபிஷேகமும் நிகழும். தைலம் சாத்தி, புஷ்ப

அங்கி அணிந்து பஞ்சு உபசார தீபாராதனை நடைபெறும்.

நவராத்திரி ஒன்பது நாட்களிலும் மற்றும் திருவிழாக் காலங்களிலும் மீனாட்சி அம்மனுக்கு (மூலவருக்கு) முத்துச் செருக்கு, முத்து உச்சிக் கொண்டை ஆகியவை அணிவிக்கப்பெறுகின்றன. இந்த அலங்காரம் காணற்கு இனிய, அரிய காட்சியாகும்.

முத்துச் செருக்கின் எடை 162 தோலா. இதில் 4,921 முத்துக்களும், 841 சிவப்புக் கற்களும், 120 பச்சை வைரங்களும், 39 மரகதங்களும் பதிக்கப் பெற்றுள்ளன.

ஐப்பசி

இந்த மாதத்தில் மூன்று விழாக்கள் நடைபெறுகின்றன.

(1) **கோலாட்ட விழா:** மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழில் இடம் பெற்றுள்ள சப்பாணி, செங்கீரை, தால், ஊஞ்சல் பருவங்களைப் பற்றிய பாடல்களைக் கன்னிப் பெண்கள் கோலாட்டம் ஆடிக் கொண்டு பாடுவதை மையமாகக் கொண்ட விழா. 10 நாட்களும் சித்திரை வீதியில் மீனாட்சி அம்மன் புறப்பாடு உண்டு. புது மண்டபத்தில் கோலாட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும். சுக்ல சஷ்டியன்று விழா நிறைவடையும்.

(2) **பவித்ர விழா :** முழு நிலாவுடன் முடிவுபெறும் ஐந்து நாள் நிகழ்ச்சி. இறைவனின் விழாக்களிலும்

அன்றாடப் பூசைகளிலும் ஏற்படும் குறைகளை நீக்க உதவும் புனித விழா. இரண்டாம் பிராகாரத்தில் சந்திரசேகரர் வலம் வருவார்,

3) **கந்தர் சஷ்டி:** இரண்டாம் பிராகாரத்தில் முத்துக்குமரர் புறப்பாடு. சூரசம்மாரம் இக்கோயிலில் நடைபெறுவதில்லை.

கார்த்திகை

திருக்கார்த்திகை அன்று இத்திருக்கோயில் முழுவதிலும் லட்சதீபம் போடப்பெறுகிறது.

அன்பர் பலர் இந்தத் தீபத்துக்கு த் தேவையான சுத்தமான கடலை எண்ணெய், திரிநூல் முதலிய பொருள்களைக் காணிக்கையாக வழங்குகின்றனர்.

மணம் பெற விழையும் கன்னிப் பெண்களும் கணவனுடன் வாழும் மங்கல மடந்தையரும் கோயிலில் தீபம் ஏற்றி மங்கல வாழ்வு வாழ்வர்,

மார்கழி

மார்கழித் திங்கள் முழுவதும் காலை 4 மணிக்கே மக்கள் இந்தக் கோயிலில் 15 ஏக்கர் பரப்புக்கும் கூடி கோயில் சிறிது என்ற எண்ணத்தை உண்டாக்கி விடுவார்கள். திருவாதிரையோடு முடிவடையும் 10 நாள் எண்ணெய்க்காப்பு விழாவும் அதே 10 நாள்களில் காலையில் மாணிக்கவாசகப்பெருமானை எழுந்தருளச் செய்து திருவெம்பாவை இசை முழங்க செய்விக்கும் விழாவும் நடைபெறுகின்றன. இந்த விழாவின் தொடக்க நாளில் மீனாட்சி அம்மன் காலை 6 மணிக்குப் புது மண்டபத்திற்கு எழுந்தருளித் தைலக்காப்பு,

தீபாராதனை முடிந்தபிறகு சித்திரை வீதிகளில் வலம் வந்து கோயிலுக்குள் வந்து சேரும். ஒன்பதாம் நாளிலும் காலையில் புது மண்டபத்திற்கு எழுந்தருளி சாயரட்சையில் அபிஷேக தீபாராதனைகள் முடிந்து, கனக தண்டியலில் அலங்காரமாகி மாலையில் சித்திரை வீதியில் உலா நிகழும்.

மார்கழித் திங்கள் கிருஷ்ண பட்சம் (தேய்பிறை) அஷ்டமியன்று அஷ்டமி பிரதட்சண விழா நடைபெறு கிறது. அதிகாலையில் பஞ்சமூர்த்தி புறப்பாடுநிகழும் பரிவாரங்களுடன் இந்தக் கோயில் இறைவனும் இறைவியும் மதுரை மாநகரின் நான்கு வெளி வீதி களிலும் உலா வருவது ஓராண்டில் இந்த ஒரு நாளில் மட்டுமே.

தை

திருமலை நாயக்கர் உண்டாக்கிய தெப்பக்குளத் தில் தைப்பூசத்தன்று தெப்பத் திருவிழா நடைபெறு கிறது.

திருச்சியிலிருந்து தம் தலைநகரை அன்னை மீனாட்சி அருளால் மதுரைக்கு மாற்றிய திருமலை நாயக்கர், மதுரையில் தமக்கும் தம் பரம்பரை யினர்க்குமாக பெரியதொரு அரண்மனையைக் கட்டிக் கொள்ளவும் மதுரைக்கு அழகு கூட்டவும் முடிவு செய்தார். அவ்வாறு அவர் அமைத்துக் கொண்ட அரண்மனையில் நான்கில் ஒரு பகுதி மட்டுமே இப்போது எஞ்சியிருக்கிறது.

இன்று நாம் காண்பது போன்று நான்கு மடங்கு அளவுள்ள அரண்மனை உண்டாக்க, மண் வெட்டி

எடுத்த பள்ளம் வீணாகாது அதை அழகிய தெப்பக் குளமாக ஆக்கி அதன் நடுவே அழகிய வேலைப் பாடுடன் ஒரு மாரியம்மன் கோயிலை உண்டாக்கி னார். அருகேயுள்ள வைகை ஆற்றிலிருந்து நீர் வரத் துக்கு ஏற்பாடு செய்து ஒரு தெப்பத் திருவிழா நடை பெற வழி வகுத்தார். அவருடைய பிறந்த நாளான தைப்பூசத்தன்று இந்த விழா இன்றளவும் மதுரையில் பெருஞ்சிறப்புடன் கொண்டாடப்பெற்று வருகிறது.

இந்தத் தெப்பக்குளம் வெட்டியபோது கிடைத்த விநாயகரை முக்குறுணி விநாயகர் என்ற பெயரில் மீனாட்சியம்மன் கோயிலில் திருமலை நாயக்கர் பிரதிட்டை செய்வித்தார்.

பங்குனி

உத்தர நட்சத்திரத்தோடு முடிவடையும் 10 நாள் விழா. பத்தாம் நாளில் மீனாட்சி அம்மனும் சோமசுந்தரப் பெருமானும் வைகையில் வடகரையி லுள்ள திருவாப்புடையார் கோயிலுக்கு எழுந்தருளு வர். பாண்டிய மன்னர்கள் காலத்தில் பொன்னையர் ளுக்குக் காட்சியளிக்க இறைவனும் இறைவியரும் திருப்பூவனம் சென்று வந்தனராம். திருமலை நாயக்கர் அதை திருவாப்புடையார் கோயிலுக்கு மாற்றி அமைத்தார்.

9. தீர்த்தங்கள், சமூகப்பணிகள் முதலியன

(அ)தீர்த்தங்கள்

1. வைகை
2. பொற்றாமரை
3. ஏழு கடல்

ஏழு கடல்களின் நீரும் ஒவ்வொரு கிணற்றில் தேங்குமாறு அமைக்கப்பட்ட ஏழு கிணறுகளைக் கொண்ட கடல் என்பது ஐதீகம்.

விஜய நகரத்துப் பேரரரசான கிருஷ்ண தேவ ராயர் செலவில் இதை 1516இல் சாதவ நரச நாயக நரசய்யா புதுப்பித்தார். அதன் பிறகு இது புதுப் பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இப்பகுதியும் இதன் தென்மேற்குமூலையில் உள்ள காஞ்சனமாலை கோயிலும் புதுப்பிக்கப்பட உள்ளன.

காஞ்சன மாலை. மலயத்துவஜ பாண்டியனின் மனைவி, மீனாட்சி அம்மனின் தாயார்.

ஏழு கடல் தெப்பக்குளத்தின் நீளம் 160 அடி' அகலம் 145 அடி, பரப்பளவு 55செண்டு.

வைகை ஆறு, தனிச்சிறப்புடைய தீர்த்தம் ஆகும். எல்லா ஆறுகளும் கடலில் விழ, வைகை அவ்வாறு கடலில் கலப்பதில்லை; கடல் மன்னன் சிவபெருமானுக்கு நஞ்சினைக் கொடுத்ததால் வைகை ஆறு கடலில் சங்கமமாக மறுத்து இராமநாதபுரம் கண்மாயில் விழுகிறது.

"நாரியிடப் பாகருக்கு நஞ்சளித்த வாவியென்று
வாரியிடம் போகாத வைகையே — பாரில்
இடத்தும் வலத்தும் இருப்பாற் சுழித்து
நடத்தும் தமிழ்ப்பாண்டி நாடு"

(ஆ) தல புராணங்கள்

1. செல்லிநகரப் பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.
2. இலம்பூர் வீமந்த பண்டிதர் படைத்த கடம்பவனப் புராணம்
3. பரஞ்சோதியார் இயற்றிய திருவிளையாடல் புராணம்.
4. அட்டமிமர தட்சிண மாண்மியம்.
5. சுந்தர பாண்டியம்.

(இ) சமூகப் பணிகள்

கல்லுப்பட்டி சாந்திநிகேதனத்தில் கல்வி பயிலும் ஏழைச் சிறுவர் 86 பேருக்கு உணவு உறையுள் முதலிய அனைத்துச் செலவுகளையும் 1953 முதல் இத்திருக்கோயில் ஏற்று வருகிறது. இந்த வகையில் நடப்பு ஆண்டில் இத்திருக்கோயிலின் நன்கொடை ரூபாய் 1,37,500 ஆகும்.

இத்திருக்கோயில் நிதியிலிருந்து திருவாரூரில் ஓர் அன்பு இல்லம் நடத்தப்பட்டு வருகிறது.

வண்டியூரில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் மகளிர் மேல்நிலைப் பள்ளி இத்திருக்கோயிலால் தொடங்கப்பட்டு இனிது இயங்கி வருகிறது. சமய நூலகம் ஒன்று திருக்கோயிலில் தெற்கு ஆடி வீதியில் உள்ளது.

அம்பிகையின் பல்வகையான தோற்றங்கள்

திருவனந்தல்	—மகாஷோடசி
விளாபூஜை	—பாலா
காலசந்தி	—புவனா
த்ரிகால சந்தி	—கௌரி
உச்சிக்காலம்	—சியாமளா
சாயரக்ஷை	—மாதங்கி
அர்த்தயாமம்	—மஞ்சதசீ

யோகாங்கம் அல்லது பள்ளியறை தீபாராதனை: ஷோடஸ்.

ஃ ஃ ஃ

10. சுற்றுக் கோயில்கள்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் ஆட்சியில் இருந்த திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் நிர்வாகம் 1983 முதல் தனியே இயங்கி வருகிறது.

இப்போது மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில் ஆட்சியில் 18 சிறு கோயில்கள் இருந்து வருகின்றன.

இவற்றில் குறிப்பிடத்தக்க சில கோயில்களைப் பற்றிக் கூறுவோம்.

பழைய சொக்கநாதர் கோயில் :

இது வடக்கு வெளி வீதியும் தளவாய் அக்கிரகாரமும் சந்திக்கும் இடத்தில் உள்ளது. கோயிலின் பெயரே இதன் பழமையை உணர்த்தும்.

ஏழை எளிய மக்களும் மதுரையின் சுற்றுப்புறத்திலிருந்து மதுரைக்கு ஏதாவது ஒரு வேலையாக வந்து உடனே திரும்புபவர்களும் இக்கோயிலுக்கு மிகுதியாக வருகின்றனர். அர்ச்சனைக் கட்டணம் 25 காசுதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இடைக்காடருடைய பிணக்கைத் தீர்க்கும் பொருட்டு, இறைவன் எழுந்தருளிய இடம் இது. வட திருவாலவாயுடையார் கோயில் என்ற பெயரும் இக் கோயிலுக்கு உண்டு.

செல்லத்தம்மன் கோயில் :

சிம்மக்கல்லுக்குச் சற்று தெற்கே உள்ளது.

இங்குள்ள அம்மன், ஒற்றைச் சிலம்பைக் கையில் ஏந்தியிருப்பதால், இது கண்ணகி கோயில் என்று ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர்.

திருவாப்புடையார் கோயில் :

வைகையின் வடகரையில் மதுரை நகரத்துக்குச் செல்லூர்ப் பகுதியில் உள்ள கோயில். திரு ஆப்பனூர் என்பதே தேவாரப் பெயர். இது பாண்டி பதினான்கு தலங்களுள் ஒன்று.

''கூடல் புனவாயில் குற்றாலம் ஆப்பனூர்
ஏடகநெல் வேலி யிராமேசம்—ஆடானை
தென்பரங்குன் றஞ்சுழியல் தென்திருப்புத் தூர்கானை
வன்கொடுங்கன் றம்பூ வணம்''

சம்பந்தர் பாடல் பெற்றது.

இறைவன்—திரு ஆப்புடையார்
இறைவி—குரவம் கமழ் குழலம்மை

இந்த இறைவிக்கு அணிந்து எடுக்கப்பெற்ற பூமாலை மணம் கமழ்ந்ததாக இருக்கும்.

சோழாந்தகன் என்ற பாண்டியன் மீனாட்சி கோயிலில் வழிபட வந்துகொண்டிருந்தான். வைகையில் திடீர் வெள்ளம் ஏற்பட்டதால், கோயிலுக்கு வர

இயலாமற் போயிற்று. மன்னன் அந்த இடத்திலேயே ஆப்பு ஒன்றை நிறுத்தி வழிபட அது சிவலிங்கமாகி உருவெடுத்தது என்று புராணம் கூறும்.

திருவாதவூர்:

ஒத்தைக்கடை வழியாக மதுரையிலிருந்து 25 கி.மீ. தொலைவிலுள்ள ஊர். படிக்கப் படிக்கத் தித்தித்து, மனத்தை உருக்கும் திருவாசகத்தை இயற்றியவரும் பாண்டிய அரசின் அமைச்சராக இருந்தவருமான மாணிக்கவாசகர் பிறந்தபதி. அவர் பிறந்த வீடு ஒரு கோயிலாக உள்ளது.

இவ்வூர் வாதபுரீசுவரர் கோயில் தொன்மையும் தோற்றப் பொலிவும் நுட்பமான கொடுங்கை வேலைப்பாடுகளும் உடையது.

இறைவன் — திருமறைநாதர்
இறைவி —ஆகணவல்லி
நடராசர்க்குத் தனிச் சந்நிதி உண்டு.

வண்டியூர் மாரியம்மன் கோயில்!

திருமலை நாயக்கர் வெட்டிய தெப்பக்குளத்தின் நடுவே வெள்ளைச் சலவைக்கல்லில் இந்தக் கோயில் மிக அழகாகக் கட்டப்பட்டுள்ளது.

பொதுவாக வெள்ளிக் கிழமைகளிலும் சிறப்பாக ஆடி மாதத்துச் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் பெண்கள் பெருங்கூட்டமாக வந்து, மாரியம்மனை வழிபடுகின்றனர்.

இக்கோயிலுக்குள் நிகழ்த்தப்பெறும் இசை நிகழ்ச்சிகள் ஒலிபெருக்கியின்றி, இனிமையாக

தெப்பக்குளத்தின் நான்கு கரைகளிலும் இருந்து கேட்க வசதியான ஒலி அமைப்புடன் இக்கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு தைப்பூசத்தன்று நடைபெறும் தெப்பத் திருவிழாவைப்பற்றி ஏற்கெனவே கூறியிருக்கிறோம்.

தென்திருவாலவாயுடையார் கோயில்:

தெற்கு மாசி வீதியில் சிடி சினிமாவுக்கு எதிரிலுள்ளது. எமதர்மன், சிவபெருமானை இங்கு வழிபட்டதாகக் கூறுவர்.

தெப்பத் திருவிழாவின் மூன்றாம் நாளில் ஒரு பகல் முழுவதும் மீனாட்சி அம்மனும் ஆலவாய் அண்ணலும் இங்கு தங்குகின்றனர்.

முடிவுரை:

பெருமைமிக்க மாநகர், மதுரை. அதனைச் சூழ்ந்துள்ள சில கோயில்களைக் கண்டோம்.

புகழ்நிறைந்த இந்தக் கோயில்களுக்கு நடுநாயகமாகத் திகழ்வது, மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், தொன்மையும் புகழும் உடைய இக்கோயிலில் பாண்டிநாட்டின் இதயமாக இருந்து இயங்கும் அன்னை அங்கயற்கண்ணி, பாண்டியர் குலக்கொடி, மதுரை மாநகரை ஆளும் தெய்வம்.

11. முடிவுரை

உலகெங்கும் மீனாட்சி மயம்

மீனாட்சி அம்மன் கோயில் பாண்டிய அரசர்க்குரிய வழிபடு கோயிலாகும். பாண்டியநாடு முழுவதும் நூற்றுக்கணக்கான மீனாட்சி அம்மன் கோயில்கள் இருக்கின்றன.

பாண்டி நாட்டுக்கு அப்பால் தமிழ்நாடெங்கும் உள்ள பெரிய கோயில்களில் மீனாட்சி அம்மனுக்குத் தனிச் சந்நிதி கட்டப்பெற்றிருக்கிறது.

அமெரிக்க நாட்டில் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள ஹூஸ்டன் நகரில் 1982-ல் கட்டி முடிக்கப் பெற்ற மீனாட்சி கோயிலில், மதுரைக் கோயிலின் மரபுகளே பின்பற்றப்படுகின்றன.

வட அமெரிக்க நாடான மெக்சிகோவில் திக்கல் என்னும் நகரில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிற்பாணியில் ஒரு கோயில் உள்ளது. தென் அமெரிக்காவில் சில பகுதிகளிலும் இந்தக் கட்டடக் கலை பாணியும் திருஉருவங்களும் காணப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் எழுதியிருக்கின்றனர்.

ஆசியாவில் கம்போடியா நாட்டிலுள்ள அங்கோர் வாட் கோயில் முழுக்க முழுக்க மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அமைப்பைப் பின்பற்றிக் கட்டிய தாகும். இந்தோனேசியாவில் மதுரை என்னும் பெயரில் ஒரு தீவும் கோயிலும் இருப்பதும் குறிப் பிடத்தக்கது.

மதுரையின் மாட்சி

மதுரைக் கோயில் பெரிது. கோபுரங்கள் பெரியவை. மண்டபங்களும் தனித்தன்மை பெற்றவை. இந்தக் கோயிலின் வரலாறும் பெரிது. இங்கு விளக்கப்படும் தத்துவங்களும் உயர்ந்தவை.

எத்தனையோ முறை இங்கு வணங்கி வழிபடும் பேறு எனக்குக் கிடைத்திருக்கிறது.

அழகு கலை, பொலிவு ஆகிய எல்லாம் நம்மை இறைவன் திறமும் இறைவியின் திறமும் அறியச் செய்வதற்கே அமைந்தன.

பெருஞ்சிறப்பும் பேரழகும் மிகுந்த ஆலயம் உலகத்து மக்களையெல்லாம் ஈர்க்கின்றது.

பிரெஞ்சு நாட்டுக்காக இந்தியாவில் தூதராக இருந்த ஒருவர் கோயில் குறிப்பேட்டில் இவ்வாறு வரைந்துள்ளார்.

> என் வாழ்நாளில் பல்லாண்டுகளாகக் கொண் டிருந்த பேரவா இன்று நிறைவேறியது. பல்லா யிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த இந்து மத நம்பிக்கை,எண்ணம், கலை, பண்பாடு இவற்றின் உயிர்த் துடிப்பையும் உள்ளத்தையும் மதுரைக்

கோயிலிற் காண்கிறேன். இத்தகைய சிறப்புடைய கோயிலைக் காணாத கண்ணும் நினைக்காத நெஞ்சும் பயனிலவாகும்.

மகாத்மாவின் கனவு:

நம் நாட்டின் தந்தை மகாத்மா காந்தி பலமுறை மதுரைக்கு வந்தும், இக்கோயிலுள் தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளே விடப்படாததால் கோயிலுக்குள் வரவில்லை. 1937-ல் இக்கோயிலுக்குள் அனைவரும் அழைத்து வரப்பட்டனர். அதைத் தொடர்ந்து அடுத்தமுறை மதுரைக்கு வருகைபுரிந்த காந்திமகான் இக்கோயிலுக்கு வந்து வழிபட்டார்.

''என்னுடைய நெடுநாட்கனவு நிறைவேறியதில் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று அண்ணல் அப்போது உள்ளப் குளிர உவகையுடன் கூறினார்.

இன்றும் உலகப் புகழ் பெற்ற பெருமக்கள் இந்தியாவுக்கு வரும்போது இக்கோயிலைக் காணத் தவறுவதில்லை.

அருள் நிறைந்த நகர்

பல வளனும் பயனும் நிறைந்து விளங்கும் தென்னகரமான மாமதுரைக்கு அருள் அளிப்பவர்கள் அன்னை மீனாட்சியும் சொக்கரும்தான். அழகுள்ள நகரங்கள் இப்புவியில் பல உண்டு. ஆனால் அருள் உள்ள நகரங்கள் மிகச்சிலவே. வரலாறு, பக்தி, இலக்கியம் முதலிய எந்தக் கோணத்தில் பார்த்தாலும் மதுரைக்குப் பெருமை மிகுதியாக இருப்பதைப் பார்க்கலாம்.

வேண்டுகோள்

மதுரைக்கோயிலின் அறங்காவலர்கள், கோயிலின் பழமையை, அழகை, சிறப்புக்களைப் பேணுவதிலும் வழிபட வருபவர்களுக்கு வசதிகளை மேன்மேலும் மிகுதியாக்குவதிலுமே கண்ணுங்கருத்துமாக இருந்து வந்திருக்கின்றனர். இன்றைய நிலையும் இதுவே.

சில ஆண்டுகளுக்குமுன், திருக்கோயில் நந்த வனத்தை அழித்து கடைகள் கட்டி மாதந்தோறும் சில லட்சம் ரூபாய் வாடகை பெறலாம் என்று யோசனை கூறப்பட்டது. அவ்வாறு செய்திருந்தால் கோயிலின் அழகு பாழ்பட்டிருக்கும். சித்திரை வீதி களில் ஊர்திகளே நிறுத்தமுடியாத சூழலும் உருவாகி யிருக்கும். இதனை நன்குணர்ந்த இத்திருக்கோயிலார் வருவாயைத் துச்சமென்று கருதி, கடை கட்டும் யோசனையை எதிர்த்தனர். அந்த இழப்பை காணிக்கை மூலம் மக்கள் ஈடுசெய்வார்கள் என்பது எங்களி நம்பிக்கை.

வணக்கம்

புகழ்மிக்க இந்த ஆலயத்தைக் காத்துப் பாது காப்பதே கலைக்கும் சமயத்திற்கும் தமிழர்க்கும் இந்தியப் பெருநாட்டுக்கும் ஆற்றும் நற்பணியாகும். இப்பணியில் அக்கறை காட்டும் அனைவரையும் வாழ்த்தி வணங்குவேன் எப்போதும்.

12. மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் 108 போற்றி

ஓம்	அங்கயற்கண்	அம்மையே	போற்றி
,,	அகிலாண்ட	நாயகியே	,,
,,	அருமறையின்	வரம்பே	,,
,,	அறம்வளர்க்கும்	அம்மையே	,,
,,	அரசிளங்	குமரியே	,,
,,	அப்பர்	பிணிமருந்தே	,,
,,	அமுத	நாயகியே	,,
,,	அருந்தவ	நாயகியே	,,
,,	அருள்நிறை	அம்மையே	,,
,,	ஆலவாய்க்	கரசியே	,,
,,	ஆறுமுகத்தின்	அன்னையே	,,

ஓம்	ஆதியின்	பாதியே	போற்றி
,,	ஆலால	சுந்தரியே	,,
,,	ஆநந்த	வல்லியே	,,
,,	இளவஞ்சிக்	கொடியே	,,
,,	இமயத்	தரசியே	,,
,,	இடபத்தோன்	துணையே	,,
,	ஈசு	வரியே	,,
,,	உயிர்	ஓவியமே	,,
,,	உலகம்	மையே	,,
,,	ஊழ்வினை	தீர்ப்பாய்	,,
,,	எண்திசையும்	வென்றோய்	,,
,,	ஏகன்	துணையே	,,
,,	ஐங்கரன்	அன்னையே	,,
,,	ஐயந்	தீர்ப்பாய்	,,
,,	ஒப்பிலா	அமுதே	,,
,,	ஓங்கார	சுந்தரியே	,,
,,	கற்றோர்க்	கினியோய்	,,
,,	கல்லார்க்கும்	எளியோய்	,,
,,	கடம்பவன	சுந்தரியே	,,
,,	கலியாண	சுந்தரியே	,,
,,	கனகமணிக்	குன்றே	,,
,,	கற்பின்	அரசியே	,,
,,	கருணை	யூற்றே	,,
,,	கல்விக்கு	வித்தே	,,
,,	கனகாம்	பிகையே	,,

ஓம்	கதிரொளிச்	சுடரே	போற்றி
,,	கற்பனைகடந்த	கற்பகமே	,,
,,	காட்சிக்	கினியோய்	,,
,,	காலம்வென்ற	கற்பகமே	,,
,,	கிளியேந்திய	கரத்தோய்	,,
,,	குலச்சிறை	காத்தோய்	,,
,,	குற்றம்பொறுக்கும்குணமே		,,
,,	கூடற்கலாப	மயிலே	,,
,,	கோலப்	பசுங்கிளியே	,,
,,	சம்பந்தன்	ஞானத்தாயே	,,
,,	சக்தி	வடிவே	,,
,,	சங்கம்	வளர்த்தாய்	,,
,,	சிவகாம	சுந்தரியே	,,
,,	சித்தந்	தெளிவிப்பாய்	,,
,,	சிவயோக	நாயகியே	,,
,,	சிவானந்த	வல்லியே	,,
,,	சிங்கார	வல்லியே	,,
,,	செந்தமிழ்த்	தாயே	,,
,,	செல்வத்துக்	கரசியே	,,
,,	சேனைத்	தலைவியே	,,
,,	சொக்கர்	நாயகியே	,,
,,	சைவநெறிநிலைக்கச்செய்தாய்		,,
,,	ஞானாம்	பிகையே	,,
,,	ஞானப்	பூங்கோதையே	,,

ஓம்	தமிழர்க்குலச்	சுடரே	போற்றி
,,	தண்டமிழ்த்	தாயே	,,
,,	திருவிடை	யம்மையே	,,
,,	திரிபுர	சுந்தரியே	,,
,,	திருநிலை	நாயகியே	,,
,,	தீந்தமிழ்ச்	சுவையே	,,
,,	தெவிட்டாத	தெள்ளமுதே	,,
,,	தென்னவன்	செல்வியே	,,
,,	தேன்மொழி	யம்மையே	,,
,,	தையல்	நாயகியே	,,
,,	நற்கனியின்	சுவையே	,,
,,	நற்றவத்தின்	கொழுந்தே	,,
,,	நல்ல	நாயகியே	,,
,,	நீலாம்	பிகையே	,,
,,	நீதிக்	கரசியே	,,
,,	பக்தர்தம்	திலகமே	,,
,,	பழமறையின்	குருந்தே	,,
,,	பரமானந்தப்	பெருக்கே	,,
,,	பண்ணமைந்த	சொல்லே	,,
,,	பவளவாய்க்	கிளியே	,,
,,	பல்லுயிரின்	தாயே	,,
,,	பசுபதி	நாயகியே	,,
,,	பாகம்பிரியா	அம்மையே	,,
,,	பாண்டிமா	தேவி	,,

ஓம்	பார்வதி	அம்மையே	போற்றி
,,	பிறவிப்பிணி	தீர்ப்பாய்	,,
,,	பெரிய	நாயகியே	,,
,,	பொன்மயி	லம்மையே	,,
,,	பொற்கொடி	அன்னையே	,,
,,	மலையத்துவசன்	மகளே	,,
,,	மங்கல	நாயகியே	,,
,,	மழலைக்	கிளியே	,,
,,	மனோன்மணித்	தாயே	,,
,,	மண்சுமந்தோன்	மாணிக்கமே	,,
,,	மாயோன்	தங்கையே	,,
,,	மாணிக்க	வல்லியே	,,
,,	மீனவர்கோன்	மகளே	,,
,,	மீனாட்சி	யம்மையே	,,
,,	முழுஞானப்	பெருக்கே	,,
,,	முக்கண்சுடர்	விருந்தே	,,
,,	யாழ்மொழி	யம்மையே	,,
,,	வடிவழ	கம்மையே	,,
,,	வேலனுக்கு	வேல்தந்தாய்	,,

ஓம் வேத நாயகியே போற்றி
,, வையகம் வாழ்விப்பாய் ,,
அம்மையே அம்பிகையே போற்றி போற்றி
அங்கயற்கண் அம்மையே போற்றி போற்றி

செய்யுமிவ் அருச்சனை சேர்ந்த துதியே
அம்மையே ஏற்று அருள்க அருள்கவே
சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று
வாழ்க பல்லாண்டு வாழ்க அருள்கவே

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் "அம்பிகை அழகு தரிசனம்" என்ற நூலில் மதுரை மீனாட்சி அம்மனைப் பற்றிப் பாடிய மணியான பாடல்கள்

மதுரையம் பதியில் சொக்கனைக் கலந்து
　　மயங்கியே கோவில்கொண் டமர்ந்தாள்
புதுமயல் விழியில் பொங்கிடும் சிவப்பு
　　புகழ்வரி தன்னையும் அடைந்தாள்
பதுமநேர் மேனி துவண்டிடும் வண்ணம்
　　பலமுறை இல்லறம் கனிந்தாள்
நதியிலே வைகை சதியிலே மீனாள்
　　நல்லறச் சக்திகண் டோமே!!

மாமறை கேட்டும் மந்திரம் படித்தும்
　　மங்கலம் பொங்கநின் றாளே
தாமரைப் பொய்கை தங்கநேர் மேனி
　　தளிர்விடும் அன்புமீ னாளே
காமனும் அஞ்சக் கலக்கும்மின் நகையாள்
　　கற்பினுக் கொருகுல மகளே
பூமகள் பாதி மலைமகள் பாதி
　　பொலிந்திடும் சக்தி கண் டோமே !

மைசிந்து கண்ணி மங்கலச் செல்வி
மாணிக்க மூக்குத்தி வஞ்சி
கைவழிச் சொக்கன் கண்டதோர் சொர்க்கம்
காணவே மேகங்கள் அஞ்சி
பொய்கையும் ஆறும் பொலிகின்ற தெற்குப்
பொதிகையில் ஒளிர்ந்ததாம் ஆங்கே
வைகையின் மீனாள் மழைக்குழல் தேனாள்
மதுரைமா சக்திகண் டோமே!

அந்தியிற் பாதி சந்தியிற் பாதி
அர்த்தசா மத்திலே மீதி
செந்திருப் போலும் அங்கயற் கண்ணி
செய்கின்ற வித்தைகள் கோடி
சுந்தரன் தோளில் துவள்கின்ற தேவி
தூயமா மணிமலர்த் தேனே!
சிந்தையில் நின்று செயலிலே வந்து
திகழ்ந்திடும் சக்திகண் டோமே!

கட்டுமண் சுமந்து பிட்டுண்ட தாலே
கணவனைக் கேலிசெய் தாளோ
கொட்டுமே ஊங்கள் கூவிடத் தனியே
கோதையாள் கோவில்கொண் டாளோ
பட்டுமா மேனிப் பாவையை விட்டுப்
பரமனும் ஏங்குகின் றானே
இட்டதோர் வெய்யிற் சித்திரை நாளில்
இல்லற சக்திகண் டோமே!

போர்ப்படை கூட்டிப் போனவள் தானே
பொங்கிடும் மதுரைமீ னாட்சி
ஆர்ப்பரித் தாளைப் பொன்மணம் செய்து
அடைந்ததே சொக்கனின் ஆட்சி
ஊர்ப்புறம் நின்று கோவில்கொண் டாரை
உலகெலாம் வியந்ததே இந்நாள்
நாற்புறம் காணும் கோவிலின் வாசல்
நல்லறச் சக்திகண் டோமே !

செங்கனி இதழைச் சுந்தரர்க் காக்கிச்
செவ்வரிக் கண்கள்கொண் டாளோ
கொங்கைகள் குழைய வைகைநீ ராடி
கூந்தலைத் துவட்டிநின் றாளோ
அங்கயற் கண்ணி புதுநகை சூட்டி
அரங்கினில் வந்துநின் றாளோ
மங்கலச் செல்வி கோவிலில் நிற்கும்
மந்திரச் சக்திகண் டோமே !

ஊடலில் தோற்ற மாணிக்க வல்லி
உறவினில் வெற்றிகொண் டாளோ
கூடலில் கண்ட சுகத்தினால் கண்கள்
குனிப்புற வந்துநின் றாளோ
கூடலில் அந்நாள் வென்றதி னாலே
கூடலே மதுரைஎன் றாரோ
காடெலாம் சிலிர்க்கக் கனகமா மேனிக்
காரிகை சக்திகண் டோமே !

பொன்னிற மஞ்சள் புடைவையில் மீனாள்
பூரண நிலவென ஆனாள்
மன்னிய சுகத்தில் ஊறிய தாலே
மண்டிய கூட்டமும் கானாள்.
அன்னியர் தமதெனப் பேதமில் லாது
அழகினைக் காட்டிநின் றாளே
அன்னையு மாகிக் கன்னியும் ஆனாள்
ஆயிரம் சக்திகண் டோமே !

காலொடும் கால்கள் கவிந்தொரு மித்து
கலவியிற் சொக்கனைக் கலந்து
பால்கொடுத் தணைக்கப் பிள்ளைஇல் லாமல்
பாடிடும் பிள்ளையை அணைத்தாள்
சூல்படா திருக்கும் தோகையள் அதனால்
துலங்கிடும் இளமைகொண் டாளே
மாலவன் தங்கை நிரந்தரப் பருவம்
மாயமா சக்திகண் டோமே!

வேண்டல்


—வேறு—


கருவிலே திருவுடைய நல்லறிவா ளர்தமது
கனிவான நட்பு வேண்டும்
காசுபண ஆசைகளில் வேசையரைப் போலாடிக்
கறவாத புத்தி வேண்டும்
அருளுடைய பெரியவர்கள் ஆசிவேண்டும் நெஞ்சில்
அகலாத அன்பு வேண்டும்
ஆதரவில் லாதவரில் நல்லவரைப் பார்த்துநான்
ஆதார மாக வேண்டும்
மருளுடைய மான்போலும் மங்கைஒரு தேவிஎன்
மனையாட்டி யாக வேண்டும்
மானமென்னும் ஒன்றிலே மாறாத குறிவைத்து
வாழ்க்கையைக் காக்க வேண்டும்
இருளகல ஒளிவீசும் இறைவனது தேவியே
இவைசேர வேண்டும எனையே
இனியதொரு மதுரைநகர் அரசுவீற் றிருக்கின்ற
இளையமீ னாட்சி உமையே !

ஆழ்கடலில் போட்டாலும் அக்கினியி லிட்டாலும்
அழியாத மேனி வேண்டும்
அடுநோய்கள் பலகூடி உடல்மீது தொடுத்தாலும்
அலறாத நெஞ்சம் வேண்டும்
ஊழ்வினைகள் ஒன்றாகி உயிர்வாதை செய்தாலும்
ஒளிசிந்தும் இதழ்கள் வேண்டும்
உச்சத்தில் நின்றபடி கீழே விழுந்தாலும்
உலையாத திறமை வேண்டும்
பாழ்வழியி லேதூங்கிப் பசியோ டிருந்தாலும்
பக்தியில் உறுதி வேண்டும்
பயமாகத் தோன்றுவதை நயமாக மாற்றுகிற
பலமான அறிவு வேண்டும்
சூழ்வதெலாம் நீஎன்ற துணிவுதா தேவியே
சொக்கனின் அன்பு மனையே
தொல்மதுரை நகருக்குப் பல்லாண்டு பாடிடும்
தூயமீ னாட்சி உமையே!

முன்னாளில் சென்றதைப் பின்னாளில் நினைக்கின்ற
　　மூடமை தீர்க்க வருவாய்
மூதறிஞர் சொல்கேட்டும் பேதைமை மாறாத
　　முறைகேடு நீக்க வருவாய்
பொன்னான காலத்தைப் பாழ்செய்து தூங்காமல்
　　புகழ்மாலை சூட்ட வருவாய்
பொய்யர்கள் நடுவிலும் நல்லதே நினைக்கின்ற
　　புத்தியைக் கொண்டு வருவாய்
மன்னாதி மன்னரும் மண்டியிட் டேஎன்னை
　　வணங்கிடும் பெருமை யருள்வாய்
மலைமீது நின்றாலும் அவமான ஆணவம்
　　மண்டாமல் காக்க வருவாய்
தென்னாடும் வடநாடும் ஒருங்கே பணிகின்ற
　　செல்வமலை ராஜன் மகளே
திருமதுரை நகராளும் தருமதுரை ராணியே
　　தெய்வமீ னாட்சி உமையே !

ஆடுகிற பம்பரம் ஆடல் நிறுத்தாமல்
ஆடுவதும் உன்செய் கையே
அஞ்சுகிற நெஞ்சமும் ஆர்ப்பரித் தேநின்று
அரசோச்சல் உன்செய் கையே
பாடுகிற பாவலன் பல்லாயிரம பாடல்
பாடுவதும் உன்செய் கையே
பல்லக்கில் ஏறுவதும் செல்வாக்கு மீறுவதும்
பரமாத்ம நின்செய் கையே
கூடுகிற கூட்டத்தில் மாலைமரி யாதைகள்
கூடுவதும் உன்செய் கையே
குற்றங் களைநீக்கிச் சுற்றங்கள் ஒன்றாகிக்
கொஞ்சுவதும் உன்செய் கையே
கோடுநதி மாகடலில் கொளகைகளைக் காட்டிடும்
கோமகனின் அன்பு மயிலே
கொற்றவர்கள் ஆண்டதிருக் கூடல்நகர் ராணியே
கோதைமீ னாட்சி உமையே !





திரு. வி. என். சிதம்பரம் அவர்கள்
செங்கோல் ஏந்தும் காட்சி